Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா ,10 .00

தினப்பதிப்பு
# தினமுரசு
THINAMURASU

அற்புதன் அச்சகம்
அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811
373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 திருவள்ளுவர் ஆண்டு 2046 தை 19 திங்கட்கிழமை (02.02.2015) பக்கங்கள் 20 ஓசை – 125

## புலிகளுடன் முன்னைய அரசின் தொடர்புகள் குறித்து விசாரணை

### பிரதமர் ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், முன்னைய அரசாங்கத்திற் குமிடையிலான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாவனல்லை பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

விடுதலைப் புலிகளின் பணம மற்றும் கடந்த அரசாங் கத்துடனான தொடர்புகள் குறித்து விசாரணை நடத்தப்படவுள்ளது.

விடுதலைப் புலிகளின் பணத்திற்கு என்னவாயிற்று என்பதனை அறிந்து கொள்ள நாம் விரும்புகிறோம்.

ஐக்கிய தேசியக் கட்சி புலிக

19 ஆம் பக்கம் பார்க்க...

## ஈ.பி.டி.பி.யின் எதிர்காலத் திட்டங்கள் யாழில் விசேட கலந்துரையாடல்



ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயற்திட்டங்களை எதிர்காலத்தில் மேலும் வலுப் படுத்தும் வகையில் முன்னெடுக்கப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் தொடர்பான கலந் துரையாடல் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைமைக்காரியால

19 ஆம் பக்கம் பார்க்க...

## புலம்பெயர் தமிழ் அமைப்புகளின்

# தடையை நீக்கும் உத்தேசம் இல்லை



### புதிய அரசு அறிவிப்பு

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தினால் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள தடை தொடருமென அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவை என்று குற்றம்சாட்டி தடை செய்யப்பட்ட புலம் பெயர் அமைப்புகளின் மீதான தடை தொடருமென பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தெரிவித்துள்ளார்.

தடையை நீக்குவது குறித்து புதிய அரசாங்கம் எந்த கலந்துரையாடலை நடத்தவோ, ஆலோசிக்கவோ இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வரும் இலங்கையர் அனைவரும் நாடு திரும்பலாம் என வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் ஊடக அமைச்சர் கயந்த கருணாதிலக ஆகியோர் தெரிவித்திருந்த நிலையில், புலம்பெயர் தமிழர் அமைப்புக்களின் தடை முன்னரைப் போன்றே தொடருமென பிரதி வெளிவிவகார அமைச்சர் அஜித் பெரேரா தற்போது தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலை அமெரிக்க உதவியை நாடும் கூட்டமைப்பு

சிறைகளில் காரணமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளின் விடுதலைக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அமெரிக்காவின் உதவியை நாடவுள்ளது.

இரண்டு நாள் பயணமாக இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ள தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

தெற்கு மத்திய ஆசியாவுக்கான பிரதி இராஜாங்கச் செயலர் அதுல் கெசாப்புடன், இன்று கொழும்பு வரும் நிஷா பிஸ்வால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர ஆகியோ

19 ஆம் பக்கம் பார்க்க...

## கடமைகளை இன்று பொறுப்பேற்கிறார் ஆளுநர்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்ட பாலிஹக்கார இன்று அதிகார பூர்வமாக தமது பணியகத்தில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளாரெனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனையும், ஆளுநர் பாலிஹக்கார சந்தித்து, அரசாங்கத்திற்கும, வடக்கு மாகாண சபைக்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்தி ஒத்துழைத்துச் செயற்படுவது குறித்து விரிவான பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

அதேவேளை, வடக்கு மாகாண ஆளுநர் பாலிஹக்கார நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்துக்குப்

19 ஆம் பக்கம் பார்க்க...

## உள்நாட்டு விசாரணைப் பொறிமுறை சர்வதேச தரத்தில் அமைய வேண்டும்

### அரசை வலியுறுத்தும் ஐ.நா. செயலர்

போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள இலங்கை அரசாங்கம் உருவாக்கவுள்ள உள்நாட்டு பொறுப்புக்கூறும் பொறிமுறை, சர்வதேச தரம் வாய்ந்ததாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் இருக்க வேண்டுமென ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் வலியுறுத்தியுள்ளார்.

ஐ.நா. பொதுச்செயலரின் பேச்சாளர் பணியகத்தைச் சேர்ந்த எரி கனேகோ இது குறித்து தகவல் வெளியிடுகையில்,

இலங்கையில் போருக்குப் பின்னர் சமாதானம் மற்றும் நல்லிணக்க விடயங்களில் முன்

19 ஆம் பக்கம் பார்க்க...

## அமைச்சர் பதவியிலிருந்து விலகினார் பைசர் முஸ்தபா



விமான சேவைகள் இராஜாங்க அமைச்சர் பைசர் முஸ்தபா நேற்று மாலை தனது பத வியை இராஜினாமா செய்வதற்கான கடிதத்தை சமர்ப்பித்து விட்டு வெளிநாடு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


விமான சேவைகள் அமைச்சின் கீழ் வர வேண்டிய சில விடயங்களை அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவின் தலைமையில் இயங்கும் துறைமுக மற்றும் கப்பல் துறை அமைச்சின் கீழ் இணைத்து வர்த்தமானியில் உள்ளடக்கியுள்ளமையே இதற்கு காரணம் என் தகவல் வெளியாகியுள்ளது.

அதேவேளை அமைச்சருக்கான வர்த்தமானியில் மத்தல விமான நிலையம் மாத்திரம் உள்ளடக்கி

19 ஆம் பக்கம் பார்க்க...



# அந்தோனியார் திருவுருவச்சிலை வவுனியாவில் திறப்பு



திருத்தந்தை பிரான்சிஸின் இலங்கைக்கான அப்போஸ்தலிக்க பிரதிநிதி பேராயர் பியரே நியு ஜென்வன் ரொட், நேற்று வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட அந்தோனியார் திருவுருவச்சிலையை திறந்து வைத்தார். வவுனியாவுக்கு நேற்று மாலை விஜயம் செய்த பேராயருக்கு இறம்பைக்குளம் அந்தோனியார் ஆலயத்துக்கு அண்மையில் வைத்து வரவேற்பளிக்கப்பட்டதுடன் அருட்தந்தையர்கள் அருட்சகோதரிகள் மற்றும் பொதுமக்கள் சூழ ஆலயத்துக்கு அழைத்து வரப்பட்டார்.

கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் முயற்சியால் அமைக்கப்பட்ட அந்தோனியார் திருவுருவத்தை திறந்து வைத்து விசேட ஆராதனைகளை மேற்கொண்ட பேராயர், அந்தோனியார் ஆலயத்தில் விசேட திருப்பலியும் ஒப்புக்கொடுத்தார். இந்நிகழ்வில், மன்னார் ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை, அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

# அனிஞ்சியன் குளம் பகுதியில் பாற்பண்ணை அமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய் அனிஞ்சியன் குளம் பகுதியில் மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் 30 மில்லியன் ரூபாய் செலவில் பாற்பண்ணை அமைக்கப்பட்டுள்ளதாக வடமாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளர் எஸ்.வசீகரன், தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வடமாகாணத்தில் அமைந்துள்ள முதலாவது பாற்பண்ணை இதுவாகும். இங்கு முதற்கட்டமாக பிற மாவட்டங்களில் இருந்து 25 நல்லின பசுக்களை கொண்டு வந்து அவற்றின் கன்றுகளை பண்ணையாளர்களுக்கு விநியோகிக்கும் திட்டத்தை மேற்கொண்டு வருகின்றோம்.

அவற்றில் இருந்து பெறப்படும் பாலை துணுக்காய் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தில் உள்ள பால் பதனிடும் சங்கத்திற்கு கொடுத்து வருகின்றோம்.

இந்த வருடம் இந்த பால் பாற்பண்ணையில் பால் பதனிடும் திணைக்களம் அமைப்பதோடு பால் உற்பத்திப் பொருட்களை தயாரித்து விநியோகிக்கவுள்ளோம். அத்துடன் இங்கு பண்ணையாளர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் வழங்குவதற்கும் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

## DDTV யின் இன்றைய நிகழ்ச்சிகள்

| நேரம் | திங்கட்கிழமை |
|---|---|
| AM 05.00 | ஆலய தரிசனம் (பக்தி பாடல்கள்) |
| AM 07.00 | காலை கதிர் |
| AM 08.00 | நாளிதழ் நேரம் |
| AM 09.00 | SMS Time (Live) |
| AM 09.58 | காலை செய்தி |
| AM 10.00 | HELLO DD |
| AM 10.30 | புதுயுகம் |
| AM 11.00 | சிரிக்க சிரிக்க |
| AM 11.30 | சிரிக்க சிரிக்க |
| PM 12.00 | வரலாற்று நாயகர்கள் |
| PM 12.30 | தமிழ் பேசு தமிழா |
| PM 01.20 | பாடல்கள் |
| PM 01.30 | நகைச்சுவை திரைப்படம் |
| PM 03.58 | மாலை செய்தி |
| PM 04.00 | மழலைகள் |
| PM 05.00 | சிரிக்க சிரிக்க |
| PM 06.00 | நாளிதழ் நேரம் |
| PM 07.00 | அதிர்வுகள் |
| PM 07.30 | அதிர்வுகள் |
| PM 08.00 | பிரதான செய்தி |
| PM 08.20 | பாடல்கள் |
| PM 08.30 | HELLO DD |
| PM 09.00 | திரைப்படம் |
| PM 11.30 | நீங்காத நினைவுகள் |

# 448 ஆசிரியர்களுக்கு சான்றிதழ் வழங்கல்

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையைச் சேர்ந்த இரண்டு வருடகால பயிற்சியையும் நிறைவு செய்த ஆசிரியர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு இன்று கலாசாலை ரதிலக்ஷ்மி மண்டபத்தில் ஆசிரிய கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இரண்டு வருட கால பயிற்சியை நிறைவு செய்து இறுதிப் பரீட்சையில் தோற்றிய 458 ஆசிரியர்களில் சித்தியடைந்த 448 பேருக்கு இந்த சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர் உதவியாளர்களாக ஆசிரியர் பயிற்சியில் இணைந்து கொண்ட இவர்கள் பயிற்சி சான்றிதழ் சகிதம் தமது விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலமே ஆசிரியர் சேவையில் நிரந்தர நியமனம் பெறுவதோடு ஓய்வூதிய உரிமையோடு இலங்கை ஆசிரியர் சேவை தரம் iiiஇல் உள்ளீர்ப்பு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# குத்துக்கரணம் அடித்த கார்



யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி சென்ற சிறியகார் ஒன்று 25ஆம் மைல் கட்டையில் தலைகீழாகப் புரண்டது. அதில் பயணம் செய்த தந்தையும் மகனும் தெய்வாதீனமாக காயமேதுமின்றி தப்பித்துள்ளார்கள் காரின் முன்பக்கமும், பக்கவாட்டுப்பக்கமும் சேதம் ஏற்பட்டுள்ளது. காரை நெல்லியடி போக்குவரத்துப்பொலிஸார் விசாரணைக்காக பொலிஸ் நிலையம் எடுத்துச்சென்றுள்ளனர். (18)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலையில் நீண்ட காலமாகக் கவி நிலை குன்றிய நிலையில் காணப்பட்ட பிரதான மண்டபப் புனரமைப்பிற்குப் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து நிதி உதவி செய்த ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் கௌரவ டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் காரை நகர் பிரதேச அமைப்பாளர் திரு.கண்ணன் தோழர் அவர்களுக்கும் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சுப்பிரமணிய வித்தியாசாலை
காரைநகர்

(R.395)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது பாடசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் ஒதுக்கீட்டு நிதியில் இருந்து எமது பாடசாலைக்கு 10000 ரூபா வழங்கப்பட்டு அதன் மூலம் எமது பாடசாலையின் முன்பக்கத்துக்கு நெற் அடித்து கதவு போடப்பட்டது இந்த நிதி உதவிக்கு தங்களிற்கு நன்றி தெரிவிக்கின்றோம்.

யாழ். ஆயிலி சிவஞானோதய வித்தியாலயம்
காரைநகர்.

(R.395)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



எமது கிராமத்தின் முன்பள்ளி சிறார்களின் நலன்கருதி 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் விசேட நிதியிலிருந்து எமது பிரதேச ஈழமக்கள் ஜன நாயகக் கட்சிபொறுப்பாளர் வீ.கண்ணன் அவர்களின் சிபார்சுடன் கௌரவ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் முன்பள்ளிக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கென நிதியினை பெற்று வழங்கியமைக்கு எமது விளையாட்டுக் கழகம் சார்பாகவும் பொது அமைப்புக்கள். கிராம பொது மக்கள் சார்பாகவும் பாடசாலை அபிவிருத்திக்குழு சார்பாகவும் நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தோப்புக்காடு விளையாட்டுக்கழகம்.
காரைநகர்

(R.395)


# உணவுப் பண்டங்களின் விலைகளில் மாற்றம் வருமா?

(யாழ்ப்பாணம்)

பிரதான பொருட்களின் விலை அரசால் குறைக்கப்பட்ட போதிலும் யாழ். குடாநாட்டின் உணவகங்கள், சிற்றுண்டிச்சாலைகளில் விற்கப்படும் உணவுப் பண்டங்கள், மற்றும் தேனீர், பால்தேனீரின் விலையில் எந்த வித மாற்றமும் இன்றி காணப்படுவதால் தொடர்ந்தும் சாதாரண பொதுமக்கள் பாதிக்கப்படுவாக தொவிக்கப்படுகின்றது.

சீனி, பால்மா, கோதுமை மா உழுந்து, மண்எண்ணெய் போன்ற பொருட்கள் விலை குறைவடைந்த நிலையில் இவற்றை மூலப் பொருளாக கொண்டு உற்பத்தி செய்து விற்பனை செய்யும் உணவுப் பண்டங்கள் உணவுச்சாலைகளில் விலை குறைவடையாது விற்பனை செய்யப்படுவது ஏன்? என பொது மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து உணவுப்பொருட்களின் விலைகள் குறைவடைய நட்வடிக்கை எடுக்க வேண்டும் என பொது மக்கள் கேட்கின்றனர். (66)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2603 திகதி 31-01-2015

ஆங்கில எழுத்து: P

வெற்றி எண்கள்: 37 50 65 69

போனஸ் இல: 09

ஜக்பொட் பரிசு ரூ.10,599,150/- வெல்லப்படவில்லை


| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 199518 | 20/- | 3,990,360/- |
| 2 இல | 14186 | 100/- | 1,418,600/- |
| 3 இல | 300 | 1,000/- | 300,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 7954 | 40/- | 318,160/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 591 | 1,000/- | 591,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 10,599,150/- | |
| 1 இல + போனஸ் இல | 9554 | 100/- | 955,400/- |
| 2 இல + போனஸ் இல | 445 | 500/- | 222,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 363 | 200/- | 72,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 12 | 1,500/- | 18,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | | 150,000/- | |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 232941 | | 10,496,620/- |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 11,143,825/-

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3802)

# சுற்றாடல் பாதுகாப்பு பணிகளை முதலில் பாடசாலைகளில் ஆரம்பிக்க வேண்டும்



(யாழ்ப்பாணம்)

இன்றைய இளைஞர் யுவதிக ளான எமது சுற்றாடல் முன் னோடிகள் தமது சுற்றாடல் பாது காப்புப் பணிகளை பாடசாலை களில் இருந்து ஆரம்பிக்க வேண் டும் எதையுமே சிறு வயதில் இருந்து பழகிக் கொண்டோமா னால் அப்பழக்கங்கள் தாமாகவே எம்முடன் ஐக்கியமாகி விடுகின் றன. எனவே இப்பணியை வீட்டில் தான் வாழும் சுற்றாடலில், கிரா மத்தில், நகரத்தில், பிர தேசத் தில், மாவட்டத்தில், மாகாணத் தில், நாட்டில் இளைஞர் யுவதி கள் நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என வடமாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ் வரன் தெரிவித்தார்.

வடமாகாண மத்திய சுற்றா டல் அதிகாரசபையின் ஏற்பாட் டில் யாழ்.மாவட்ட சுற்றாடல் முன்னோடிப் பாசறை நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வட்டுக்கோட்டை தொழில்நுட் பக் கல்லூரியில் ஆரம்பமாகியது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தி னராகக் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித் தவை வருமாறு,

மாசுறும் நிலை என்பது எமது சூழலுக்குள் இயற்கையை களங் கப்படுத்தும் பொருள்களை உட் புகுத்துவதாகும். இரசாயனப் பொருட்களைவிட ஒலி ஒளி களினாலும் களங்கம் ஏற்படலாம். மாசடைய வைக்கும் பொருள் களினாலும் ஏற்படலாம். மக்கள் பெருக்கம் பாரிய தொழிற் சாலைகளின் கழிவுகள் நாளாந்த மக்கள் பாவனைக் கழிவுகள் என்று பல்வற்றை இனம் காண லாம்.

சுற்றாடலைச் சுத்தமாக வைத திருக்கும் எமது குறிக்கோளை நடைமுறைப்படுத்த முதலில் நாங்கள் கண்டறிய வேண்டியவை இயற்கை வளங்களின் அழிவை ஏற்படுத்தக் காரணமாக அமை யும் காரணிகளை. தவிர்ப்பதற் கும் தடுப்பதற்கும் நடவடிக்கை கள் எடுக்க வேண்டும். இவ்வாறு சுற்றாடலுக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தும் காரணிகளைக் கண் டறிந்தபின் அவற்றைத் தடுப் பதாயின் அல்லது தவிர்ப்பதா யின் அதற்கு மக்களின் முனைப் பான பங்கீட்டைப் பெற்றுக் கொள்ளல் அவசியம்.

எமது இளைஞர் யுவதிகள் ஒன்றை மட்டும் மிக முக்கிய மாக மனதில் வைத்திருக்க வேண்டும். அதாவது இந்த சுற் றாடல் மாசடைதலானது உலக ரீதியில் தற்பொழுது பெரும் பிரச்சினையாக மாறிக் கொண் டிருகின்றது என்பதே அது. பூகோள வெப்பநிலை ஓசோன் படலம் சிதைவடைதல் மண் அரிப்படைதல் பனிமலை உரு குதல் கடல்மட்டம் உயர்வடை தல் போன்ற பல பிரச்சினை களை சர்வதேச சமூகம் அலசி ஆராய்ந்து வருகிறது.

இவை எம்மையும் பாதிக்கப் போவது நிச்சயம், எனவேதான் வருமுன் காப்பவன் போல் நாங்கள் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இவை யாவற்றிற்கும் பொதுவானதொரு தீர்வு என்னென்றால் மரங்களை வளர்த்தல்தான். அதே நேரம் பாரிய தொழிற்சாலைகளால் நிறுவனங்களினால் வெளியேற் றப்படும் சகல விதமான நச்சுப் பொருள்களையும் இரசாயனங் களையும் சூழலை மாசுபடுத் தாத முறையில் அகற்றி அழித் தலோ மீள் சுழற்சிக்குட்படுத் தலோ எமது பெரும் பணியாக அமைகின்றது.

இதற்காகத்தான் சுற்றாடல் முன்னோடிகளை உருவாக்க எமது மத்திய சுற்றாடல் அதிகார சபையினர் முன்வந்துள்ளனர் என்று எண்ணுகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார்.(63)

# கும்பாபிஷேகம்

(கரணவாய்)

கரணவாய் கருணையம்பதி மண்டான் ஸ்ரீ வீரபத்திரகாளி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 12.15 மணி முதல் 02.30 மணி வரையுள்ள சுப வேளையில நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (18)

❖ ❖ ❖

(கரணவாய்)

கரவெட்டி வடக்கு கேணியடி ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் தைப்பூசதினமான நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

தொடர்ந்து 12 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறவுள்ளதுடன் கும்பாபிஷேக கிரியைகளை சிவஸ்ரீ அழகு ஜெகதீஸ்வர தேசிகர் ஆற்றவுள்ளார். (18)

## "முத்தமிழ் வித்தகர்" விருது வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

அண்மையில் அரச உயர் விருதான கலாபூஷணம் விருது பெற்ற கந்தப்பு லோகேஸ்வ ரனின் கலைத் திறனைப் பாராட்டி பொன்னாலைச் சந்தி நாராயணன் ஆலயத்தில் நடை பெற்ற பொங்கல் விழாவில் ஆலய நிர்வாகத்தினரால் அவர் "முத்தமிழ் வித்தகர்" விருது வழங்கிக் கௌரவிக் கப்பட்டார்.



# பாடசாலை கல்வியை மட்டும் புகட்டாது ஆன்மீகத்திலும் மாணவர்களை வளர்க்கவேண்டும்

## யாழ்.சின்மயா மிசன் ஆச்சாரியார் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றைய இளம் சமூகத்தி னரிடம் ஏற்பட்டிருக்கின்ற பல் வேறுபட்ட சவால்களுக்கு தீர் வாக மாணவர்களுக்கு பாட சாலைகளில் வெறுமனே கல் வியை மட்டும் புகட்டாது அவர் களுடைய விசேட திறமைகளை அடையாளங்கண்டு ஆன்மீகக் கல்வியிலும் வளர்த்தெடுக்க வேண்டும் என சின்மயா மிஷன் யாழ்.வதிவிட ஆச்சாரியார் பிரம மச்சாரி ஜாக்ரத சைதன்ய தெரி வித்தார்.

இன்றைய மாணவர்களுக்கு ஆன்மீகக் கல்வியின் அவசியம் தொடர்பாக கருத்துத் தெரி விக்கும் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் கருத்து தெரி விக்கையில்,


பாடசாலையிலே கற்பிக்கின்ற கல்வி, தொழில் ரீதியிலானதாக இருப்பது மிக அவசியம். இதற்கு மாற்றுக் கருத்துக் கிடையாது. மாணவரிடம் எந்த திறமை அதி களவில் உள்ளதோ அதை இனம் கண்டு புகட்ட வேண் டும்.

அதுமட்டுமல்லாது அந்தத் துறையையும் முழுமையாக நேசிக்க வேண்டும்.

இந் நாட்டிலே இருக்கக்கூடி யவர்கள் முக்கியமாக செய்ய வேண்டிய பணியாக தனியார் கல்வி வகுப்புக்களை வெள்ளிக் கிழமை மாலை நேரங்களிலும் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங் களிலும் ஆன்மிக செயற்பாடு களுக்காகவும் கலை வகுப்புக் களுக்காகவும் ஒதுக்கி அதனை செயற்படுத்த அனைவரும் ஒன்றி ணைய வேண்டும்.

இவ்வாறு அனைவரும் ஒன் றிணைந்து இந்தக் கொள்கையை பின்பற்றினால் இளம் சமூகத் தினரை நல்வழியில் இட்டுச் செல்ல முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (63)

# அபிவிருத்தித்திட்டங்களின் அங்குரார்ப்பண நிகழ்வு



(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபையின் அபிவிருத்தி செயற்பாடாக முதலைக்குழி நீர்விநியோகத்திட்டம், புறநெகும திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நெல்லியடி மரக்கறிச் சந்தை மற்றும் மண்டான் சந்தை ஆகிய வற்றின் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை நடைபெற வுள்ளது.

இதில் காலை 7.30 மணிக்கு நெல்லியடி மரக்கறிச் சந்தையை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா கலந்து கொண்டு திறந்து வைக்க வுள்ளார்.

தொடர்ந்து மு.ப. 10 மணிக்கு நீர் விநியோகத்திட்டத்தையும், 11 மணிக்கு மண்டான் சந்தை கட்டடத்தையும் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங் கரநேசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு திறந்துவைக்க வுள்ளார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந் தினர்களாக வடமாகாண சபை அவைத்தலைவர் சி.வி.கே.சிவ ஞானம் வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் இ.வர தீஸ்வரன், வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

## எஸ்.பொ.வின் நினைவஞ்சலி நிகழ்வு

எழுத்தாளர் எஸ்.பொன்னுத்துரை (எஸ்.பொ)யின் நினைவஞ்சலி நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன் தலைமையில் நடை பெறவுள்ளது. இந்த நிகழ்வின் வரவேற்புரையை மக்கள் கலை இலக்கிய பெருமன்றத்தின் தலைவர் தேவிபாலலிங்கம் நிகழ்த் துவார். இதன்போது அமரரின் திருவுருவப்படம் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டு மலர்மாலை அணிவிக்கப்படும்.

# சுகாதார சீர்கேடாகவுள்ள மாஞ்சோலை பகுதி உணவகம்

## சுகாதாரப் பிரிவு நடவடிக்கை எடுக்குமா? கேள்வி எழுப்பும் மக்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாஞ்சோலை 3 ஆம் கட்டை சந்தியில் அமைந் துள்ள உணவகம் சுகாதார சீர் கேட்டுடன் இயங்குவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியிலுள்ள பிரதான உணவகமாக காணப்படும் இது அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் சுகாதார சீர்கேட்டு டன் இயங்கி வருவதாகவும் இதனால் இங்கு உணவுப் பொருட்களை வாங்கும் நுகர் வோர் பல்வேறு சுகாதார நெருக் கடிகளை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ் உணவகத்தில் உணவு தயாரிப்பு சுத்தமான இடத்தி லில்லாது குப்பைகளும் தூசு களும் நிறைந்த இடத்தில் இடம்பெறுவதாகவும், கழிவுகள் அகற்றப்படாமல் தேங்கி காணப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கழிவு நீர் வழிந் தோடுவதற்கான நடவடிக்கை ளும் முன்னெடுக்கப்படவில்லை இந்த உணவகத்தின் கழிவுநீர் குளப் பகுதிக்கு அருகாக விடப் படுவதால் டெங்கு தொற்று ஏற் படும் அபாயம் காணப்படுவதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த உணவகத்தில் ஏனைய உணவகங்களை விடவும் குறைந்த விலையில் சிற்றுண்டிகள் மற் றும் உணவுகள் விற்பனை செய்யப்படுவதாகவும் நாளாந் தம் 500 இற்கும் மேற்பட்ட மக் கள் இவ் உணவகத்தில் உண வுப் பொருட்களை வாங்குவதா கவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் உணவகத்தில் 18 வயதிற்கு குறைந்த இளைஞர் களுக்கு சட்ட விரோதமாக சிகரெட் விற்பனை செய்யப்படு வதாகவும், இதனால் அதிகளவான இளைஞர்கள் பாதிப்புக்களை எதி நோக்கியுள்ளதாகவும் பொது மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இவ்வாறு சுகாதார சீர்கேட் டுடன் இயங்கும் உணவகம் தொடர்பில் பொது சுகாதார பரி சோதகர்கள் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை என தெரிவிக்கும் பொது மக்கள் இது தொடர்பில் இனி யாவது கவனம் செலுத்தி பொது மக்களின் சுகாதாரத்தை பாது காக்க நடவடிக்கை எடுப்பார்களா? என மக்கள் கேள்வி எழுப்பு கின்றனர். (67)

மனிதர்களை உயர்ந்த மனிதர்களாக்குவது சோதனை நேரம் தான், வெற்றி நேரமல்ல. - தாமஸ் ஹூட்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## சுகாதாரத் துறைக்கு வழிகாட்டி

வளர்ச்சியடைந்த நாடுகளில், கல்வியும் வைத்தியமும் போக்குவரத்தும் அனைத்து ஊர்களிலும் ஒன்றுபோல சமமான முறையில் இருப்பது சிறப்பாகக் கவனிக்கப்படுகிறது. குறிப்பாக மருத்துவ வசதியும் கல்வியும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் ஒரே மாதிரியும் ஒரே தரத்திலும் கிடைக்கச் செய்வதுதான் எந்த நாட்டின் அரசுக்கும் இலட்சியமாக இருக்க வேண்டும்.

நகரத்து மாணவன் பெறக்கூடிய கல்வியை கிராமத்து மாணவனும் பெறக் கூடியதாக இருக்க வேண்டும். வைத்திய வசதியும் அப்படித்தான். அரசியல் அதிகாரம் மட்டுமல்ல, அபிவிருத்தியும் அவ்வாறுதான் பரவலாக்கப்பட வேண்டும்.

சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில், வழிகாட்டியாகக் குறிப்பிடத்தக்க நாடாக கனடாவைச் சொல்கிறார்கள். “ஒருவரின் பணம் செலுத்தும் திறனின் அடிப்படையில் அல்லாமல், தேவையின் அடிப்படையில் அவருக்குச் சுகாதாரச் சேவைகள் அளிக்கப்பட வேண்டும்” என்பதுதான் கனடா நாட்டு சுகாதாரத் திட்டத்தின் வழிகாட்டிமுறையாகும்.

மக்களுக்குத் தேவையான அடிப்படைச் சுகாதாரத் தேவைகளை உறுதி செய்ய வேண்டியது அரசின் கடமை என்பதை யாரும் மறந்துவிட முடியாது. சுகாதாரத் திட்ட முறைகளுக்கான ஐந்து வழிகாட்டிகளை கனடா கொண்டிருக்கிறது.

1. மாகாண மற்றும் எல்லைப் பகுதி அரசுகளின் சுகாதாரத் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்பட்டு லாப நோக்கு இல்லாத அடிப்படையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

2. மாகாணம் மற்றும் எல்லைப் பகுதிகளில் செயல்படும் மருத்துவமனைகள், அங்கு பணிபுரியும் மருத்துவர்கள், அளிக்கப்படும் மருத்துவச் சேவைகள் காப்பீடு செய்யப்பட வேண்டும்.

3. சுகாதாரத் திட்டம் என்பது அனைவருக்கும் பொதுவானதாகவும், ஒரே மாதிரியான நிபந்தனைகள் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

4. எந்தவிதமான தடையும் இல்லாமல் மருத்துவமனைகளையும், மருத்துவர்களையும் அணுகும் வகையில் இத்திட்டம் இருக்க வேண்டும்.

5. தகுதியான நபர்கள் நாட்டின் ஒரு பகுதியிலிருந்து மற்றொரு பகுதிக்கு இடம் பெயர்ந்து சென்றாலும், அனைவருக்கும் மருத்துவச் சேவை கிடைக்கச் செய்ய வேண்டும். ஒருவேளை வெளிநாடு செல்ல நேர்ந்தால் குறிப்பிட்ட நிபந்தனைகளின் கீழ் அவர்களுக்கு மருத்துவச் சேவை அளிக்கப்பட வேண்டும்.

இவற்றை அந்நாடு கறாராகப் பின்பற்றுகிறது. அதனால்தான் சுகாதாரத் துறையைப் பொறுத்தவரையில் அதை முன்மாதிரியான நாடாகக் குறிப்பிடுகிறார்கள்.

கனடாவில் சுகாதாரத் திட்டம் பொது நிதி மூலம் செயற்படுத்தப்படுகிறது. இதனால், பயன்பெறுபவர்கள் எதுவும் தர வேண்டியதில்லை. தனியார் மருத்துவமனைகள் மருத்துவச் சேவை அளிக்கும் பட்சத்தில் அதற்கான தொகையை கனடா அரசே செலுத்திவிடுகிறது.

ஒவ்வொரு மாகாணத்திலும் மருத்துவச் சிகிச்சை அளிக்கும் மருத்துவரே காப்பீட்டுத் தொகையை பெறும் விஷயத்தைக் கையாள்கிறார். எனவே, சிகிச்சை பெற்ற நோயாளிகள் இது பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

அனைவருக்கும் ஒரே மாதிரியான சிகிச்சை அளிக்கப்படுகிறது. மூத்த குடிமக்களுக்கான மருந்து, மாத்திரை செலவுகளை அரசு ஏற்கிறது. மருந்து, மாத்திரைகள் நியாயமான விலைகளில் கிடைப்பதை அரசே உறுதி செய்கிறது.

உண்மையில், கனடாவின் சுகாதாரத் திட்டம் ஏனைய நாடுகளுக்கு ஒரு சிறந்த முன்னுதாரணம் என்பதில் சந்தேகம் இல்லை.

- ஆசிரியர்

## 300 இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் வரி செலுத்தப்படாமல் இறக்குமதி

இலங்கை முதலீட்டுச் சபையினால் அனுமதி பெற்ற 2 ஆடைத் தொழிற்சாலைகள் கடந்த வருடங்களில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட கொள்கலன்களை வரி செலுத்தாது இறக்குமதி செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றன.

ஆடைகளின் இறுதி தயாரிப்புகளுக்காக, மூலப்பொருட்களான துணிகள், புதிய ஆடைகள் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

இதன் மூலம் பல மில்லியன் மோசடி இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்விடயம் புலனாய்வுப்பிரிவினரால் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, குற்றவாளிளுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சிரேஷ்ட சுங்க அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேலும் முதலீட்டு சபையினால் அனுமதிபெற்ற குருநாகலையில் அமைந்துள்ள இரண்டு ஆடைத் தொழிற்சாலைகள், இறக்குமதி செய்த ஆடைகளை மீண் டும் உரிய இடங்களுக்கு ஏற்றுமதி செய்யவில்லை என்றும் அந்த ஆடைகள் அனைத்தும் இலங்கையின் பல பிரதேசங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரி வித்தார்.

## இந்திய வைத்திய நிபுணரின் முகச் சீரமைப்பு சிகிச்சை

இந்தியாவின் பிரபலமான கண், வாய் மற்றும் முகச்சீரமைப்பு வைத்திய கலாநிதி எஸ்.எம்.பாலாஜி மாலைதீவு செல்லும் வழியில் இலங்கை நோயாளிகளின் நலன்கருதி கொழும்பில் இரு நாட்கள் தரித்துச் செல்லவுள்ளார்.

வைத்திய ஆலோசனை தேவையானவர்கள் எதிர்வரும் 7, 8 ஆம் திகதிகளில் சந்திக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியா சென்று ஆலோசனை பெறுவதன் சிரமத்தைக் கருதியும், ஏற்கனவே இங்கிருந்து அங்கு சென்று சிகிச்சை பெற்றவர்களின் நலன் சம்பந்தமாகவும் இந்தப் பயணம் அமைகிறது.

எதிர்வரும் 7 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை ஆலோசனை பெறமுடியும் எனத் தெரியவருகிறது. மேலதிக விபரங்களுக்கு 0773 695579 அல்லது 0112362995 என்ற இலக்கத்தில் சித்திரா இராமலிங்கத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அல்லது தனலக்ஷ்மி, சென்னை - 91-44-429472221 என்ற இலக்கத்துடனும் தொடர்புகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (23)

## போதைப்பொருள் வர்த்தகர்கள் மீது இனி கடுமையான நடவடிக்கை

(கொழும்பு)

போதைப்பொருள் வர்த்தகத்திற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்க புதிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மேல் மாகாண பிரதி பொலிஸ் மா அதிபர் பூஜித ஜயசுந்தர தலைமையில் விசேட பிரிவு ஒன்று நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

போதைப் பொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவோர், விநியோகம் செய்வோர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தொடர்பிலும் விசாரணைகள் நடத்தப்பட உள்ளன. போதைப் பொருள் கடத்தல்கள் இடம்பெறும் நாட்டின் சகல பகுதிகளும் கண்காணிக்கப்பட உள்ளதாக சட்டம் ஒழுங்கு அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## ரணில் பிரதமரானது தவறென சர்ச்சை கிளப்பும் சரத் என் சில்வா

சட்டவிரோதமான முறையிலேயே ரணில் விக்ரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார் என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா சர்ச்சையைக் கிளப்பியுள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் முன்னாள் பிரதமர் டி.எம். ஜயரட்னவும் அப்போதைய அமைச்சர்களும் மிகவும் நாகரீகமான முறையில் அமைதியைப் பேணியுள்ளதாகவும், அவர்கள் எதிர்ப்பை வெளியிட்டிருந்தால் பாரிய குழப்பங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ரணில் விக்ரமசிங்க பிரதமராக தெரிவு செய்யப்பட்ட விதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என அவர் தெரிவித்துள்ளார். பிரதமராக பதவி வகித்த டி.எம் ஜயரட்ன பதவி விலகவில்லை, பதவியிலிருந்து விலக்கப்படவும் இல்லை. இவ்வாறான ஓர் பின்னணியில் புதிதாக ஒருவரைப் பிரதமராக நியமிக்க முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீளவும் பதவியில் அமர்த்தப்பட்ட விதம் தவறானது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். நீதிமன்றம் ஒன்றினால் மட்டுமே மொஹான் பீரிஸின் நியமனத்தை இரத்து செய்ய முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சட்டத்தை மதிக்கும் நபர் என்ற போதிலும், அவருக்கு அருகாமையில் இருப்பவர்கள் அவரைப் பிழையாக வழிநடத்தியுள்ளனர் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும் நல்லாட்சி என்பது சட்டத்திற்கு மதிப்பளிக்கும் நிலைமையையே குறிக்கும் எனவும், கடந்த அரசாங்கம் செய்த பிழைகளை இந்த அரசாங்கம் செய்வதனை தாம் விரும்பவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## போலி மருத்துவர்களுக்கு ஆப்பு

நாடு முழுவதுமுள்ள போலி ஆயுர்வேத வைத்தியர்களை அடையாளம் கண்டு அவர்களைக் கைது செய்யுமாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன அறிவுறுத்தியுள்ளார்.

ஒரு வருட காலத்துக்குள் சகல போலி ஆயுர்வேத வைத்தியர்களையும் அடையாளம் கண்டு, அவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் சுகாதார அமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## நவீன தொழில்நுட்பம் ஆட்சி மாற்றத்துக்கு உதவியது

### ஜனாதிபதி தெரிவிப்பு

இளையோரின் அர்ப்பணிப்பும் நவீன தொழில்நுட்பமுமே ஆட்சிமாற்றத்துக்கு உதவின. அத்தகைய இளைஞர், யுவதிகளின் எதிர்பார்ப்புகள் பூர்த்திசெய்யப்படும். இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்கு இளைஞர்களின் பங்களிப்பு முக்கியமானது. கடந்த அரசாங்கத்தை தோற்கடிக்க இளைஞர், யுவதிகள் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்கினர். மக்கள் மனதில் மாற்றத்தை ஏற்படுத்த அவர்கள் எதிர்பார்ப்புடன் எடுத்த முயற்சி பாராட்டுக்குரியது. எனவே இளைஞர், யுவதிகளின் எதிர்பார்ப்புகள் நிறைவேற்றப்படும். 100 நாள் திட்டத்தை முன்னெடுப்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பின்றி 100 நாள் திட்டம் வெற்றியளிக்காது. நாட்டில் நல்லாட்சியை ஏற்படுத்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதே எனது நோக்கம் என அவர் தெரிவித்தார்.

## வடபகுதிக்கு வருகிறார் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

பாதுகாப்பு இராஜாங்க அமைசசர் ருவான் விஜேவர்தன வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கள நிலைவரங்களை நேரில் பார்வையிட உத்தேசித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் ருவான விஜேவர்தன வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக பதவிப் பிரமாணம் செய்து கொண்டதன் பின்னர் மேற் கொள்ளும் முதலாவது வடக்கு, கிழக்கு விஜயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

அவர் பலாலி இராணுவத் தலைமையகம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி போன்ற இடங் களுக்கும் விஜயம் செய்யவுள்ளார்.

வடக்கு, கிழக்கு பாதுகாப்பு நிலைமைகள் குறித்து இராணுவத்தினர் பாதுகாப்பு அமைச்சருக்கு விளக்கம் அளிக்கவுள்ளனர்

# நெகிழ வைத்த Downfall

பொதுவாகவே சரித்திரங்கள், இரண்டாம் உலகப் போர், உண்மைக் கதைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட திரைப்படங்கள் எப்போதும் கவருபவை. அப்படியான முத்துக்களில் ஒன்றுதான் இந்த Downfall (2004). ஜெர்மன் திரைப்படம். நிறைய வரலாற்று ஆவணங்களின் அடிப்படையிலும் நேரடி சாட்சிகளின் அடிப்படையிலான ஆதாரங்களைக் கொண்டும் உருவான இப் படம் நம்மை இரண்டாம் உலகப் போரின் கடைசி தினங்களுக்கு கொண்டு செல்கிறது.

இரண்டாம் உலகப் போருக்கு முன்னாலிருந்து ஹிட்லரின் தற்கொலை வரை ஹிட்லரிடம் அந்தரங்க உதவியாளராக இருந்த ∴ப்ராடி ஜங் (Traudi Jung (1920-2002) தான் இளம் வயதில் ஹிட்லரிடம் உதவியாளராகச் சேர்ந்ததை நம்மோடு சொல்ல ஆரம்பிக்கிறது கதை. படத்தின் ஆரம்பத்திலும் முடிவிலும் ∴ப்ராடி ஜங் தோன்றியிருக்கிறார்.

ஹிட்லரின் பிறந்த நாள் 1945 ஏப்ரல் 20ஆம் திகதி நள்ளிரவில் தங்களுக்கு மிகச் சமீபத்தில் குண்டு வெடிப்பதைக் கேட்ட ∴ப்ராடி ஜங்கும் உடன் பணி புரிவோரும் எழுந்துகொள்ள ஹிட்லரும் விழித்துக் கொண்டு ஆர்ட்லரி தாக்குதல்கள் எங்கு எப்படி எவ்வளவு தூரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்று கேட்க ஆரம்பிக்கிறார். ஜெனரல் பர்ஹ்டா∴ப் பெர்லினில் இருந்து 12 கிலோமீட்டர்களுக்கு அப்பால் ரஷ்யாவின் படை வந்துகொண்டிருப்பதை தெரிவிக்கிறார்.

பிறந்தநாள் நிகழ்வின் போது ஹிட்லரின் எஸ்.எஸ் படையின் ஜெனரலான ஹென்ரிச் ஹிம்லரும் ஹெர்மன் /பாக்லீனும் சீக்கிரமே பெர்லின் மேற்குக் கூட்டணிப் படைகளிடம் விழுந்துவிடும் என்றும் அதற்கு முன் ஹிட்லர் பெர்லினை விட்டு வெளியேறிவிடுவது நல்லது என்றும் தெரிவிக்கிறார்கள். ஆனால் பெர்லினுக்குள் நுழையும் வேளையில் ரஷ்யப் படைகள் அழிக்கப்படும் என்றும் இல்லாவிட்டால் பெர்லின் என்னோடு சேர்ந்தே விழும் என்றும் கூறி வெளியேற மறுத்துவிடுகிறார் ஹிட்லர்.

இதற்குப் பின்னால் ஹிட்லருக்குத் தெரியாமல் ஜெர்மனி சரணாகதி அடைவது பற்றி கூட்டணிப் படைகளுக்கு தகவல் அனுப்பி வைக்கிறார் ஹிம்லர்.

ஹிட்லரின் எஸ்.எஸ் படையில் மருத்துவராக பணியாற்றும் டாக்டர் எர்னஸ்ட்டுக்கு மற்றுமொரு போர்முனைக்கு போகும்படி கட்டளை வருகிறது ஆனால் பெர்லினின் மையப் பகுதியில் இருக்கும் மக்கள்ளுக்கும் போர் வீரர்களுக்கும் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதால் மறுத்துவிடுகிறார். பின்னர் ஹிட்லரின் மறைவிடத்துக்கு அருகிலேயே இருக்கும் ஒரு மறைவிட மருத்துவமனையில் காயமடைந்தவர்களுக்கு மருத்துவம் தொடர்கிறார்.

ஹிட்லரின் அமைச்சர்களும், காதலி ஈவா ப்ரானும் பெர்லினை விட்டு வெளியேறிவிடவும் வேறெங்காவது ஒரு மறைவிடத்தில் இருந்து அரசியலைத் தொடரலாம் என்றும் தெரிவிப்பதையும் மறுத்து விடுகிறார் ஹிட்லர். மேலும் போரின் அடுத்த நகர்வாக 9-ம் மற்றும் 12ஆம் டிவிஷனையும் ரஷ்யப் படைகளுக்கு எதிராக போரைத் தொடங்கும்படியும் அதன் மூலம் பெர்லின் செம்படையின் தாக்குதலில் இருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றும் நம்புகிறார்.

அடுத்தநாளே ஹிட்லரின் படைத் தலைவர்களுள் ஒருவரான ஹார்மஸ் கெர்ப்ஸ் வந்து 9 மற்றும் 12ஆம் படை அணிகள் எந்தப் பக்கத்திலும் நகர முடியாதபடி சூழப்பட்டுள்ளதை தெரிவிக்கிறார். பின்னர் தன் படைத் தலைவர்கள் அமைச்சர்கள் முன்னிலையில் எல்லோரையும் துரோகிகள் என்றும் மோசடிப் பேர்வழிகள் என்றும் திட்டித் தீர்க்கிறார். அதன் பின் பெர்லினை விட்டு வெளியேறவேண்டும் என்ற மற்ற அனைவரின் கோரிக்கையையும் நிராகரித்து தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவுக்கு. வருகிறார் ஹிட்லர்.

ஹிட்லரின் கொள்கைப்பரப்பு அமைச்சர் ஜோஸப் கோயபல்ஸ் போர்க்களத்தில் இருந்து வெளியேறும் பொதுமக்களைக் கொல்லும்படி ஆணையிடுவதை ஜெனரல் மொன்க்∴ஹே எதிர்க்கிறார். போர்க்களத்தில் இறக்கும் பொதுமக்களைப் பற்றி தமக்கு எந்தக் கவலையும் இல்லை என்று தெரிவிக்கிறார் கோயபல்ஸ்.

போரில் ஜெர்மனியின் தோல்வி நிச்சயம் ஆனதும் ஹிட்லர், ஈவா, இருவரும் தங்களின் கடைசி கடிதத்தை தயாரிக்கிறார்கள். போர் வீரர்களைத் தவிர்த்து தங்களோடு இருப்பவர்கள் இருக்கலாம் போக விரும்புவோர்கள் போகலாம் ஏன்றும் ஹிட்லர் அறிவிக்கிறார். ∴ப்ராடி ஜங்குக்கு ஒரு சயனைட் பேழையைத் கொடுக்கிறார்.




ஈவாவை பெர்லினை விட்டு வெளியேறச் சொல்லும் ஈவாவின் தங்கையின் கணவன் பெர்லினை விட்டு தப்பிச் செல்கையில் பிடிபட்டு மரணதண்டனைக்குள்ளாகிறான்.

போரின் கடைசி நாட்களில் தன் நிதானம் இழக்கிறார் ஹிட்லர். படைத்தளபதி ஹெர்மன் கோரிங் ஹிட்லருக்குப் பின்னால் தனக்கு போர் நடத்த அனுமதி வேண்டும் என்று கேட்டு ஒரு தகவல் அனுப்புகிறார். அதைக் கண்டு கொதிக்கும் ஹிட்லர் ஹெர்மனைக் கைது செய்ய உத்தரவிடுகிறார். றொபேர்ட் ரிட்டர் வான் க்ரிம்மை அழைத்து கமாண்டர் இன் சீ∴ப் ஆக நியமிக்கிறார் ஹிட்லர்.

அதன் பின்னர் தன் குடும்பத்தோடு வெளியேற வேண்டி அனுமதி கேட்கும் டாக்டர் எர்னஸ்டுக்கு ஹிட்லர் அனுமதி மறுக்க எர்னஸ்ட் தன் குடும்பத்தோடு தற்கொலை செய்து கொள்கிறார்.

ஹிட்லரின் மறைவிடத்தில் இருந்து 400 மீட்டர் தூரம் வரை கூட்டணிப் படைகள் முன்னேறி விட்டதை அறிந்த ஹிட்லர் ஈவா ப்ரானை திருமணம் செய்து கொள்ளும் முன்னர் ∴ப்ராடியிடம் தன் கடைசி கடிதத்தை எழுதச் சொல்கிறார். பின்னர் கோய்பல்ஸையும் அவரின் குடும்பத்தையும் பெர்லினை விட்டு வெளியேறிப் போய் விடும் படியும் கேட்டுக் கொள்கிறார் ஆனால் கோயபல்ஸ் மறுத்துவிடுகிறார்.

ஈவா ப்ரானும் ஹிட்லரும் திருமணத்துக்குப் பிறகான விருந்து முடிந்ததும் தன் அந்தரங்க பணியாளர்கள் அனைவரிடமும் தங்களின் கடைசி வணக்கத்தையும் வாழ்த்தையும் கூறி விடைபெற்றுக் கொண்டு அறைக்குள் சென்று தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

பின்னர் இருவரின் உடலும் ஹிட்லரின் விருப்பப்படி மெய்க் காவலர்களால் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்தப் படுகிறது. அதன் பின்னர் கோயபல்ஸும் மனைவியும் குழந்தைகளுக்கு சயனைட் கொடுத்து கொன்றுவிடுகிறார்கள். கோயபல்ஸ் மனைவியை சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்கிறார்.

பெர்லின் ரஷ்ய கூட்டணிப் படையிடம் தோல்வி அடைந்ததை அறிந்த பல ராணுவ அதிகாரிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள். ∴ப்ராடி ஜங் கடைசி நேரத்தில் பெர்லினை விட்டு வெளியேறிச் செல்வது என்ற முடிவெடுத்து வெளியேறிவிடுகிறார்.

1945இல் போரின் கடைசி நாட்களை மட்டுமே படம் விவரிக்கிறது. மாபெரும் படை பலத்துடனும். மக்களின் முன்னால் உரையாற்றியும் கர்ஜித்த ஹிட்லரின் கடைசி காலம் அத்தனை வேதனையும் வலியும் நிரம்பியதாக இருந்திருக்கிறது. ஹிட்லரின் பின்னால் அணிவகுத்து நின்றவர்கள் கிட்டத்தட்ட அனைவருமே விசுவாசத்தின் அடையாளமாக தோன்றுகிறார்கள்.

ஹிட்லரின் உதவியாளர்கள், ஜெனரல்கள், சமையல்காரர்கள் என எல்லோருக்கும் ஹிட்லரின் மேல் இருக்கும் அன்பு கடைசி வரை மாறுவதே இல்லை. ஒரு மாபெரும் இனப் படுகொலையாளனாக உலகுக்குத் தெரிந்த ஹிட்லரின் மறுபக்கம் இப்படி ஒருவருக்குமே தெரியாமல் போகக் காரணம் ஹிட்லரோடு சேர்ந்தே அவர்களும் மரணமடைந்ததுதான் போலும். ஹிட்லர் தன் பணியாளர்களோடு கடைசி விடைபெறும் போது அவர்களின் மனநிலை எப்படி இருந்திருக்கும்? அவர்களுக்குள் என்ன மாதிரியான அன்பு இருக்கிறது என்பதை எல்லாம் அற்புதமாக காட்சிப் படுத்தி இருக்கிறார்கள்.

ஹிட்லரின் மரணத்துக்குப் பின்னால் கோயபல்ஸின் மனைவி தன் ஆறு குழந்தைகளுக்கும் தூக்க மருந்தைக் கொடுத்து பின்னர் அவர்கள் தூங்கிய பின்னர் ஒவ்வொருவர் வாயிலும் சயனைட் குப்பிகளை வைத்து உடைத்து மரணத்தின் வாசலுக்குள் தள்ளி விடும் காட்சியும் ஒரு நிமிடம் இந்தக் குழந்தைகள் என்ன செய்தன? என்ற கேள்வியை விதைக்கின்றது. பல்லாயிரக் கணக்கில் கொன்று குவிக்கப்பட்ட யூதக் குழந்தைகளும் கூடவே.

இத்தாலியின் முசோலினி போரில் தோல்வியை நெருங்கிக் கொண்டிருந்தபோது தப்பிக்க முயற்சி செய்து பிடிபட்டு கொலை செய்யப் பட்டார் அது போல் ஏன் ஹிட்லருக்கு நடக்கவில்லை என்பதற்கெல்லாம் இப் படத்தில் பதில் இருக்கிறது. போரில் கடைசி காலத்தில் ஹிட்லர் இல்லாத ஜெர்மனியை யாரும் நினைக்கக் கூட இல்லை. எல்லாம் ஹிட்லர், விசுவாசம் இனப் பாசம்.

ஹிட்லரின் கடைசி தினங்களுக்குள் நீங்களும் கொஞ்சம் வாழ விரும்பலாம், எத்தனை பெரிய கொடுங்கோலனுக்கும் வாழ்க்கை என்பது கடைசி காலங்களில் ஒரே மாதிரியாகவும் தனிமையிலும் கழியும் அது எப்படி என்பதைப் பார்க்க ஆவல் இருக்காதா என்ன?

**பல்லாயிரம் யூதர்களை கொன்று குவித்த ஹிட்லருக்குள் இருக்கும் கடைசிக் கால நெருக்கடிகளும், அவரின் வேதனையும் அவரைச் சுற்றி கோபத்தை மறைத்தபடி இருந்தவர்களின் இயலாமையையும் அப்படியே நமக்கு உணர்த்துவதில் இயக்குநரும் நடிகர்களும் மாபெரும் வெற்றி பெற்றிருக்கிறார்கள். ஹிட்லரின் பின்னால் அணிவகுத்து நின்றவர்கள் கிட்டத்தட்ட அனைவருமே விசுவாசத்தின் அடையாளமாக தோன்றுகிறார்கள். ஹிட்லரின் உத்வியாளர்கள், ஜெனரல்கள், சமையல்காரர்கள் என எல்லோருக்கும் ஹிட்லரின் மேல் இருக்கும் அன்பு கடைசி வரை மாறுவதே இல்லை.**

**- நன்றி: கிழுமத்தூர் எக்ஸ்பிரஸ்**

# விலைகுறைப்புச் செய்வது உடனடியாக சாத்தியமில்லை


## இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட விலைக்குறைப்பிற்கு ஏற்ப அத்தியாவசியப்பொருட்களை விநியோகிக்க முடியாது என அத்தியாவசியப் பொருள் இறக்குமதிச் சங்கம் தெரிவித்துள்ளது.

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவுசெலவுத்திட்டம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த பாதீட்டில் அத்தியாவசிய உணவு பொருட்கள் சிலவற்றுக்கு விலைகள் குறைக்கப்பட்டதோடு, புதிய விலைகள் இன்று முதல் நடைமுறைக்கு வருவதாகவும் அறிவிக்கப்பட்டது.




எனினும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ள சங்கம், புதிய விலை மாற்றத்தை உடனடியாக அமுல்படுத்த முடியாது எனவும், தாங்கள் நஷ்டமடைய தயாரில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, விலைக் குறைப்பிற்கு ஏற்ப பொருட்களை விநியோகித்து வருவதாகவும், இதனால் தாங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். எனினும் தொடர்ந்தும் விலைக்குறைப்பின் பிரதிபலன்களை வாடிக்கையாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை வரவு-செலவுத்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விலை குறைப்பிற்கு ஏற்றவாறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றதா? என்பது தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

# ஜனாதிபதிக்கு தனிவிமானம் கொள்வனவு இடைநிறுத்தம்



ஜனாதிபதி மட்டும் பயன்படுத்தும் உத்தியோகபூர்வமான விமானம் அடுத்த மாதம் இலங்கைக்கு கொண்டுவரப்படவிருந்தது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

16மில்லியன் அமெரிக்க டொலர் செலவிலேயே இந்த விமானம் கொண்டுவரப்படவிருந்தது. இதன் இலங்கை பெறுமதி 208 கோடி ரூபாவாகும்.

இதற்காக திறைசேரியின் ஊடாகவே பணம் செலுத்தப்படவிருந்தது. எனினும், பிரதமர் ரணில்.விக்ரமசிங்கவுடன் கலந்துரையாடி அந்த விமானக்கொள்வனவை நிறுத்தியதுடன் அந்த பணத்தை மக்களின் நலன்புரிகளுக்காக பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றில் புதிய எதிரணி

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் சிறு கட்சிகள் சில, தனி எதிரணியாக நாடாளுமன்றத்தில் செயறபடத் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான கூட்டணி, நாடாளுமன்றத்தில் சரியான முறையில் எதிர்க் கட்சியாக செயற்படாமை இதற்குரிய காரணம் என சிறு கட்சிகள் அறிவித்துள்ளன.

ஐ.ம.சு.கூட்டணியுடன் உள்ள விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸ விதாரண, டியு குணசேகர ஆகியோர் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளனர். இது குறித்த பகிரங்க அறிவிப்பு எதிர்வரும் 5 ஆம் திகதி விடுக்கப்படவுள்ளதாகவும் குறித்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சிங்கள வார இதழொன்று குறிப்பிட்டுள்ளது.


# தடை இனி இல்லை

அரசசார்பற்ற அமைப்புக்களுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் விதிக்கப்படமாட்டாது என்று பிரதமர் அலுவலகம் அறிவித்துள்ளது.

இதனையடுத்து அந்த அமைபபுக்கள் கருத்தரங்குகள் உட்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என்றும் பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், பிரதமரின் செயலாளரை சந்தித்து கலந்துரையாடிய போது இதற்கான உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது

இது தொடர்பில் சுற்றுநிருபம் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது. இதில், அரசசார்பற்ற அமைப்புக்கள். இலங்கையின் நீதியமைப்புக்குள் தமது பணிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

# இந்தக் குட்டிகள் வேண்டாம்



முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவிடம் இருந்த இரண்டு யானை குட்டிகள் பின்னவல யானைகள் சரணாலயத்தினரிடம் கையளிக்கப் பட்டதாக பிரதியமைச்சர் வசந்த சேனாநாயக்க அறிவித்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ஷவினால் பராமரிக்க முடியாத காரணத்தால், இந்த யானை குட்டிகள் கையளிக்கப்பட்டுள்ளதாக பிரதியமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

யானைக் குட்டிகளை பின்னவல யானைகள் சரணாலயத்தில், கையளிப்பதற்கு முன்னர் அது தொடர்பில், முன்னாள் பாதுகாப்பு செயலாளர் தமக்கு அறிவித்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கடன் வாங்குகிறது அரசு மொத்தம் 20 ஆயிரம் கோடி

தனது வெளிநாட்டுக் கடன் பளுக்களை செலுத்துவதற்காக 20 ஆயிரம் கோடி ரூபா பெறுமதக்கு சர்வதேச வர்த்தக சந்தையில் கடன் வாங்க புதிய அரசு தீர்மானித்திருப்பதாக சர்வதேச சந்தை வட்டாரங்களை மேற்கோள காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அப்போதைய அரசினால் கடனாகப் பெறுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட 150 கோடி அமெரிக்க டொலருக்கு (19 ஆயிரத்து 830 கோடி ரூபாவுக்கு) இது சமமானது என்றும் கூறப்பட்டது. ஐந்து வருட முதிர்வில் திருப்பிச் செலுத்தத்தக்க வகையில் இறைமைப் பிணையாக இந்தக் கடன் சர்வதேச சந்தையில் பெறப்படும் எனக் கூறப்படுகின்றது

# சர்வதேச பாடசாலைகள் மீது தரப்பரிசோதனைக்கு திட்டம்

நாட்டில் இயங்கி வரும் சர்வதேச பாடசாலைகளின் தரத்தை பரிசோதனை செய்வதற்கு விசேட குழு அமைக்கப்பட்டிருக்கிறது அத்துடன் சர்வதேச பாடசாலைகள் ஒவ்வொன்றும் கட்டாயம் அரசாங்கத்தில் பதிவு செய்து கொள்வதற்கும், அவ்வாறு பதிவு செய்த பாடசாலைகள் தமது பதிவை ஒவ்வொரு வருடமும் புதுப்பித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.



சர்வதேச பாடசாலைகளை தரமுள்ளதாக செயற்பட வைப்பதற்கே இந்தச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் இதற்கான தகுதியை கண்டறிவதற்கு விசேட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சர் .மேலும் கூறியுள்ளார்.

# மெய்யான நல்லிணக்கமே அபிவிருத்தியை ஏற்படுத்தும்

## கனேடிய அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

அதிகாரப் பகிர்வும் மெய்யான நல்லிணக்க முயற்சிகளுமே நாட்டை அபிவிருத்திப்பாதை நோக்கி நகர்த்தும் என்றும் புதிய அரசின் முயற்சிகள் நம்பிக்கையூட்டுகிறது என்றும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீளவும் பதவியில் அமர்த்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கம் பிரதம நீதியரசரை சட்டவிரோதமான முறையில் பணி நீக்கியதன் மூலம், சட்டம் ஒழுங்கு நிலைமையை மலினப்படுத்தியிருந்தது என அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

வடமாகாண ஆளுநராக சிவிலியன் ஒருவர் நியமிக்கப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியது என அவர் தெரிவித்துள்ளார். அத்துடன், இலங்கையில் அதிகாரங்கள் பகிரப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என்றும் அவர் குறிப்பிடடுள்ளார்.



குற்றச் செயல்களுக்கு தண்டனை விதித்தல் அதிகாரங்களை பகிர்ந்தளித்தல், மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்தல் போன்ற செயற்பாடுகளை கனடா தொடர்ந்தும் ஊக்குவிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கை மக்களினால் வழங்கப்பட்ட ஆணையை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன புரிந்து கொண்டு கடமையாற்றுவார் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்துள்ளார்.

# என்னை பதவி நீக்கியமை முற்றிலும் தவறானது

## மொஹான் பீரிஸ் சொல்கிறார்

பிரதம நீதியரசர் பதவியிலிருந்து தாம் பணி நீக்கப்பட்ட முறைமை பிழையானது என முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

தனது பணி நீக்கம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அரசியல் அமைப்பிற்கு முரணான வகையில் நான் பணி நீக்கப்பட்டுள்ளேன். நான் இன்னமும் பிரதம நீதியரசர் பதவியிலிருந்து ஓய்வு பெறவில்லை, காரியாலயத்திலிருந்து வெளியேறவும் இல்லை.

புற அழுத்தங்கள் காரணமாக என்னை பதவியிலிருந்து சட்டவிரோதமான முறையில் நீக்கியுள்ளனர். உரிமைகளை விடவும் அதிகாரம் வலுவானது. இதனால் அப்பாவிகள் பாதிக்கப்படுகின்றனர். மூன்றில் இரண்டு பெரும்பான்மையினர் ஷிராணி பண்டாரநாயக்கவை பணி நீக்கியுள்ளனர். இதுவே இறுதி முடிவாகும் என மொஹான் பீரிஸ் தெரிவித்துள்ளார்.



# வரிசெலுத்தாத நிறுவனம் முடங்கும் அபாயம்

முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிற்கு சொந்தமானதாகக் கூறப்படுகின்ற மதுபான உற்பத்தி நிறுவனத்தினால் கலால் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய 8 கோடியே 40 இலட்சம் ரூபா இன்னமும் செலுத்தப்படவில்லையெனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஏழு மாதங்களாக இந்த கொடுப்பனவு நிலுவையிலுள்ளதாகக் கூறப்படுகிறது.

கலால் திணைக்கள சட்ட திட்டங்களுக்கமைய மதுபான உற்பத்தியாளர்கள் கலால் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பணத்தை உரிய நேரத்தில் செலுத்தாவிடின், இந்த உற்பத்தி நிறுவனத்தை மூடுவதற்கு அதிகாரம் இருக்கிறது.

எனினும், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் மதுபான உற்பத்தி நிறுவனத்திற்கு இந்த உத்தரவு ஏழு மாத காலமாக பிறப்பிக்கப்படவில்லை இந்த நடவடிக்கை சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதாக கலால் திணைக்கள அதிகாரியொருவர் தெரிவித்தார்.






கைதடி தென்மேற்கு சரஸ்வதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 37 ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை கைதடி சரஸ்வதி சனசமூக நிலைய கலையரங்கில் நடைபெற்றபோது சிறுவர்களின் கலைநிகழ்வினையும், முன்னாள் மாதர் சங்கத்தின் தலைவிக்கு நினைவுப் பரிசில் வழங்குவதையும், மாதர்சங்க உறுப்பினர்களையும் காணலாம். (51)

# பாரம்பரிய கலை அம்சங்கள் பாதுகாக்கப்பட வேண்டியவை

## கிளிநொச்சி அரசஅதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பிரதேசத்தினது பாரம்பரிய கலை அம்சங்களை எதிர்கால சந்ததியினருக்கு வழங்கும் வகையில் அவை பாதுகாக்கப்பட வேண்டும். அந்தவகையில் பூநகரியின் கூத்துவடிவங்கள் நூலாக வெளிவருவது பாராட்டுக்குரியதாகும். என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பூநகரிப் பிரதேச செயலக கலாசாரப்பேரவையினால் மூன்று படைப்புகளின் வெளியீட்டு நிகழ்வு அண்மையில் பூநகரிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதன்மைவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பூநகரிப் பிரதேச செயலகம் மூன்று படைப்புகளை வெளியீடு செய்வதென்பது மகிழ்விற்குரியது. பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் தங்களுடைய வேலைகளுக்கு மத்தியில் கலை பண்பாடு போன்ற விடயங்களை பேணுவதிலும் நூலாக, மற்றும் ஆவணங்களாக வெளியிடுவதும் பாராட்டுக்குரியது.

தனியாக வேலைகளுடன் மட்டும் நின்று விடாது சமூக அக்கறையுடன் கலை இலக்கியப்படைப்புகளை வெளிக்கொணர்வதில் பூநகரி கலாசார பேரவை எடுத்த முயற்சிகள் சிறந்தவையாகும்.



பூநகரியின் கலை பண்பாடுகளைப் பாதுகாக்க அவை நூலாகவும் குறும்படமாகவும் எதிர்காலத்தில் வெளிவருவதற்கு எல்லோரும் அர்ப்பணிப்புடன் பாடுபடவேண்டுமென்பதுடன், பூநகரியின் வரலாற்றுத் தொன்மையான இடங்கள் மற்றும் கலை இலக்கியப் படைப்புகள் பாதுகாக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

செல்வி.நித்தியமதியின் 'வலிகளின் பொறிகள்' கவிதை நூலும், நிமலராஜின் 'அறியாமை' எனும் குறும்படமும், யேசுதாசனின் 'பூநகரிப் பிரதேச கூத்துக் கலைகளின் காவலர்கள்' எனும் ஆய்வுக்கட்டுரை நூலும் வெளியீடு செய்யப்பட்டன. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கவிஞரும் பருத்துத்துறை பிரதேச செயலருமான இ.த.ஜெயசீலன் கலந்துகொண்டதுடன் நிகழ்வில் 'பூநகரிப் பிரதேச கலை இலக்கியப் படைப்பாளிகள் எனப் பெருமளவானோரும் கலந்து கொண்டனர். (106)

# தேசிய வாசிப்பு மாதத்தின் நிறைவு நாள் நிகழ்வு சாவகச்சேரியில்

சாவகச்சேரி நகராட்சி மன்ற பொன்விழா ஆண்டின் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வுகள் மன்ற தவிசாளர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நகராட்சிமன்ற பொன்விழா மண்டபத்தில் நடைபெற்றது.

இந் நிகழ்வில் உள்ளூராட்சி வாரம் மற்றும் தேசிய வாசிப்புமாத நிகழ்வுகளை முன்னிட்டு நடாத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக் கப்பட்டதுடன் "பொன்விழா ஆண்டு உள்ளூராட்சிவார சிறப்புமலர் 2014" வெளியீடு நிகழ்வும் மாணவர்களது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாணசபை அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடமாகாணசபை உறுப்பினர் கேசவன் சயந்தன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கோ.ஜக்சீல் தென்மராட்சி வலயக்கல்விப்பணிப்பாளர் கு.கிருஸ்ணகுமார் உட்பட பலர்கலந்து சிறப்பித்தனர். இந்திய துணைத்தூதரகத்தினால் நூலகங்களுக்கு வளங்கப்பட்ட ஒரு தொகுதி நூல்களை மாகாணசபை அவைத்தலைவர் நகரசபை தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளையிடம் கையளித்தார். (63)

# பஸ்கட்டணங்கள் குறைக்கப்பட்டும் பயனின்றி தவிக்கும் பயணிகள்

## ஓட்டுநர்கள் மீது குற்றச்சாட்டு

பஸ் கட்டணங்களின் பெறுமதி நேற்றுமுதல் குறைக்கப்பட்ட நிலையில் K.K.S. வீதி, மற்றும் மானிப்பாய் வீதியில் சேவையில் ஈடுபடும் பஸ்களில் மிகுதி சில்லறைப் பணங்களை பயணிக்ள் பெற்றக் கொள்வதில் பல்வேறு சிக்கல்களை எதிர் நோக்குவதாக தெரிவிக்கப்படுகின்றது.

10 ரூபாவுக்கு குறைந்த மிகுதிப் பணங்களை மீதியாக பெறுவதில் பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதுடன 'சில்லறையாக பணம் எம்மிடம் இல்லை அதனை மாற்றிக் கொணடுவர உங்களால் முடியாதா?' என பயணிகளை நடத்துநர் தரக்குறைவாக நடத்துவதுடன் மீதிப் பணத்தை வழங்க மறுத்து வருவதாகவும் பயணிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

அதுமட்டுமன்றி பஸ் நடத்துனர்களிடம் சேரும் சில்லறைப் பணத்திற்கு என்ன நடக்கின்றது? என கேள்வி எழுப்பும் பயணிகள் தனியார், அரச பஸ் நடத்துநர்களுக்கு சேவை ஆரம்பிக்க முன் சில்லறைப் பணம் கொடுக்க வேண்டியது பொது மக்களா? அல்லது பஸ் உரிமையாளர்களா? அல்லது நிறுவனங்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் பஸ் கட்டணம் குறைவடைந்தும் மிகுதிப்பணம் கிடைக்காததால் கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை என விசனமடையும் பயணிகள் தொடர்பில் பேருந்து சேவை அதிகாரிகள் அதிக கவனமெடுத்து நடத்துநர்களுக்கும், சாரதிகளுக்கும் விளக்கத்தினை வழங்க வேண்டுமென கல்விமான்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர்.(66)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நேற்றுமுன்தினம் ச்னிக்கிழமை யா/ தேவரையாளி இந்துகல்லூரியில் கலை8.00 மணிமுதல் இடம் பெற்றது.

இதன்போது 2015 ஆம் ஆண்டுக்குரிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

த்லைவர்- த.தர்ஷிகன் உபதலைவர், இ.கமலாதரன் செயலாளர், பி.பிரபோஷன் பொருளாளர் ம.கீர்த்தனன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# முரசின் இன்றைய பலன்

(02.02.2015 திங்கட்கிழமை)

ஐய வருஷம் தை மாதம் 19 ஆம் திகதி.
சதுர்த்தசி திதி / அமிர்த சித்தம் - யோகம்.
பூனர்பூச நட்சத்திரம் மு.இ. 07.18 வரை. பின் பூசம்.
இராகு காலம 08.06 - 09.36 வரை. சுபநேரம 12.36 - 02.06 வரை.



ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**
தகுதிதராதரமிருந்தும் அரசு பணிகிட்டாமையினால் கவலை கொள்ளல்.

**ரிஷபம்**
புதியன ஆரம்பிக்க முன்னர் திசா புத்தி ஆரோக்கிய நிலையைக் கவனியுங்கள்.

**மிதுனம்**
பிள்ளைகளின் ஒவ்வாத செயல்களைக் கண்டிக்க முயல்கையில் எச்சரிக்கையாக இருங்கள்.

**கடகம்**
கொடுக்கல் வாங்கல்களில் நம்பிக்கைத்துரோகம் ஏற்படலாம்.

**சிம்மம்**
சுபச்செலவினைச் சமாளிக்க அடகுவைக்கும் நிலைப்பாடு தவிர்க்க முடியாதிருக்கும்.

**கன்னி**
திருடப்பட்டவை மீண்டும் கைக் கெட்டி விடலாம்.

**துலாம்**
சகுனத்தில் நம்பிக்கை வைக்கும் நிலைப்பாட்டினால் பயணத்தைக் கைவிடல்.

**விருச்சிகம்**
தொழில் மற்றும் வியாபாரத்தில் நிலவிய போட்டிகள், தடைகள் விலகும்.


**தனுசு**
காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளும் நிலைப்பாட்டினைச் செயற்படுத்துங்கள்.

**மகரம்**
எச்சரிக்கையை மீறுவதினால் தண்டனைக்கு ஆட்படலாம்.

**கும்பம்**
இஷ்ட தெய்வ வழிபாட்டின் மூலம் மனதில் தேங்கிய துயர வெள்ளம் வடியும்.

**மீனம்**
பழையதை மெருகூட்டி கட்டியடிக்கப்பார்ப்பார்கள் எச்சரிக்கையாக இருக்கவும்.

# ஆஸி. ஓப்பன்; ஆறாவது முறை வென்றார் செரீனா



அவுஸ்ரேலிய ஓப்பன் ரெண்ணிஸில் ஷரபோவாவை வீழ்த்தி செரீனா வில்லியம்ஸ் ஆறாவது முறையாக பட்டத்தைக் கைப்பற்றினார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற போட்டிகளில் ஒன்றான அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் போட்டி மெல்பேர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் முதல்நிலை வீராங்கனை அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸும், 2ஆம் நிலை வீராங்கனை ரஷ்ய நட்சத்திரம் மரிய ஷரபோவாவும் பலப்பரீட்சையில் இறங்கினர். உலகின் முதலிரு நிலைகளிலுள்ள புயல்கள் மோதியதால் ஆட்டம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

ஆனால் செரீனாவின் ஆக்ரோஷம், மின்னல் வேக ஷொட்டுகளுக்கு முன்பு ஷரபோவாவினால் ஓரளவு போராட்டம் மட்டுமே அளிக்க முடிந்ததே தவிர, அவர்து வீறுநடையை எந்த வகையிலும் தடுக்க முடியவில்லை.

முதலாவது செட்டின் முதல் கேமிலேயே ஷரபோவாவின் சேர்வீசை அட்டகாசமாக முறியடித்த செரீனாவுக்கு அதுவே வெற்றிக்கான அடித்தளமாக அமைந்தது. முதலாவது செட்டின் போது இருமல் ஜலதோசத்தால் அவதிப்பட்ட செரீனா வாந்தி எடுத்தார். ஆனாலும் அவரது உத்வேகம் துளியும் குறையவில்லை. தொடர்ந்து ஆதிக்கம் செலுத்திய செரீனா, 9ஆவது கேமில் மறுபடியும் ஷரபோவாவின் சேர்வீசை தகர்த்து செட்டை தனதாக்கினார்.

இதையடுத்து 2ஆவது செட்டில் நீயா-நானா என்று இருவரும் மல்லுகட்டினர். இருப்பினும் யாருடைய சேர்வீசும் பிரேக் செய்யப்படவில்லை. ஒரு கட்டத்தில் அதாவது 10ஆவது கேமின் போது செரீனா 5-4 என்ற கணக்கில் முன்னிலை பெற்று வெற்றிக்குரிய புள்ளியை நெருங்கினார். அப்போது சூப்பராக ஒரு ஷொட்டை அடித்த ஷரபோவா மேட்ச் பாயிண்ட் ஆபத்தில் இருந்து தன்னை காத்துக் கொண்டு, ஆட்டத்தை டைபிரேக்கருக்கு நகர்த்தினார். ஆனாலும் ஷரபோவாவின் முகத்தில் பெரிய அளவில் நம்பிக்கை எதுவும் தென்படவில்லை. ஒருவித பதற்றத்துடனேயே விளையாடினார்.

டைபிரேக்கரில் அசத்திய செரீனா இறுதியில் கோப்பையை சொந்தமாக்கினார். 1 மணி 51 நிமிடங்கள் நீடித்த இந்த மோதலில் செரீனா 6-3, 7-6 (7-5) என்ற நேர் செட்டில் வெற்றி கண்டு அவுஸ்ரேலிய ஓப்பனை ஆறாவது முறையாக முகர்ந்தார்.

டபுள் போல்ட், பந்தை வலுவாக வெளியே அடித்து விட்டு புள்ளிகளை இழப்பது போன்ற தவறுகளை இருவரும் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத் தான் செய்தனர். ஆனால் சேர்வீஸ் தான் முடிவை தீர்மானிப்பதாக இருந்தது. மணிக்கு அதிகபட்சமாக 203 கிலோமீற்றர் வேகத்தில் சேர்வீஸ் போட்டு பிரமாதப்படுத்திய செரீனா, முக்கியமான தருணத்தில் எதிராளி தொட முடியாத அளவுக்கு போட்ட ஏஸ் சேர்வீஸ்களே அவரது வெற்றிக்கு பக்கபலமாக அமைந்தன. செரீனா மொத்தம் 18 ஏஸ் சேர்வீஸ்களை (ஷரபோவா 5 ஏஸ்) போட்டு இருந்தார்.

33 வயதான செரீனா வில்லியம்ஸ் அவுஸ்ரேலிய ஓப்பனை வெல்வது இது ஆறாவது முறையாகும். ஏற்கனவே இங்கு 2003, 2005, 2007, 2009, 2010 ஆண்டுகளிலும் மகுடம் சூடியிருந்தார். இதன் மூலம் அவரது ஒட்டுமொத்த கிராண்ட்ஸ்லாம் பட்டத்தின் எண்ணிக்கை 19ஆக உயர்ந்தது. வெற்றிக்கனியை பறித்ததும் இங்கு மீண்டும் சாதித்துவிட்டேன் என்று துள்ளிக் குதித்து ஆர்ப்பரித்த செரீனா, 19 கிராண்ட்ஸ்லாம்ஷிப் பட்டத்துடன் இங்கு நிற்பேன் என்று ஒரு போதும் நினைத்ததில்லை என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார். அவருக்கு ரூ.15 கோடி பரிசுத்தொகையாக வழங்கப்பட்டது.

அவுஸ்ரேலிய ஓப்பனை அதிக முறை வசப்படுத்திய வீராங்கனைகளில் அவுஸ்ரேலியாவின் மார்க்ரேட் கோர்ட்டுக்கு (11) அடுத்தபடியாக நான்சி வெய்ன் போல்டனுடன் (அவுஸ்ரேலியா) செரீனா 2ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார்.

முன்னாள் சம்பியன்னான ஷரபோவாவுக்கு செரீனா என்றாலே எப்போதும் அலர்ஜி தான். கடைசியாக 2004ஆம் ஆண்டு செரீனாவை வென்றிருந்தார். அதன் பின் அவருக்கு எதிராக எல்லாமே தோல்வி மயம் தான். இதையும் சேர்த்து அவருக்கு எதிராக தொடர்ந்து 16 ஆட்டங்களில் ஷரபோவா தோற்று இருப்பது குறிப்பிடத்தக்கது.

2ஆவது இடத்தை பிடித்த ஷரபோவாவுக்கு ரூ.7 கோடி பரிசுத்தொகையாக கிடைத்தது. வரலாறு படைத்த செரீனாவுக்கு வாழ்த்துகள். உலகின் சிறந்த வீராங்கனையான அவருக்கு எதிராக விளையாடியது எனக்கு கிடைத்த கௌரவம் என்று ஷரபோவா குறிப்பிட்டார்.



**செரீனாவின் 19 கிராண்ட்ஸ்லாம்**

செரீனா வில்லியம்ஸ் இதுவரை 19 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களைக்கைப்பற்றியுள்ளார். இதன் மூலம் ஒற்றையர் கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் அதிகமுறை வென்றவர்களின் பட்டியலில் அமெரிக்க ஜாம்பவான்கள் மார்ட்டினா நவரத்திலோவா (18), கிறிஸ் எவர்ட் (18) ஆகியோரைப் பின்னுக்குத் தள்ளிய செரீனா சக நாட்டவர் ஹெலன் வில்ஸ் மூடியுடன் (19) 3ஆவது இடத்தை பகிர்ந்து கொண்டுள்ளார் முதல் இரு இடங்களில் அவுஸ்ரேலியாவின் மார்கரேட் கோர்ட் (24 கிராண்ட்ஸ்லாம்), ஜேர்மனியின் ஸ்டெபி கிராப் (22) ஆகியோர் இருக்கிறார்கள்.

செரீனா இதுவரை ருசித்த கிராண்ட்ஸ்லாம் பட்டங்கள் விவரம் வருமாறு:

அவுஸ்ரேலிய ஓப்பன் - 6 (2003, 2005, 2007, 2009, 2010, 2015)

பிரெஞ்ச் ஓப்பன் - 2 (2002, 2013)

விம்பிள்டன்- 5 (2002, 2003, 2009, 2010, 2012)

அமெரிக்க ஓப்பன் - 6 (1999, 2002, 2008, 2012, 2013, 2014)

## பாகிஸ்தானுக்கு நெருக்கடி கவலையில் அக்ரம்

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகள் நடைபெற உள்ள நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலிய சூழ்நிலைகளில் விளையாடக்கூடிய அளவுக்கு பாகிஸ்தான் அணிக்கு போதிய போட்டிகள் இல்லை. இது பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவை, நெருக்கடியை ஏற்படுத்தும் என பாகிஸ்தான் அணியின் முன்னாள் கப்டன் அக்ரம் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அணி, நியூசிலாந்து அணிக்கு எதிராக இர்ண்டு ஒருநாள் போட்டிகள் மட்டுமே விளையாடவுள்ளன. இது உலகக் கோப்பை போட்டிகளுக்கு போதுமான பயிற்சியாக இருக்காது. எனவே, உலகக் கோப்பைக்கு முன்னதாக நியூசிலாந்து மற்றும் அவுஸ்ரேலியாவில் அதிகமான போட்டிகளில் விளையாடியிருக்க வேண்டும்.

நியூசிலாந்து அணி நல்ல நிலையில் உள்ளது. நியூசிலாந்து சூழ்நிலைகளுக்கு ஏற்ப பாகிஸ்தான் துடுப்பாட்ட வீரர்களும் பந்துவீச்சாளர்களும் இன்னும் முழுமையாக தயாராகவில்லை. இந்த ஆடுகளங்களில் விளையாடிய அனுபவம் கொண்ட மூத்த வீரர்களை உலகக் கோப்பைக்கு தேர்வு செய்திருக்க வேண்டும். மூத்த வீரர்களும் தேர்வு செய்யப்படவில்லை. இது பாகிஸ்தான் அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மைக்ஸ்வெல் ஜொலிப்பு; ஆஸி. வசம் கிண்ணம்


(பேர்த்)

மைக்ஸ்வெல்லின் சிறப்பான சகல துறை ஆட்டத்தின் மூலம் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது.

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் பேர்த்தில் நடைபெற்றது. இதில் இங்கிலாந்து, அவுஸ்ரேலிய அணிகள் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணிக்கு இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சு பெரும் அச்சுறுத்தல் அளிக்கும் வகையில் அமைந்தது. இதன் காரணமாக அவுஸ்ரேலிய அணியின் முதல் நான்கு விக்கெட்டுக்களும் 60 ஓட்டங்களுக்குள் சரிக்கப்பட்டது. இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த மைக்ஸ்வெல், எம். மார்ஷ் இணை, அணியின் நிலையை உணர்ந்து பொறுப்புடன் ஆடியது. பின் அதிரடியாக ஆடிய இந்த ஜோடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை வேகமாக அதிகரித்தது. அதிரடியாக ஆடிய மைக்ஸ்வெல் ஐந்து ஓட்டங்களால் சதமடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். ஐந்தாவது விக்கெட்டுக்காக இணைந்த இந்த ஜோடி 141 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றது. தொடர்ந்து களமிறங்கிய போல்க்னர் மிகவேகமாக ஆடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை பலமான நிலைக்கு இட்டுச் சென்றார். இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் எட்டு விக்கெட்டுக்களை இழந்து 278 ஓட்டங்களைப் பெற்றது. இதில் மைக்ஸ்வெல் 98 பந்துகளை எதிர்கொண்டு 15 பவுண்டரிகள் அடங்கலாக 95, எம். மார்ஷ் 68 பந்துகளை எதிர்கொண்டு ஒரு சிக்ஸர், ஏழு பவுண்டரிகள் அடங்கலாக 60 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். போல்க்னர் 24 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், நான்கு பவுண்டரிகள் அடங்கலாக ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் ஸ்ருவெர்ட் புறொட் மூன்று, அண்டர்சன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


பதிலுக்கு 279 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. விக்கெட் சரிவை தடுத்து நிறுத்த கப்டன் மோர்கன் உட்பட பலர் முயன்றும் அது முடியவில்லை. குறிப்பாக, ஜோன்சன், மைக்ஸ்வெல் ஆகியோரின் பந்து வீச்சு இங்கிலாந்து அணிக்கு பெரும் சிம்மசொப்பனமாக அமைந்திருந்தது. நிறைவில் இங்கிலாந்து அணி 39.1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 166 ஓட்டங்களைப் பெற்று 112 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இதில் ரவிபோபார 33, ஸ்ருவெர்ட் புறொட் 24, ரூத் 25, மொய்ன் அலி 26 ஓட்டங்களைப் பெற்றனர். ஏனைய வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். பந்து வீச்சில் மைக்ஸ்வெல் நான்கு, ஜோன்சன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரின் வெற்றிக் கிண்ணத்தை ஜோர்ஜ் பெய்லி தலைமையிலான அவுஸ்ரேலிய அணி கைப்பற்றிக் கொண்டது. போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சு, துடுப்பாட்டத்தில் ஜொலித்த மைக்ஸ்வெல் தெரிவு செய்யப்பட்டார்.




## திறமை இருந்தும் அதிர்ஷ்டம் இல்லாத வீரர்கள்

### பட்டியலிடும் பாகிஸ்தான் முன்னாள் கப்டன்

1992ஆம் ஆண்டு உலக கோப்பையை வென்ற பாகிஸ்தான் அணியில் இடம் பிடித்தவரும், அந்த அணியின் முன்னாள் கப்டனுமான இன்சமாம் உல்-ஹக், ஐ.சி.சி. இணையத் தளத்தில் உலக கோப்பையை வெல்ல முடியாமல் போன தலைசிறந்த 12 வீரர்களின் பட்டியலை பதிவு செய்துள்ளார். கிரிக்கெட் ஆட்டத்தில் பல்வேறு கட்டங்களில் அருமையாக ஜொலித்த அவர்களால் அதிர்ஷ்டம் இல்லாததால் உலக கோப்பையை கையில் ஏந்த முடியாத துரதிருஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்று தெரிவித்துள்ளார். இன்சமாம் தெரிவித்துள்ள திறமை இருந்தும் அதிர்ஷ்டம் இல்லாத வீரர்களின் பட்டியலில் கங்குலி, ராகுல் ராவிட், கும்பிளே (மூவரும் இந்தியா), சயிட் அன்வர், வக்கார் யூனிஸ் (இருவரும் பாகிஸ்தான்), பிரையன் லாரா, அம்புரோஸ் (இருவரும் மே.தீவுகள்) மார்ட்டின் குரோவ், (நியூசிலாந்து), இயன் போத்தம் (இங்கிலாந்து), கலிஸ், அலன் டொனால்ட், ஜொன்டி ரோட்ஸ் (மூவரும் தென்னாபிரிக்கா) ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. 2003ஆம் ஆண்டு உலக கோப்பையை வெல்ல கங்குலி, ராவிட் ஆகியோருக்கு நல்ல வாய்ப்பு இருந்தது. ஆனால் அதனை அப்போதைய அவுஸ்ரேலிய கப்டன் ரிக்கி பொண்டிங் தகர்த்து விட்டார் என்றும் இன்சமாம் கூறியுள்ளார்.





அவுஸ்ரேலிய ஓப்பன் கிராண்ட் ஸ்லாம் ரென்னிஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற கலப்பு இரட்டையர் பிரிவு ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ்-சுவிஸின் மார்ட்டினா ஹிங்கிஸ் ஜோடி பட்டம் வென்றது. பிரான்சின் ம்லடெனோவிக்-கனடாவின் நெஸ்டர் ஜோடியுடன் மோதிய இந்த ஆட்டத்தில் 6-4, 6-3 என்ற நேர் செட்டில் வென்று பயஸ்-ஹிங்கிஸ் ஜோடி பட்டத்தை கைப்பற்றியது.

# அரச அதிபர் வெற்றிக் கிண்ணம் தெல்லிப்பளை பிரதேச செயலக அணி வசம்

(மட்டுவில்)

யாழ். மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை 37 புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட தெல்லிப்பளை பிரதேச செயலகம் கைப்பற்றிக் கொண்டது.

யாழ். மாவட்ட செயலக ஊழியர் நலன்புரிக் கழகம் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகஸ்தர்களுக்கிடையில் நடாத்திய அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டித் தொடரின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் மட்டுவில் வளர்மதி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் காஅல்பந்து, வலைப்பந்து, ஆண், பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் மற்றும் ஆண், பெண்களுக்கான கயிறு முழுத்தல் போட்டிகளின் இறுதி ஆட்டங்கள் நடைபெற்றன.

கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி ஆட்டத்தில் வேலணைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் தெல்லிப்பளைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற வலைப்பந்தாட்டத் தொடரின் இறுதிப் போட்டியில் யாழ். பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் தெல்லிப்பளைப் பிரதேச செயலக உத்தியோகஸ்த்ர் அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தெல்லிப்பளைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி 13-9 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஆண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும், பெண்கள் மென்பந்து கிரிக்கெட் தொடரில் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் வெற்றிபெற்றன.



இதேவேளை, ஆண்களுக்கான கயிறு முழுத்தல் போட்டியில் சங்கானைப் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் மோதின. இதில் தெல்லிப்பளை பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

பெண்களுக்கான கயிறுழுத்தல் போட்டியில் நல்லூர் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணியும் மோதின. இதில் கோப்பாய் பிரதேச செயலக உத்தியோகஸ்தர் அணி 2-0 என்ற கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

ஒட்டுமொத்தப் புள்ளிகள் அடிப்படையில் தெல்லிப்பளை பிரதேச செயலகம் 37 புள்ளிகளைப் பெற்று அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. 35 புள்ளிகளைப் பெற்ற வேலணைப் பிரதேச செயலகம் இரண்டாமிடத்தையும், யாழ். மாவட்ட செயலகம் 30 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் பிடித்துக் கொண்டன. இப் போட்டியின் முதன்மை விருந்தினராக மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர். பிரதேச செயலர்கள், உத்தியோகஸ்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளைக் கண்டுகளித்தனர்.

இதேவேளை, நடப்பு ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக் கிண்ண விளையாட்டுப் போட்டி வேலணைப் பிரதேசத்தில் நடாத்தப்படவுள்ளதாகவும், அடுத்து வரும் வாரங்களில் இப்போட்டிக்கான நிரலிடல் நடைபெறும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (93)

## விளையாட்டுச் செய்திகள்

### மாவட்ட கபடி சங்கம் மீள் புனரமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட கபடி சங்கம் மீள் புனரமைப்பு விரைவில் நடைபெறவுள்ளதாக யாழ். மாவட்ட கபடி பயிற்றுநர் முகுந்தன் தெரிவித்துள்ளார்.

எனவே, யாழ். மாவட்டத்தில் இயங்கும் கபடி அணிகளிலிருந்து இரண்டு வீரர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 7,8ஆம் திகதிக்கு முன்னர் மாவட்ட கபடிப் பயிற்றுநர் முகுந்தனிடம் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வீதியோட்டம்

# ஜெனிஸ்ரன், யமினா முதலிடம்





(கோப்பாய்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை வீர, வீராங்கனைகளுக்கிடையிலான வீதியோட்டத்தில் இ.ஜெனிஸ்ரன், இ. யமினா ஆகியோர் முதலிடத்தைப் பிடித்துள்ளனர்.

ஆண் ஆசிரியர்கள் வீதியோட்டம், கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இருந்து புறப்பட்டு இராவீதியூடாக நல்லூர் மற்றும் பருத்தித்துறை வீதியூடாக மீண்டும் கலாசாலையை அடைந்தது. 73 ஆண் ஆசிரியர்கள் பங்கேற்ற இப்போட்டியில் இ.ஜெனிஸ்ரன் முதலிடத்தையும் எம் சந்திரகுமார் இரண்டாமிடத்தையும் எஸ். சத்தீஸ்வரன் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

பெண்களுக்கர்ன போர்ட்டி கலாசாலை முன்பாக ஆரம்பமாகி, ஆடியபாதம் வீதியூடாக கல்வியங்காட்டுச் சந்தி மற்றும் பருத்தித்துறை வீதியூடாக மீளவும் கலாசாலையில் நிறைவடைந்தது. 227 பெண்கள் பங்கேற்ற இப்போட்டியில் இ.யமினா முதலிடத்தையும் பு.இன்பரூபி இரண்டாம் இடத்தையும் ச.துஷ்யந்தினி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

உடற்கல்வித்துறை விரிவுரையாளர் பா.வாசுதேவன் தலைமையில் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு இடம்பெற்றது. பரிசில்களை கலாசாலை அதிபர் வீ.கருணலிங்கம், பிரதி அதிபர் ச.லலீசன், உபஅதிபர் த.கோபாலகிருஷ்ணன், துணை அதிபர் இ.சிவசக்தி விரிவுரையாளர் குழுமத் தலைவர் வி.எஸ்.குணசீலன், தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் சரா.புவனேஸ்வரன், முன்னாள் அதிபர் வே.கா.கணபதிப்பிள்ளை நிகழ்வின் அனுசரணையாளரான கிருபா லேணர்ஸ் நிறுவன உரிமையாளர் அ.கிருபாகரன் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

இதேவேளை, மெய்வல்லுநர் போட்டிகள் விரைவில் நடைபெறவுள்ளதாகவும், இதற்கான வீர, வீராங்கனைகள் தொடர் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாகவும் கலாசாலை உடற்கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (63)

# இந்திய அணி எழுச்சி பெறும்

முத்தரப்பு ஒரு நாள் கிரிக்கெட் தொடரில் இந்திய அணியின் செயற்பாட்டை வைத்து எவரும் அந்த அணியை குறைத்து மதிப்பிடக்கூடாது. இந்திய அணி விரைவில் எழுச்சி பெறக்கூடியது. முத்தரப்பு ஒரு நாள் தொடரில் ஒரு வெற்றியைக் கூட இந்திய அணியால் பெற்றுக்கொள்ள முடியவில்லை என்பது வேறுவிடயம். ஆனால், இத்தொடரின் மூலம் இந்திய அணி அதிக அனுபவங்களைப் பெற்றுக் கொண்டிருப்பதாகவே கருத இடமுண்டு. தொடர்ந்து சொதப்பிய தவான் இறுதி லீக் போட்டியில் மீண்டெழுந்திருக்கிறார். பின்னி, ஜடேஜா போன்ற வீரர்களுக்கு இத்தொடர் சிறந்த பயிற்சிக் களமாக அமைந்திருக்கின்றது. ரோகித் சர்மா, ரஹானே போன்றோர் சிறப்பாகச் செயற்பட்டிருக்கின்றனர். பந்து வீச்சாளர்கள் பல விடயங்களைக் கற்றிருக்கிறார்கள். முத்தரப்பு தொடர் இந்திய அணிக்கு சிறந்த பயிற்சிக் களமாக அமைந்திருக்கின்றது என்றே தோன்றுகிறது என இந்திய அணியின் முன்னாள் வீரர் லக்ஷ்மன் தெரிவித்துள்ளார்.

# கியூபாவில் 25 பேருக்கு ஒருவர் மருத்துவ சேவைத் துறையில் பணி புரிகின்றார்!

உலகிலேயே மிகச் சிறந்த வைத்திய சேவை உள்ள நாடுகளில் சின்னஞ்சிறிய சோசலிச நாடான கியூபாவும் ஒன்று. 11. மில்லியன் (1கோடி 10 இலட்சம்) சனத்தொகை கொண்ட அந்த நாட்டில் 440,000 பேர் வைத்தியத்துறையில் பணி புரிகின்றனர்! அதாவது 25 பேருக்கு ஒருவர்!!

இன்று உலகின் பல நாடுகளில் கியூபா வைத்தியர்கள் பணி புரிகின்றனர். அத்துடன் உலகின் பல நாடுகளிலிருந்து பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கியூபாவுக்கு சென்று மருத்துவம் கற்கின்றனர். சமீபத்தில் மேற்கு ஆபிரிக்காவில் எபோலா (Ebola) என்ற ஆட்கொல்லி நோய் தாக்கிய போது, அங்கும் கியூபா தனது 256 வைத்தியர்களை அனுப்பி வைத்தது.

1959இல் கியூபாவில் ஃபிடல் கஸ்ட்ரோவின் தலைமையில் புரட்சி நடைபெற்று அங்கு ஒரு சோசலிச அரசு அமைந்த நாளிலிருந்து அந்நாட்டின் மீது அமெரிக்கா இறுக்கமான பொருளாதாரத் தடையை மேற்கொண்டு வருகின்றது.

1990இல் சோவியத் யூனியன் வீழ்ச்சி அடைவதற்கு முன்னர், அந்த நாடும் அதன் கிழக்கு ஐரோப்பிய கூட்டாளி நாடுகளும் கியூபாவுக்குத் தாராளமாக உதவி வந்தன. அந்த நாடுகளிலிருந்த சோசலிச அரசுகள் வீழ்ச்சி அடைந்த பின்னர், அந்த உதவிகள் கிடைப்பது குறைந்துவிட்டது. அந்தச் சூழ்நிலையில் கியூபாவின் சோசலிச அரசாங்கம் வீழ்ச்சி அடைந்துவிடும் என அமெரிக்காவும், அதன் மேற்கத்தையக் கூட்டாளிகளும் கனவு கண்டன. ஆனால் அதன் பின்னரும் கியூபா உறுதியுடன் உலக அரங்கில் எழுந்து நிற்கிறது.

அதற்கான காரணம் கியூபாவின் வீரமிக்க மக்கள்தான். மனித வாழ்வுக்கு பொருளாதாரம் ஒரு முக்கியமான காரணம் என்ற போதிலும், மக்களே தீர்க்கமான சக்தி. இதைத்தான் மாஓ, "மக்கள், மக்கள் மட்டுமே வரலாற்றின் உந்துசக்தி ஆவர்" என்றும், "கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இருக்கும் வரை மக்களால் சகலவிதமான அற்புதங்களையும் நிகழ்த்த முடியும்" என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதையே கியூப கம்யூனிஸ்ட் கட்சியும், கியூப மக்களும் செய்கின்றனர்.

கஸ்டரோ முதுமை காரணமாக நாட்டின் தலைமைப் பொறுப்பிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர், அவரது இளைய சகோதரரும், புரட்சியில் பங்கேற்றவருமான ராவுல் கஸ்ட்ரோ ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அவர் காலத்துக்கேற்ற பல பொருளாதார, நிர்வாகச் சீர்திருத்தங்களை மேற்கொண்டதின் விளைவாக, கியூபா ஓரளவு சந்தைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட சோசலிச அமைப்புக்கு மாறியது.

தனிப்பட்ட சிறு விவசாயமும், சிறு கைத்தொழில்களும் அனுமதிக்கப்பட்டன. கைத்தொலைபேசி, இணையத்தள



பாவனைகளுக்கு இருந்த கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டன. வெளிநாடுகளுக்கு செல்வதற்கு இருந்த பல தடைகள் நீக்கப்பட்டன. உல்லாசப்பயணத்துறை மேலும் ஊக்குவிக்கப்பட்டது.

இதுபோன்ற நடவடிக்கைகளினால் மேற்கு முதலாளித்துவ நாடுகளின், சோசலிச கியூப அரசு வீழ்ந்துவிடும் என்ற எதிர்பார்ப்பு முறியடிக்கப்பட்டு, கியூபா தனது நிலையை ஓரளவு ஸ்திரப்படுத்திக் கொண்டது.

அத்துடன் அருகில் உள்ள எண்ணெய் வளம்மிக்க வெனிசூலா சாவேஸ் உயிருடன் இருந்த காலத்தில் இருந்து இன்றுவரை கியூபாவுக்கு பல வழிகளிலும் உதவி வருகின்றது. வேறு சில ஏகாதிப்த்திய எதிர்ப்பு தென் அமெரிக்க நாடுகளும் கியூபாவுக்கு உதவி வருகின்றன. இவை தவிர, சீனா, வியட்நாம் போன்ற சோசலிச நாடுகளும் கியூபாவுக்கு முடியுமான உதவிகளைத் தோழமையுடன் செய்து வருகின்றன.

அத்துடன் அமெரிக்காவும் மேற்கு நாடுகளும் உக்ரைனில் இருந்த ரஸ்யாவுக்குச் சார்பான சட்டபூர்வமான அரசாங்கத்தை வலதுசாரிக் கிளர்ச்சி மூலம் கவிழ்த்த பின்னர், புதிய ரஸ்ய மேற்குலக பனிப்போர் ஆரம்பாகியுள்ள சூழலில், ரஸ்யாவின் புடின் அரசாங்கம் அமெரிக்காவின் கோடிக்குள் இருக்கும் கியூபாவுக்கு புதிய மேலதிக உதவிகளை வழங்க ஆரம்பித்துள்ளது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க இவ்வருடம் கியூபா மேற்கொண்டிருக்கும் வெளிநாடுகளுக்கான மருத்துவ சேவையின் மூலம் அந்நாட்டுக்கு 8.2 பில்லியன் (Billion) டொலர்கள் வருமானம் கிடைக்கும் என அந்நாட்டு நாளிதழான "கிரன்மா" (Granma) தெரிவித்துள்ளது.

இதன் மூலம் உற்பத்தித் துறைகள் மூலம் மட்டுமின்றி, சேவைத் துறைகள் மூலமும் வருமானமீட்ட முடியும் என்பதை, 55 வருடங்களுக்கும் மேலாக அமெரிக்காவின் பொருளாதாரத் தடையால் விலங்கிடப்பட்டிருக்கும் சோசலிச கியூபா நிரூபித்துள்ளது.

- ராகுல் -

# கே.வி. மகாதேவன்

53



தனது நாட்டிலுள்ள பெண்களையெல்லாம் கால் விலங்கிட்டு அடிமைகளாக்கிய செங்கோடனிடமிருந்து என்று தனது நாட்டுப் பெண்கள் விடுதலை அடைகிறார்களோ அன்று வரை தனது கால்களிலும் சங்கிலியால் தானே போட்டுக்கொண்டிருக்கும் விலங்குகளைக் களையமாட்டேன் என்று சபதம் பூணுகிறாள் தலை மறைவாக வாழும் அரசி மங்கம்மா.

அவளது ஒரே வாரிசான மகன் செங்கோடனோ எதிரிகளின் கைகளில் பச்சிளம் பாலகனாக சிக்கிக்கொள்ள அவனை சிறைச்சாலையில் நிமிர்ந்து நிற்கவே முடியாத ஒரு சிறு அறைக்குள் அடைத்து வெளியுலகம் தெரியாத ஒரு மிருகத்தைப் போல வளர்க்கிறான் செங்கோடன்.

அரசி மங்கம்மாவின் மெய்க்காப்பாளன் அவனை சிறையிலிருந்து விடுவித்து தனது ஒரே பேத்தி ஜீவாவின் வசம் ஒப்படைக்கிறான். ஜீவாவினால் புது வாழ்வு பெற்ற வேங்கையன் தனது தாயின் சபதத்தை நிறைவேற்றி வைக்க சந்திக்கும் சவால்களும், அவற்றை அவன் எப்படி எதிர்கொண்டு தனது தாயின் லட்சியத்தை நிறைவேற்றுகிறான் என்பதுதான் "அடிமைப்பெண்" படத்தின் கதை.

- பி.ஜி.எஸ்.மணியன் -

Atlas Against the Cyclops என்ற ஆங்கிலப் படத்திலிருந்து சில காட்சிகளையும், The Weft of Maciste என்ற படத்திலிருந்து சில சம்பவங்களையும் மூலமாக எடுத்துக்கொண்டு அடிமைப்பெண் படம் உருவானது. ஆரம்பத்தில் கதாநாயகியாக சரோஜாதேவியையும், இரண்டாவது நாயகியாக கே.ஆர்.விஜயாவையும் ஒப்பந்தம் செய்து படத்தைத் துவக்கினார் எம்.ஜி.ஆர். ஆனால் சில பல காரணங்களால் இருவரும் படத்திலிருந்து விலகிக்கொள்ள ஜெயலலிதா இரட்டை வேடத்தில் நடிக்கும் விதமாக கதையை மாற்றி அமைத்து படம் உருவானது.

பாடல்களை கவிஞர் வாலி, ஆலங்குடி சோமு, புலமைப் பித்தன், அவினாசி மணி ஆகியோர் எழுதி இருந்தனர்.

முதல் முதலாக "அம்மா என்றால் அன்பு" என்ற வாலியின் பாடலை ஜெயலலிதாவைச் சொந்தக் குரலில் பாடவைத்து முதல் பாடலிலேயே தனது முத்திரையைப் பதித்தார் கே.வி. மகாதேவன். மென்மையான குரலில் மயிலிறகால் மனதை வருடும் வண்ணம் இனிமையாக ஜெயலலிதா பாடியிருக்கிறார்.

அடுத்து இந்தப் பாடத்தின் மூலம் தான் தமிழில் ஒரு பின்னணிப் பாடகராக அறிமுகமானார் எஸ்.பி. பாலசுப்ரமணியம்.

அவருக்கு ஒன்றல்ல இரண்டு பாடல்கள்.

உண்மையில் அந்த "ஆயிரம் நிலவே வா" பாடலை முதலில் டி.எம். சௌந்தரராஜனைத்தான் எம்.ஜி.ஆர். பாடவைப்பதாக இருந்தார்.

ஆனால் ஒலிப்பதிவு நேரத்தில் மதுரையில் தனது மகளின் திருமணம் நெருக்கத்தில் இருந்ததால் "தன்னால் முடியாது" என்று மறுத்தார் டி.எம்.எஸ். எம்.ஜி.ஆர். வற்புறுத்தியபோதும் பிடிவாதமாக டி.எம்.எஸ். மதுரைக்குச் சென்றுவிட்டார்.

அவருக்கு பதிலாக புதிய பாடகர் - இளம் பாடகர் - எஸ்.பி.பி. பட்த்தில் நுழைந்தார்.

புலவர் புலமைப் பித்தன் எழுத தாய்மையைப் போற்றும் பாடல் ஒன்று தயாரானது

வீரத்திலே கவியெழுதி
விளக்கம் சொன்ன குலமகளே
உன் கருணை பொங்கும் ஆலயத்தில்
கவலை என்பதில்லையம்மா
கரை மோதும் நதியினிலே
அம்மா நான் விழுந்தாலும்
மலர்களிலே மாதர் குலம்
மனமிருந்தால் போதுமம்மா
பொன்னளந்து தந்தவளே
புகழ் சுமந்து தந்தவளே
என் உயிரை நான் கொடுத்து
உன் உயிரை அலங்கரிப்பேன்

இந்தப் பாடலை கஜல் பாணியில் கே.வி.மகாதேவன் இசை அமைக்க மனதை வருடும் தனது மென்மையான குரலால் எஸ்.பி. பாலசுப்ரமணியம் பாட பாடல் பதிவானது. எம்.ஜி.ஆர் வந்தார். பாடலைக் கேட்டார். அப்படியே மகாதேவனைக் கட்டித் தழுவிக்கொண்டார். இளம் பாடகர் பாலுவை தட்டிக் கொடுத்துப் பாராட்டினார். அவருக்கு பாடல் [illegible]வாகப் பிடித்துப் போனது.

ஆனால் மற்றவர்கள்?

"பாட்டு நல்லாத்தான் இருக்கு. ஆனால் எடுத்த எடுப்பிலேயே வீரத்தைப் பற்றி இல்லாமல் தாயின் பெருமையைச் சொல்லுற பாட்டாக இருந்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்." என்றார்கள். அரைமனதாக அதை எம்.ஜி.ஆர். ஏற்றுக்கொள்ள ஆலங்குடி சோமு எழுத "தாயில்லாமல் நானில்லை" பாடல் தயாரானது.

டி.எம்.எஸ். பாடினார். அவரது கம்பீரக்குரலில் அமைந்த இந்தப் பாடல் அடைந்த வெற்றி நாடறிந்த ஒன்றுதானே!

"காலத்தை வென்றவன் நீ காவியமானவன் நீ" - பி.சுசீலாவும், எஸ். ஜானகியும் இணைந்து பாடிய பாடல். அவினாசிமணி எழுதிய பாடல் இன்றளவும் காலத்தை வென்று நிற்கும் காவியத் தலைவன் மக்கள் திலகம் அவர்களின் புகழைப் பாடிக்கொண்டே இருக்கிறது.

இந்தப் பாடலில் இறுதியில் ஸ்வரங்களுக்கு பதிலாக ஹம்மிங்கில் பி.சுசீலாவையும், எஸ்.ஜானகியையும் மாற்றி மாற்றிப் பாடவைத்து இருவருக்கும் ஒரு போட்டியையே ஏற்படுத்தி விட்டார் கே.வி.மகாதேவன்.


ஒருவரை ஒருவர் மிஞ்சும் விதமாக இருவரும் பாடியதில் இருவருக்குமே வெற்றிதான்.

பாடலுக்கு மகாதேவன் அமைத்திருக்கும் இணைப்பிசையும், சரணங்களில் அமைத்திருக்கும் வாத்திய இசைக் கோர்வைகளும் மெய்சிலிர்க்க வைக்கின்றன.

இடைவேளைக்குப் பிறகு கதை ராஜஸ்தான் பாலைவனப் பகுதிகளிலும் ஜெய்ப்பூர் அரண்மனையிலும் பயணிக்கிறது.

"அடிமைப்பெண்" கதையில் சில பகுதிகள் அராபியப் பாணியில் இருப்பதால் கொஞ்சம் அராபிய இசை, ரஷ்யாவில் முஸ்லிம்கள் அதிகம் வாழும் "உஸ்பெக்" பகுதி இசையையும் இணைத்து இசை அமைத்திருக்கிறேன்." என்று கே.வி.மகாதேவன் கூறியிருக்கிறார்.

(தொடரும்)



# நிகழ மறுக்கும் அற்புதம்!



கமலின் மூத்தமகள் ஷ்ருதி ஹாசனுக்கு ஆறு வயதில் முதல் பாடலே இளையராஜாவிடம் (தேவர் மகன் - போற்றிப் பாடடி பொண்ணே...).

யுவதியான பின்னும் முதல் பாடல் இளையராஜாவிடமே (ஹே ராம் படத்தில் - ராம் ராம் மற்றும் என் மன வானில் படத்தில் - ரோட்டோரப் பாட்டுச் சத்தம்... ஹே ராம் படத்தில் ஓர் ஓரமாய் நடித்துமிருக்கிறார்).

ஷ்ருதியின் முதல் இசை ஆல்பமான உன்னைப் போல் ஒருவனை வெளியிட்டதும் இளையராஜா தான் ("பெயரிலேயே ஷ்ருதி இருக்கிறதே! இசை எப்படி வராமல் போகும்?" என்று அந்த விழாவில் ராஜா பேசினார்).

இப்போது சமீபத்தில் ஆசையைக் காத்துல தூது விட்டு பாடலை Shamitabh படத்தில் Stereophonic Sannata பாடலாக மறு ஆக்கம் செய்த போது ராஜா பாட அழைத்தது ஷ்ருதியைத்தான்!

ஷ்ருதி ஹாசன் இதுவரை பாடியிருக்கும் மற்றும் சில பாடல்கள்: அடியே கொல்லுதே (வாரணம் ஆயிரம்), எவன் இவன் (உதயன்), ஏலேலமா (7 ஆம் அறிவு), சொக்குப் பொடி (முப்பொழுதும் உன் கற்பனைகள்), கண்ணழகா (3), Shut Up Your Mouth (என்னமோ ஏதோ), உன் விழிகளில் (மான் கராத்தே)

ஷ்ருதி ஹாசன் இசையமைத்த படம் - உன்னைப்போல் ஒருவன்.

நடிக்க வந்து ஐந்தாண்டுகள் ஓடி விட்டன. இசையமைத்து, பாடி, ஆடி - நடித்து பொப் வீடியோ ஆல்பங்கள் வெளியிடும் திறமை அத்தனையும் ஒருங்கே அமைந்திருந்தும் இன்று வரை அவர் அதை செயற்படுத்தவில்லை. தெலுங்கு மசாலாப் படங்களிலும், இரண்டாம் நிலை இந்தித் திரைப்படங்களிலும் நடித்துக் கொண்டிருக்கிறார். அவற்றில் அவரது பங்களிப்பு என்பது வெறும் உடலை மட்டும் பிரதானப்படுத்திய கவர்ச்சி நடனங்களாகவே இருக்கிறது. அல்லது சாதாரண நடிப்பு.

ஒரு வசீகரமான பொப் பாடகி உருவாவதை ஓர் அமெச்சூர் நடிகை அழித்துக் கொண்டிருக்கிறார். ஷ்ருதி ஹாசன் என்பவரின் தனித்துவம்? அடையாளம்? சுயம்? நாளை வரலாற்றில் என்னவாக இடம் பெறப் போகிறார் ஷ்ருதி? பத்தோடு ஒன்று பதினொன்றாக இருக்கும் நடிகையாகவா? அல்லது இந்தியாவின் முதல் வெற்றிகரமான பொப் பாடகி என்கிற அந்தஸ்தா?


இங்கே ஏற்கெனவே பொப் துறையில் இருந்தவர்கள் அவ்வளவாய் சாதிக்க முடியவில்லை. அலீஷா, ராகேஸ்வரி, சுசித்ரா கிருஷ்ணமூர்த்தி, வசுந்தரா தாஸ் போன்றவர்கள் உதாரணம் (தற்போது நோரா ஜோன்ஸ் வெற்றிகரம் தான் என்றாலும் அவரை இந்தியராகப் பார்க்க முடியவில்லை). அந்த வெற்றிடத்தை ஷ்ருதி ஹாசன் நிரப்ப முடியும்.

இந்த ஜனவரி 28 அவருக்கு 29 வயது பூர்த்தியாகிறது. இந்தியர்கள் பொதுவாய் 40 வயதடைந்த பெண்களை உடல்ரீதியாய் இரசிப்பதில்லை. டிவி சீரியல்களுக்கோ தொழிலதிபர் மனைவிக்கோ சிபாரிசு செய்து விடுகிறார்கள். அந்த வகையில் ஷ்ருதிக்கு இன்னும் ஒரு தசாப்தமே மிச்சமிருக்கிறது. அதற்குள் அவரது தனித்துவத்தை அவர் எழுதியாக வேண்டும். நடிப்பல்ல அவரது துறை. பொப் இசைத் துறையில் ஷ்ருதி ஹாசன் சர்வதேச அளவில் புகழ் பெற முடியும்.

**- சரவணகார்த்திகேயன்**

# எடிசனின் வால்மீகி





வக்லவ் ஸ்மில்

அடிப்படை மின்சார கொள்கையை உள்வாங்கவில்லை. சீரீஸ் பரலெல் மின்சார வித்தியாசம் ஒன்று. பரலெலில் எல்லாம் ஒரே வோல்டேஜ்ஜில் இயங்கும். தனித்தனியாக ஸ்விட்ச் வைக்கலாம், மீற்றர் வைக்கலாம். இரண்டாம் கொள்கை மெல்லிய கம்பி, உயர்ந்த ரெஸிஸ்டன்ஸ் - கம்பி செலவு குறையவும், கனமின்றி இருக்கவும், பளிச்சிட்டு ஒளிவீசவும், இவை முக்கியம்.

இது மட்டுமின்றி வேகமாக சூடாகி மிளிர வேண்டும், சீக்கிரம் எரிந்து விடக் கூடாது, மலிவாக இருக்கவேண்டும்.

எடிசனின் வெற்றிகள் மட்டும் போதவில்லை மின்சார புரட்சிக்கு. நேரடி மின்சாரம் என்ற பிடிவாதத்தில் எடிசனுக்கு வரலாற்றில் கெட்டபெயர். இதில் நிக்கோலா டெஸ்லாவின் மாற்று மின்சாரம் வழி வகுத்தது. இண்டக்ஷன் மோட்டார் டெஸ்லாவின் மற்றொரு பங்கு - எடிசனை விட பெரும் மேதாவியாகவும், தொலைநோக்குள்ளவராகவும், எடிசனால் ஏமாற்றப்பட்டவருமாக டெஸ்லாவை பலர் இன்று கருதுவதும் உண்டு. இது அபாண்டம். மற்றும், சத்தமின்றி இயங்கும் ட்ரான்ஸ்ஃபோர்மர்களின் பங்கையும் வக்லவ் ஸ்மில் விளக்குகிறார்.

மின்விசிறி, தொலைபேசி, வானொலிப் பெட்டி, தொலைக்காட்சி, சலவை இயந்திரம், குளிர் பெட்டி ஃப்ரிட்ஜ், குளிர் சாதன ஏசி, கணனி இவை யாவும் செல்வந்தரின் சொகுசில்லை அன்றாட வாழ்வின் யதார்த்தம். மிகச்சாதாரணமான அற்புதங்களை நாம் பாராட்டுவதில்லை, கொண்டாடுவதில்லை. ஏன்? அறிவாற்றல் போதாது என்றோ உணர்ச்சி பரவசம் ஏற்படவில்லை என்றோ இயந்திரத்தின் மேல் ஈர்ப்பு இல்லை என்றோ சொல்லலாம்.

விஞ்ஞானத்திற்கு, குறிப்பாக பொறியியலுக்கு ஒரு வால்மீகி இல்லை. ஜுல்ஸ் வெர்ணும், ஆர்த்தர் கிளார்க்கும் ஓரளவே இதை செய்தனர். உயிரியலின், பரிணாம தத்துவத்தின் வால்மீகி, டார்வினை மிஞ்சிய அல்ஃப்ரட் ரஸ்ஸல் வாலஸ் எனலாம். அதுபோல எடிசனின் வால்மீகி வக்லவ் ஸ்மில்.

மைக்ரோசொஃப்ட் நிறுவனர் பில் கேட்ஸ், சமீபத்தில், "நான் மிகவும் எதிர்பார்த்து படிப்பது வக்லவ் ஸ்மில்லின் புத்தகங்களை" என்று அறைகூவி, சலசலப்பை ஏற்படுத்தியுள்ளார். எடிசனையும் அப்பிள் நிறுவனர் ஸ்டீவ் ஜொப்ஸையும் ஒப்பிட்ட வக்லவ்வின் கட்டுரை புல்லரிக்க வைப்பது. நீங்களும் படிக்கலாம்.

எடிசனின் சாதனை எத்தகையது. அவர் எப்படி வரலாற்றில் பிரமாண்டமாக நிற்கிறார்.

மின் விளக்கும் ஒலித்தட்டும் எடிசனின் சாதனை என்று நாம் பாடசாலையில் படிக்கிறோம். மின்விளக்கல்ல, ஆராய்ச்சிப் பிரிவை படைத்ததே எடிசனின் மாபெரும் வரலாற்று காணிக்கை என்று வாதிடுவோரும் உண்டு. வக்லவ் ஸ்மில் என்ற அறிஞர் எடிசனின் தொலை நோக்குப் பார்வையையும், திட்டமிடும் திறமையையும் அற்புதமாய் தனது நூலில் சொல்கிறார்.

மின் விளக்கு தயாரிக்க பலர் முயன்றனர். ஆனால் ஒரு விளக்கு எரிந்தால் போதாது. நீண்ட நேரம் எரிய வேண்டும். மின்சார உற்பத்திக்கு டைனமோ ஜெனரேட்டர் வேண்டும், நிலக்கரி வேண்டும். மின்கம்பி வேண்டும். மின்சாரம் வோல்டேஜ் எகிறிகுதித்தால் சேதமாகாமல் தடுக்க ஃப்யூஸ் வேண்டும். கம்பெனி நடத்தி இலாபம் செய்ய முதலீடு வேண்டும், மின்வணிகம் தொடர மின் பயன் அளந்து கட்டணம் வசூலிக்க மின்சார மீற்றர் வேண்டும். இவை எல்லாவற்றையும் வேண்டும் என்று உணர்ந்த ஒரே விஞ்ஞானி, மனிதன் எடிசன் மட்டும் தான்.

மின் விளக்கு ஆய்வு நடக்கும் போதே இக்கருவிகளையும் உருவாக்கும் ஆய்வையும் எடிசன் மேற்கொண்டார். படிக்கப் படிக்க அடுக்கடுக்காய் மிரளவைக்கும் ஆய்வுகள்! நிலக்கரி சக்தியில் நீராவி செய்யும் இயந்திரங்களை தயாரிக்கும் கம்பெனிகள் அன்றே இருந்தன - ஜேம்ஸ் வாட் தொடங்கி வைத்த தொழிற்சாலை புரட்சியால். ஆனால் அவற்றை வைத்து மின்சாரம் செய்யும் டைனமோ செய்யவேண்டும். அன்று காரும் லொறியும் கிடையாது, நிலக்கரி சுரங்கத்திலிருந்து ரயிலிலும், ரயில் நிலையத்திலிருந்து குதிரை வண்டியிலும் இந்த மின் உற்பத்தி நிலையங்களுக்கு வர வேண்டும்.

மிக முக்கியமாக, மற்றவரெல்லாம் இரு

**வ.மி.கோபு -**

## குறுஞ்செய்தி முத்துக்கள்...



சிலை கூட செதுக்கினால்தான் அழகு
மலை கூட உயரமாக
இருந்தால்தான் அழகு
இமை கூட மூடினால்தான் அழகு
கண்ணீர் கூட சிந்தினால்தான் அழகு
வியர்வை கூட நிலத்தில்
விழுந்தாத்தான் அழகு

எல்லா மனிதர்களையும் நம்புவது ஆபத்து...
ஒருவரையும் நம்பாமல் இருப்பது பேராபத்து.

ஆடம்பரம் என்பது நமக்கு நாமே
ஏற்படுத்தும் வறுமை.

அதிர்ஷ்டம் என்பது வாய்ப்பல்ல...
உங்களது அயராத உழைப்பே...
சரியான சந்தர்ப்பத்தை உழைப்பு
சந்திக்கும் தருணமே அதிர்ஷ்டம்!

திறமைகள் இருப்பது பிரசாதம்
அதைப் பயன்படுத்தி முன்னேறும்
தெளிவு பெற்றிருப்பது
வரப் பிரசாதம்.

ஓர் அறிஞனோடு சேர்ந்தால் அறிஞர் ஆகலாம்.
ஆனால் பணக்காரனோடு சேர்ந்தால்
பணக்காரன் ஆகிவிட முடியாது!

உன்னைத் தாழ்த்திப் பேசும்போது ஊமையாய் இரு...
உன்னை உயர்த்திப் பேசும்போது செவிடனாய் இரு...

காயமில்லாமல் கனவுகள் காணலாம்...
ஆனால், வலிகள் இல்லாமல்
வெற்றிகளைக் காண முடியாது.

ஆயிரம் கடவுள்களை நம்பினாலும்
உன்னை நீ நம்பாவிட்டால்...
எந்தப் பயனும் இல்லை.

ஹீரோவாக நடிப்பதல்ல சிரமம்.
ஹீரோவாக
வாழ்வதுதான் சிரமம்.

சோம்பேறிகள் காலத்தை மதிப்பதில்லை.
காலம் சோம்பேறிகளை மதிப்பதில்லை.

சோம்பல் எல்லாவற்றையும்
கடினமாக்கும்
சுறுசுறுப்பு எல்லாவற்றையும்...
எளிதாக்கும்.

தப்பு என்று உன்னிடம்
ஒருத்தன் ஏற்றுக்கொள்கிறான் என்றால்...
அவனுக்கு...
தன் ஈகோவைவிட
நீ முக்கியம் என்று புரிந்துகொள்...


வாழ்க்கை என்பது
ஒரு மாறுபட்ட பரீட்சை
மற்றவர்களைப் பார்த்து கொப்பி அடிப்பதனால்,
நிறையப் பேர் ஃபெயில் ஆகிப் போகிறார்கள்.
அவர்களுக்குத் தெரிவதில்லை..
ஒவ்வொருவர் கையிலும் கொடுக்கப்பட்டவை
வெவ்வேறு கேள்வித்தாள்கள் என்று.

அடுத்தவனுக்குக் கிடைத்துவிட்டதே என்று
மனிதன் பொறாமைப்படாத ஒரே விஷயம்,
மரணம்தான்.





பூநகரி பிரதேச செயலகத்தினூடாக வலிகளின் பொறிகள் (கவிதை) அறியாமை (குறும்படம்) கூத்துக்கலைகளின் காவலர்கள் (ஆய்வுக்கட்டுரை) ஆகியவற்றின் வெளியீட்டுவிழா அண்மையில் பூநகரி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இதில் கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் கலைப் பொருட்களை காட்சிப் படுத்துவதையும், கவிஞர் த.ஜெயசீலன் உரையாற்றுவதையும் படைப்புக்கள் வெளியிட்டு வைக்கப்படுவதையும் காணலாம். (160, 63)



# நிகழ்வுகளின் பதிவுகள்....

கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்கு 2014ஆம் ஆண்டிற்கான அனர்த்த முகாமைத்துவத்திற்கான சிறந்த தலைமைத்துவத்திற்கான விருது வழங்கப்பட்ட நிலையில் அவரைப் பாராட்டும் முகமாக கரைச்சி பிரதேச செயலர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவித்தபோது... (90)



முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தாவின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து பெறப்பட்ட ஒலிபெருக்கி சாதனங்களை காரை. வேரப்பிட்டி ஸ்ரீகணேசா வித்தியாசாலை அதிபரிடம் காரை. பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவர் வீ. கண்ணன் வழங்கி வைப்பதைக்காணலாம்.





வேலணைப்பிரதேச சபையின் வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு அண்மையில் பிரதேச சபையின் மண்டைதீவு உப அலுவலகத்தில் நடைபெற்றபோது..



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் புதிய கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் எதிர்வரும் 6ஆம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது. கட்டடத்தின் தோற்றத்தைக் காணலாம். (160)



கழிவகற்றும் செயற்பாட்டை முன்னெடுக்கும் வகையில் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக்கு திண்மக் கழிவகற்றும் இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது. (18)

# கல்வி அமைச்சின் மரநடுகை வேலைத்திட்டம்

# புதுவருடத்தன்று 4 மில்லியன் மரங்கள் நடுகை

## தேசிய ரீதியில் முன்னெடுப்பு

கல்வி அமைச்சின் விவசாய மற்றும் சூழல் கல்விக் கிளையினால் "இன்று நாம் பயிரிடுவோம் நாளை பயன் பெறுவோம்" தமிழ் சிங்களப் புத்தாண்டு சுபவேளையில் பயன்மிக்க நான்கு மில்லியன் மரங்களை நடும் தேசிய வேலைத் திட்டம் வருடாந்தம் அமுல்படுத்தப்பட்டுவரும் நிலையில், ஏப்ரல் மாதம் 14 ஆம் திகதி பயன்மிக்க மரங்களை நமது வீட்டுத் தோட்டத்தில் நாட்டுவதற்காக மாணவர்களுக்கு நான்கு மில்லியன் மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

மரங்களை நாட்டும் தேசிய வேலைத்திட்டத்தின் மூலம் பாடசாலை மாணவர்களை மர நடுகைக்காக ஆர்வம் ஊட்டல், சூழல் பாதுகாப்பு மற்றும் சூழலை அழகுபடுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல், பாடசாலை மற்றும் சமூகங்களுக்கிடையிலான தொடர்பினை விருத்தி செய்தல், பயன்மிக்க மரங்களை நாட்டுவ்தன் மூலம் பொருளாதாரப் பயன்களைப் பெறல், தமிழ் சிங்களப் புத்தாண்டு சுபவேளையில் கூட்டு பயன்மிக்க செயற்பாடுகளில் ஈடுபடல் போன்வற்றை செயற்படுவதே இதன நோக்கமாகும்.

நாட்டுவதற்குப் பொருத்தமான மரக்கன்றுகளை தேர்ந்தெடுத்தல் மற்றும் பாடசாலைகளில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுவதுடன் அதற்காக பாடசாலைகளின் அதிபர்கள் மற்றும் உரிய ஆசிரியர்கள்ள வலய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்த வேண்டும்.


அத்துடன் அதிபர், பிரதி அதிபரின் தலைமையில் சகல ஆசிரியர்களையும் இணைத்துக் கொண்டு வகுப்பு மட்டத்தில் மரக் கன்றுகளுக்கான நாற்று மேடைகளை தயாரித்து அவ்வவ் வகுப்பில் மாணவர்களுக்குத் தேவையான மரக் கன்றுகளை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன் நாட்டப்படும் மரக்கன்றுகளை பார்த்தல், பராமரித்தல் மற்றும் அறிக்கைகளைப் பேணுவது அத்தியாவசியம் என்பதுடன் அவர்கள் நடும் மரக்கன்றுகள் தொடர்பாக சகல மாணவர்களினதும அறிக்கைகளைப் பேண வேண்டும்.

இம்மரக் கன்றுகள் 2015 ஏப்ரல் மாதம் புத்தாண்டில் பாடசாலை விடுமுறைக்கு முன்னர் மாணவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் வீட்டுத் தோட்டங்களில் கூடுதலான மரங்களை நடுவதற்கு. இட வசதி அற்ற சந்தர்ப்பங்களில் மாத்திரம் சாடிகளில் நடுவதற்கு பொருத்தமான மற்றும் பயன்மிக்க மரங்களை நாட்ட வேண்டும்.

(உதாரணம் : சிறு தோடம்பழம், தேசிக்காய் மற்றும் தமது பிரதேச காலநிலைக்கு ஏற்றவாறு மரக்கன்றுகளை தேர்ந்தெடுப்பது தொடர்பில் கவனம் செலுத்துவது அத்தியாவசியமாகும்.

இவ்வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக்குவதற்காக பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை இளைஞர் விவசாயக் கழகம் மற்றும் சூழல் குழு, சங்கங்கள் போன்ற அமைப்புக்கள் ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. (66)



வவுனியா தமிழ் விருட்சம் சமூக ஆர்வலர்கள் அமைப்பால் வறுமை நிலையால் கல்வியை தொடர முடியாமல் பாதிக்கப்படும் வீரபுரம், மெனிக்பாம் மாணவர்கள் 8பேருக்கு கற்றல் உபகரணங்கள் வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களத்தால் கேட்டு கொண்டதற்கு இணங்க அந்நிறுவனத்தால் வழங்கப்பட்டுள்ளது. (90)

# கரணவாய் செல்வாபுரம் வீதி புனரமைப்பு எப்போது?

## – கேள்வி எழுப்பும் மக்கள்

(கரணவாய்)

கரணவாய் செல்வாபுரம் வீதி பல வருடங்களாக திருத்தப்படாத நிலையில் காணப்படுவதால் இவ்வீதியூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர் நோக்குவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

நீண்டகாலமாக இவ்வீதி எவ்வித புனரமைப்பும் இன்றி குண்டும் குழியுமாக காணப்படுவதாகவும் மழைகாலங்களில் வெள்ள நீர் தேங்கி போக்குவரத்து செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட வீதிகள் புனரமைக்கப்பட்டுவரும் நிலையில் குறித்த வீதியை புனரமைப்பது தொடர்பில சபை எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை என தெரிவிக்கும் மக்கள் இவ்வீதியால் நாளாந்தம் பாடசாலை மாணவர்கள், அரச அலுவலர்கள், வியாபாரிகள் எனப்பலர் சிரமத்துடன் பயணத்தை மேற்கொள்வதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே மக்களின் போக்குவரத்துத் தேவையை கருத்திற்கொண்டு குறித்த வீதியை புனரமைக்க பிரதேசசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (18)

# கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்ட ஏற்பாடு

மண்டைதீவு பூம்புகார் பூமாவடி கண்ணகை அம்பாள் ஆலயத்தின் மூலஸ்தான புனருத்தாரணப்பணிக்கு அடிகல் நாட்டும் விழா இன்று திங்கட்கிழமை காலை நடைபெறவிருப்பதாக ஆலய திருப்பணி சபையினர் அறிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பாலஸ்தாபன நிகழ்வைத்தொடர்ந்து முழுமூலஸ்தானத்தையும் புதியதாக அமைக்கும் பணிக்கு திருவருள் கூடி இருப்பதால் எதிர்வரும் வாரங்களில் புனருத்தாரண பணிகள் அடிக்கல் நாட்டுதலையடுத்து விரைவுபடுத்தப்படும்.

முன்னான் ஆலய பூசகர் சபாபதிப்பிள்ளையின் ஞாபகார்த்தமாக தற்போதைய பூசகர் ச.விஜயகுமாரன் தலைமையில் இந்த திருத்தப்பணிகள் நடைபெறவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. காலத்தால் இந்தக் கிராமத்தின் காலத்தால் மிக முந்திய பொது மக்கள் ஆலயமாக இந்த கோவில் உள்ளதென்பது குறிப்பிடத்தக்கதாகும். (23)




## வடக்கு மாகாண சபை முகாமைத்துவ உதவியாளர்கள் (திறந்த போட்டிப் பரீட்சை - 2015)

வடக்கு மாகாண சபை அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் அல்லது ஆங்கிலம் மொழி மற்றும் கணிதம் அடங்கலாக நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் சாதரண பொதுப் பரீட்சை மற்றும் பொது ஆங்கிலம் தவிர்ந்த ஏனைய எல்லாப் பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

நான்கு பாடங்கள் உள்ளடக்கிய பழைய பாடத்திட்டத்தின் கீழ 3 பாடங்கள் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் போதுமானது

விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சை எதிர்வரும் மார்ச் மாதம் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, கனகராயக்குளம், சாவகச்சேரி, நெல்லியடி போன்ற இடங்களில் நடைபெறும். பரீட்சையானது மொழித்திறன் நுண்ணறிவு போன்ற விடயங்களைக் கொண்ட வினாத்தாளாக அமையும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைக் கட்டணம் 500/- ஆகும். இக்கட்டணத்தினை வடக்கு மாகாணசபைக்குள் அமைந்துள்ள எந்தவொரு பிரதேச செயலகத்திலும் செலுத்திப பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு அலுவலகம், வடக்கு மாகாணம், இல.481, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2014 (2015 எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

## கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர்கள் (திறந்த போட்டிப் பரீட்சை)

இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைத் தொகுதியின் III ஆம் தர கட்டடப் பரிசோதகர் பதவி நிலைகளை நிரப்புவதற்காக உரிய தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து அஞ்சல் அதிபரினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரிகள் க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களை உள்ளடக்கியதாக நான்கு பாடங்களில் திறமைச்சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் பிரயோக கணிதம் அல்லது தூய கணிதம் அல்லது இணைந்த கணிதம் மற்றும் பௌதிகவியல் பாடம் அடங்கலாக அனைத்து விஞ்ஞானப் பாடங்களிலும் (பொதுப் பரீட்சை தவிர்ந்த) ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பழைய பாடத்திட்டமாயின் ஒரே தடவையில் 3 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் போதுமானது.

மேற்படி பதவி நிலைக்கு மேலதிக தகைமைகளாக பின்வருவன கொள்ளப்படுகின்றன.

தேசிய தொழில் திறமை (NVQ) 6 மட்டத்திலான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்

அல்லது

மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற தேசிய தெழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படுகின்ற தேசிய பொறியியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படுகின்ற தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா

அல்லது

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப டிப்ளோமா

அல்லது

இலங்கை பொறியியலாளர் நிருவாகத்தினால் நடத்தப்படுகின்ற பொறியியல் பரீட்சையில் முதலாவது பகுதியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல்.

அல்லது

உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பச் சான்றிதழ் வழங்கப்படுகின்ற நிறுவனங்களிடமிருந்து விசாரித்து கருத்துக்கள் பெறப்பட்டதன் பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பத் தகைமைகளுக்கு எல்லா விதத்திலும் சமமானது என மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற பிற தொழில்நுட்ப தகைமைகளைப் பெற்றிருத்தல்.

விண்ணப்பதாரிகள் அஞ்சல் திணைக்கள இணையத்தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பத்திற்கேற்பதயாரித்து எதிர்வரும் மார்ச் மாதம் 2 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒருங்கமைப்பு மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கை பரீட்சைகள் திணைக்களம் த.பெ. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

விண்ணப்பத்தினை வைத்து அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் இலங்கை அஞ்சல் திணைக்களத்தின் கண்காணிப்பு முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்ப சேவைகள் III ஆம் தர கட்டடப் பரிசோதகர் பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடத்தப்படும் திறந்த போட்டிப் பரீட்சை 2015 எனக் குறிப்பிடுதல் வேண்ம்.

விண்ணப்பதாரிகளுக்கான பரீட்சைக் கட்டணம் 600/- ஆகும். இதனை எந்தவொரு அஞ்சல் அலுவலகத்திலும் செலுத்திப் பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தொகுப்பு : சி.என்.சாள்ஸ்

### புலிகளுக்கு ஆதரவாக செயற்பட்டால்

## தண்டனை கிடைப்பது நிச்சயம் அமெரிக்கா மீண்டும் அறிவிப்பு



பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

1997ஆம் ஆண்டு முதல் தமிழீழ விடுதலைப் புலிகள் தடை செய்யப்பட்ட வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களில் ஒன்றாக பட்டியலிடப்பட்டுள்ளது என சுட்டிக் காட்டியுள்ளது.

எனவே புலிகளுக்கு ஆதரவாக செயற்படும் தரப்பினர் அமெரிக்க பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தின் அடிப்படையில் தண்டிக்கப்படுவர் என தெரிவித்துள்ளது.

அமெரிக்கா புலிகளுக்கு ஆதரவினை வழங்கியதாக அண்மையில் ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க குற்றம் சுமத்தியிருந்தார்.

புலிகளுக்கும், அமெரிக்காவிற்கும் இடையிலான தொடர்புகளை குமரன் பத்மநாதனைக் கொண்டு அறிந்துகொள்ள முடியும் என அவர் குறிப்பிட்டிருந்தார். இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் பதிலளித்த அமெரிக்கத் தூதரகம் இதனைத் தெரவித்துள்ளது.

2002ஆம்ஆண்டு தற்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க பிரதமராக கடமையாற்றிய காலத்தில் புலிகளுக்கு எதிரான அரசாங்கத்தின் பலம் பலவீனம் பற்றி இரகசிய அறிக்கை ஒன்றை அமெரிக்கா வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பரமர் சங்கமம்

'கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது' எண்ட கதை சுவாரஸ்யமானது. இந்தக் காலங்களில் கிணறு வெட்டப் பூதம் கிளம்பியதெண்டால் எங்களை விசித்திரமான பிறவியைப் பார்ப்பது போலை இப்பத்தே ஆக்கள் பாப்பினம்.

கிடங்கு வெட்ட அத்திபாரம் கிண்ட வந்ததெல்லாம் எலும்புக் கூடுகளும் மண்டை ஓடுகளுந்தானே! அது அந்தக் காலம். இது இந்தக் காலம். மகிந்தரின் காலத்தில் நடந்த திருகு தாளங்களெல்லாம் மைத்திரியர் காலத்தில் துலங்குவதையும் கிணறு வெட்டப்பூதம் கிளம்பியதாகச் சொல்லலாம்.

கடந்த 9 ஆம் திகதி தான் மைத்திரியர் ஆட்சிக் கட்டில் ஏறினார். 8 ஆம் திகதி இரவு அலரிமாளிகையில் நடந்தேறிய சதிப்புரட்சிக்கான ஆலோசனைகள் தேசத்துரோகங்க்ளாகப் பரிணமித்துக் கொண்டிருப்பது மட்டுமே புதினமாக வந்திருக்கு? அங்கை அலரிமாளிகையில் 2 ஆயிரத்து 100 கோடி ரூபாவுக்கும் மேலாக பணம் அகப்பட்டுள்ளதும் புதையல் அல்லவா?

முற்காலங்களில் இப்பத்தையப் போலை பாங்குகள் களஞ்சியப்படுத்தும் கட்டுமானங்கள் இருக்கேல்லை. மன்னரென்ன வசதிபடைத்த நிலப்பிரபுக்களாக வாழ்ந்த மக்களும் பொன்பொருள் பணமெல்லாத்தேயும் கிடாரங்கள முடாக்களில் நிரப்பி நிலத்தைத் தோண்டித் தாட்டு வைத்தே பாதுகாத்து வந்தினம். அவேன்ரை காலம் முடிய நிலத்தடி வைக்கப்பட்டவை கிணறு வெட்டேக்கை வெளிப்படும.

இதைத்தான் பூதம் காத்தமாதிரி புறப்பட்டிருக்கொண்டு என்று சொன்னவை, மகிந்தரின் தேட்டம் எக்கச்சக்கம். காலித்துறை முகத்தில் கப்பலொண்டில்20 கொள்கலங்களில் மூவாயிரம் சுடுகலங்களும் ஐஞ்சுலட்சம் ரவையளும் வேறுபாதுகாப்பு மிதவைகளும் கண்காணிப்புடன் வைக்கப்பட்டிருந்தது. பின்பாக கடற்கொள்ளைக் காரர்களை அடக்கும் வேறொரு நாட்டின் வைப்பெனச் சொல்லப்பட்டது.

அலரிமாளிகையில் கண்டெடுக்கபபட்ட ஆயுதங்களோன்? மேலும் சபுகஸ்கந்த களஞ்சிய சாலையில் பிடிபட்ட மகிந்தர் மகன் நாமல் படங்கள் பொறிக்கப்பட்டிருந்த 68ஆயிரம் சவர்க்காரங்கள் வாழைச்சேனேலை மகிந்தர் படம் பொறித்துள்ள அப்பியாசக்கொப்பிகள் புத்தகப் பைகள் மட்டுமா? நூற்றுக்கணக்கான ஜனாதிபதி மாளிகைக்குச் சொந்தமான வாகனங்களெண்டு புதையல்கள் தோண்டத் தோண்ட அதிகரிக்கின்றன. சிராந்தியிடம் 100 கிலோ தங்கம் இத்தியாதி. இத்தியாதி முன்னாள் ஜனாதிபதிச் செயலாள்ர் சொல்கிறார் அத்தனையும் பழுதடைந்த வாகனங்களாம் சொல்றவன் சொன்னால் கேக்கிறவனுக்கு என்ன மட்டெனன்றும் சொல்லுவினம் சாப்பிட்டவன் கையால் காகம் துரத்தினால் விழும் படுக்கை யள்தான் இவ்வளவும் வன்னியில் எடுத்த பவுண் பண மெங்கை எண்ட கேள்வியளும் கேக்கப்படுகிறதெல்லே?

சாட்டுக்குத் தேர்தலுக்கு முன்னாலை கிளிநொச்சி மக்களை இலவசமாய் ரயிலில் ஏத்தி அலரிமாளிகையில் சைச்சுக் குடுத்த நகையள் முழுவதுமாகிவிடுமா? நிலத்தை வெட்டினால் நீரும் தோண்டினால் மாணிக்கமும் எடுத்த எங்கட நாட்லை கடந்த வருடங்களிலை மனித எலும்புகளும் மண்டையோடுகளுமே வந்தன.

இப்ப எந்தப் புதையலையும் தோண்டாமலே பூதங்களாகக் கிளம்பும் உண்மைகள் மைத்திரியாரை வரலாற்றில் மகிந்தருக்குப் பூதமாகவே காட்டவும் கூடும் இல்லையே பின்னை சொல்லுங்க பாப்பம்...

## ஐ.நா.வில் மற்றுமொரு தீர்மானம்

## தயாராகிறது நகல் வரைவு

(கொழும்பு)

இலங்கை தொடர்பாக எதிரான மற்றுமொரு தீர்மானத்தை ஐ.நா மனித உரிமை பேரவையில் முன்வைக்க அமெரிக்கா தயாராகி வருகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஜெனிவாவில் நடைபெறும் மனித உரிமை பேரவையின் கூட்டத் தொடரில் இந்த யோசனையை சமர்பிக்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது. 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்ட யோசனைகளின் தொடர்ச்சியாக இந்தக் புதிய யோசனை அமையும் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் துணை ராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால் இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார். இவர் தனது விஜயத்தின் போது இலங்கையின் உயர்மட்ட தரப்பினரை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளார். கொழும்பில் நடைபெறும் முதல் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் பிஸ்வால், யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

இலங்கை விஜயத்தை முடித்து கொள்ளும் துணை ராஜாங்க செயலாளர் எதிர்வரும் 3 ஆம் திகதி பிரித்தானியா நோக்கி புறப்பட்டுச் செல்ல உள்ளார். இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்பட உள்ள யோசனை குறித்து அவர் பிரித்தானிய அரசாங்கத்துடன் கலந்துரையாட எண்ணியிருப்பதாக கூறப்படுகிறது. இதன் பின்னர் ஜெனிவா சென்றும் அவர் இந்த விடயம் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளதாக தெரியவருகிறது.

## ஆயிரம் முறைப்பாடுகள் மீது விசாரணைகள் ஆரம்பம்

கடந்த அரசாங்கத்தின் போது ஜனாதிபதி முறைப்பாட்டுப் பிரிவுக்கு கிடைக்கப் பெற்று, விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாத 1000 இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக சட்டம், சமாதானத்துக்கான அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாடுகளில் பெரும்பாலானவை, கடந்த அரசாங்கத்தின் அமைச்சர்கள், மாகாண, உள்ளூராட்சி சபைகளின் பிரதிநிதிகள் தொடர்பில் காணப்படுவதாகவும் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

## இன்று விசேட அமர்வு



நாடாளுமன்றத்தின் விசேட அமர்வு இன்று இடம்பெறவிருக்கின்றது.

பிரதம நீதியரசர் விவகாரம் தொடர்பில் விவாதம் நடத்துவதற்கே இன்று இந்த விசேட அமர்வு நடத்தப்படவிருக்கின்றது.

இந்த விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதியே விவாதம் நடத்தவேண்டும் என்று எதிர்க்கட்சி வலியுறுத்தியது.

எனினும், கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் இன்று விசேட அமர்வை நடத்துவதற்கு தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

## ஊடக சுதந்திர மேம்பாடு புதிய அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையில் ஊடக சுதந்திரம் மேம்படும் சூழலை உறுதி செய்யுமாறும், அது குறித்து அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட சுயாதீன குழு ஒன்று இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கும் குழு எனப்படும் இவர்கள், இது குறித்து இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு திறந்த கடிதம் ஒன்றை எழுதியுள்ளனர். அவர் இந்த நாட்டின் புதிய அத்தியாயத்தை எழுத வாய்ப்புள்ளதாக, ஊடகவியலாளர்களை பாதுகாக்கும் குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் ஜோயல் சைமன், அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த காலங்களில் இலங்கை ஊடகவியலாளர் எதிர்நோக்கிய பிரச்சினைகளும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அத்துடன் தங்களது நிர்வாகத்தில் ஊடகவியலாளர்கள் கொலை, காணாமற் போதல் போன்ற விடயங்கள் குறித்து நம்பகமான விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள குறித்த குழுவினர், குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளனர்.

## கைமாறிய சொத்து விசாரணை ஆரம்பம்

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு சொந்தமான வீடு ஒன்று முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்காவுக்கு கைமாறியது எப்படி என்பது தொடர்பாக விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன.

முன்னாள் உயர்கல்வி அமைச்சர எஸ்.பி.திஸாநாயக்க, கொழும்பு 7இல் உள்ள வீடு ஒன்றை போலி ஆவணங்களைச் சமர்ப்பித்து சுருட்டியதாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது.

இந்த வீடு கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதன் கடைசி உரிமையாளராக கலாநிதி சிவா சின்னத்தம்பி என்பவர் இருந்துள்ளார். இவரே, குறித்த வீட்டை கொழும்பு பல்கலைக் கழகத்துக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

2000ஆம் ஆண்டு சிவா சின்னத்தம்பியின் மறைவை அடுத்தே முன்னாள் உயர்கல்வி அமைச்சர் குறித்த வீட்டை போலி ஆவணங்களை சமர்ப்பித்து கைப்பற்றிக் கொண்டதாக தெரியவந்துள்ளது. இந்த நிலையில் இது தொடர்பான வழக்கை விசாரணை செய்த கொழும்பு மாவட்ட நீதிவான் கிஹான் பிலபிட்டிய. குறித்த வீட்டின் தற்போதைய உரிமையை க்ண்டறியுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் எஸ்.பி. திஸாநாயக்க கருத்து எதனையும் வெளியிடவில்லை

## கழிவு ஒயில் வீச்சு எம்.ஜி.ஆர்.சிலை தப்பியது

(திருநெல்வேலி)

கல்வியங்காடு செங்குந்தா சந்தை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் திலகம் எம்.ஜி.ஆரின் உருவச் சிலையின் அடித்தளத்தில் கழிவு ஒயில் வீசப்பட்டுள்ளது.எம்.ஜி.ஆரின் சிலை மீது ஒயில் படாமையினால் சிலை ஒயில் வீச்சிலிருந்து தப்பியுள்ளது.




சில விஷமிகளின் விஷமச் செயல் இது என எம்.ஜீ.ஆர் ஆதரவாளர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.எம்.ஜி.ஆர் என அழைக்கப்படும் கோப்பாய் தெற்கை சேர்ந்த இ.சுந்தரலிங்கம் என்பவரின் சொந்தச் செலவில் இந்திய சிற்பக் கலைஞர் புருஷோத்தமனால் சில மாதங்களுக்கு முன்னர் இச்சிலை உருவாக்கப்பட்டிருந்தது. சுமார் ஆறு அடி உயரமான இச்சிலையை முன்னாள் யாழ்.நகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா திறந்து வைத்திருந்தார்

அண்மையில் எம்.ஜி.ஆரின் பிறந்த நாளன்று இச்சிலைக்கு முன்பாக வைத்து வறுமைக் கோட்டுக்குட்பட்ட ஆண்களுக்கு சாரம் சேட் என்பனவும் பெண்களுக்கு சாறிகளும் யாழ். எம்.ஜி.ஆர்.இ.சுந்தரலிங்கத்தினால் வழங்கப்பட்டிருந்தன. அத்துடன் அவரது சிரார்த்த தினம் மற்றும் பண்டிகை விழாக்களின் போதும் யாழ். எம்.ஜி.ஆரினால் இச் சிலைக்கு முன்பாகப் பல நிகழ்வுகள் இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(137)

34. பலகை ஒன்றைத் துளையிடுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

1)  2)  3) 

35. கதவு செய்யப்பயன்படும் மரம் எது?
1) தென்னை 2) வேம்பு 3) முருங்கை

36. பெற்றோர், ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரைக் கொண்ட சங்கம் எது?
1) பழைய மாணவர் சங்கம் 2) பாடசாலை அபிவிருத்தி சங்கம் 3) பெற்றோர் அபிவிருத்தி சங்கம்

37. மழைவரும் முன் ஏற்படும் மாற்றம் எது?
1) ஈசல்கள் வெளிச்சத்தை நாடி பறத்தல் 2) நாய்கள் தொடர்ச்சியாக குரைத்தல்
3) தவளைகள் கத்துதல்

38. பூக்களை தேசப்படுத்தும் பிராணி எது?
1) வண்ணத்துப்பூச்சி 2) தேனீ 3) வண்டு

39. நாட்காட்டியில் விடுமுறையைக் காட்டும் நிறம் யாது?
1) சிவப்பு 2) நீலம் 3) கறுப்பு

40. சீருடை அணிந்து சேவை புரிவோர் யார்?
1) ஆசிரியர் 2) தாதி 3) கணக்காளர்

41. நீரிலும், நிலத்திலும் வாழக்கூடிய பிராணி எது?
1) இறால் 2) எலி 3) தவளை

42. இலங்கையில் உலக பிரசித்தி பெற்ற ஓவியங்கள் வரையப்பட்ட குன்று எது?
1) கதிர்காமம் 2) சீகிரியா 3) மஹிந்தலை

43. 
இவ் உபகரணத்தின் பெயர் யாது?
1) கைவில்லை 2) தொலைகாட்டி 3) வெப்பமானி

44. பௌத்தர்களின் வழிபாட்டிடம் எது?
1) தேவாலயம் 2) கோவில் 3) விகாரை


45. சோற்றில் உள்ள போசணைப் பதார்த்தம் யாது?
1) புரதம் 2) விற்றமின் 3) காபோவைதரேற்று

(07) வெற்றிடத்திற்குள் வரவேண்டிய விடையை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து எழுதுக

46. மீன் பிடிக்க பயன்படுத்தப்படும் உபகரணம் ................................ ஆகும்
47. டெங்கு நுளம்புகள் ................................ நீரில் முட்டையிடுகின்றன
48. மழைவீழ்ச்சியின் அளவை அறிந்து கொள்ள ................................ பயன்படும்
49. ................................ உயர்ந்த மரக்கிளையில் கூடுகட்டி வாழும்
50. ................................ இரவுவேளையில் நடமாடும் பிராணி ஆகும்
51. ................................ நீரின் மூலம் நோய்கள் பரவுகின்றன

| கொக்கு, தூய, அசுத்தமான, தூண்டில், ஆந்தை, மழைமானி |
|---|

(08) கீழே தரப்பட்ட இசைக்கருவிகளின் பெயர்களை எழுதுக

52.  ................................
53.  ................................
54.  ................................
55.  ................................





## தரம் - 3 பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - I
1 மணி 15 நிமி

# கல்வி முரசு



(01) மிகச்சரியான விடையின் கீழ் கோடிடுக

01. சமைக்காமல் பச்சையாக உண்ணக்கூடிய உணவு வகை எது?
1) சலாது 2) கத்தரி 3) பாகற்காய்

02. நீரினுள் பனிக்கட்டியைப்போட்டால் யாது நிகழும்?
1) மிதக்கும் 2) அமிழும் 3) கரையும்

03. அசுத்தமடைந்த நீரினால் பரவக்கூடிய நோய் எது?
1) நீரிழிவு 2) மலேரியா 3) மஞ்சட்காமாலை

04. நீருடன் நன்றாக கரையும் பொருள் எது?
1) கோதுமை 2) சுண்ணாம்பு 3) சீனி

05. விவசாயியின் நண்பன் என அழைக்கப்படும் பிராணி எது?
1) நத்தை 2) செண்பகம் 3) மண்புழு

06. முத்திரை வாங்குவதற்கு நாம் செல்ல வேண்டிய இடம்
1) வங்கி 2) தபாலகம் 3) நூலகம்

07. 
உருவில் காட்டப்பட்டுள்ள தாவரம் எது?
1) மஞ்சள்
2) கற்றாளை
3) துளசி

08. மனித இரத்தத்தை உறிஞ்சிக்குடிக்கும் பிராணிகள் எவை?
1) நுளம்பு,பேன் 2) குளவி,பாம்பு 3) உண்ணி,தேள்

09. கிணற்றில் இருந்து நீரை அள்ளுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
1) சாய்தளம் 2) துலா 3) பாரந்தூக்கி




10. 
இக்குறியீடு குறிப்பது
1) பாதசாரி கடவை முன்னால்
2) சிறுவர் கடவை முன்னால்
3) பாதுகாப்பான புகையிரத கடவை முன்னால்

11. வாகனங்களைத் திருப்பும் போது பயன்படுத்தப்படும் மின் விளக்கின் நிறம் என்ன?
1) மஞ்சள் 2) சிவப்பு 3) வெள்ளை

12. சர்வதேச விமானநிலையம் அமைந்துள்ள இடங்கள் எவை?
1) இரத்மலானை, சீனன்குடா 2) பியகம, குண்டசாலை 3) கட்டுநாயக்க, மத்தள



13. பேருந்தில் உள்ள சில்லுகளின் எண்ணிக்கை யாது?
1) 4 2) 6 3) 8

14. எரிபொருள் இன்றி இயங்கும் போக்குவரத்துச்சாதனம் எது?

1)  2)  3) 

15. இலங்கையில் அமைக்கப்பட்ட முதலாவது அதிவேக நெடுஞ்சாலை எது?
1) கொழும்பு - கண்டி 2) கொழும்பு - காலி 3) கொழும்பு - பதுளை

16. பலகைகளை அழுத்தமாக சீவுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

1)  2)  3) 

17. அயடீன் குறைபாட்டு நோய் எது?
1) மாலைக்கண் 2) கண்டமாலை 3) டெங்கு

18. குழந்தைப் பருவத்தில் பால் குடித்து வளரும் பறவை எது?
1) ஆந்தை 2) கழுகு 3) வெளவால்

19. மண்ணினுள் முட்டையிடும் பிராணி எது?
1) முதலை 2) பல்லி 3) வண்ணத்துப்பூச்சி

20. இரவில் மலரும் பூ
1) தாமரை 2) கொன்றை 3) கடுபுல்

21. ஒரு தடவையில் ஒரு குட்டியை மட்டும் ஈனும் பிராணி எது?
1) பன்றி 2) மாடு 3) எலி

22. ஒழுக்கமான மாணவனிடம் இருக்கவேண்டிய பண்பு
1) சண்டைபிடித்தல் 2) பிறருக்கு உதவுதல் 3) உண்மைபேசுதல்

23. எம்மை மகிழ்வடையச் செய்யும் சந்தர்ப்பம் எது?
1) பரீட்சையில் சித்தியடைதல் 2) நோய்வாய்ப்பட்டிருத்தல் 3) எம்மைக்கண்டித்தல்


24. இலங்கையின் தற்போதைய ஜனாதிபதி யார்?
1) ரணில் விக்கிரமசிங்க 2) மைத்திரிபால சேனநாயக்க 3) சந்திரிக்காகுமாரதுங்க

25. கப்பலில் பாரங்களைத்தூக்கப்பயன்படும் உபகரணம் எது?
1) பாரந்தூக்கி 2) நெம்புகோல் 3) மின்உயர்த்தி

(02) பின்வரும் கூற்றுக்குப்பொருத்தமான விடைகளுக்குரிய ஆங்கில எழுத்தை வெற்றுக்கூட்டினுள் எழுதுக (உதாரணம் தரப்பட்டுள்ளது)

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவர்களின் புனித நூல் | F | A - அரம் |
| 01. இலங்கையின் வரலாற்றைக் கூறும் நூல் | | B - அரிவாள் |
| 02. பௌத்தர்களின் புனித நூல் | | C - திரிபீடகம் |
| 03. கத்தியை தீட்ட பயன்படுத்தப்படும் உபகரணம் | | D - மகாவம்சம் |
| 04. கப்பலை நிறுத்தப்பயன்படுவது | | E - நங்கூரம் |
| 05. அறுவடை செய்ய பயன்படுத்தப்படும் உபகரணம் | | F - பைபிள் |

(03) பின்வரும் உருக்களின் பெயர்களைத் தெரிந்து எழுதுக

06.  07.  08.  09. 

.................... .................... .................... ....................

சுத்தியல், தூக்குத்துண்டு, மேசன்கரண்டி, குறடு




(04) சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எழுதுக

10. தேசியக்கொடி ஏற்றும் போது நாம் இலகுவாக நிற்க வேண்டும் ( )
11. குளவி தனது கொடுக்கினால் தாக்கும் . ( )
12. தூயநீருக்கு மணம், சுவை, நிறம் என்பன இல்லை ( )
13. இலங்கையின் மிக உயரமான நீர்வீழ்ச்சி டெவோன் ஆகும் ( )
14. கோரை கொடி வகைகளில் ஒன்றாகும் ( )
15. நதிகள் மலை உச்சியில் இருந்து ஊற்றெடுக்கின்றன ( )

(05) சுருக்கமான விடை தருக

16. மரப்பொந்தினுள் வாழும் பிராணி ஒன்றின் பெயரைத் தருக? ..............................
17. இலங்கைக்கு வடக்கே உள்ள நாடு எது? ..............................
18. மின்குமிழைக்கண்டு பிடித்தவர் யார்? ..............................
19.  இது எப்பிராணியின் தலைப்பகுதி? ..............................
20. தேசியகொடியில் தமிழர்களை குறிக்கும் நிறம் எது? ..............................
21. உலகில் சனத்தொகை கூடிய நாடு எது? ..............................
22. சந்திரன் முழுமையாக மறையும் நாளை எவ்வாறு அழைப்பார்கள்? ..............................
23. கிழங்குப்பயிர்களை உண்டு சேதப்படுத்தும் பிராணி எது? ..............................
24. இலங்கையின் தலைநகரம் அமைந்துள்ள மாவட்டம் எது? ..............................
25. இலங்கையில் மிருக்கக்காட்சிசாலை அமைந்துள்ள இடம் எது? ..............................

(06) மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக

26.  இவ்வுபகரணத்தை பயன்படுத்துபவர்
1) கொல்லன் 2) மீனவன் 3) விவசாயி

27. வேட்டையாடி உண்ணும் பிராணி எது?
1) வரிக்குதிரை 2) புலி 3) யானை




28. நீரை மிக விரைவாக உறிஞ்சிக் கொள்வது
1) களிமண் 2) ரெஜிபோம் 3) பலகைத்துண்டு

29. இரவுவேளையில் நடமாடும் பிராணி எது?
1) காகம் 2) வெளவால் 3) கிளி

30. இலங்கையின் மிகப்பெரிய தாவரவியல் பூங்கா அமைந்துள்ள இடம் எது?
1) பேராதனை 2) நுவரெலியா 3) தலவாக்கலை

31. கருங்கல் உடைப்பதற்கு பயன்படும் உபகரணம் எது?
1) தட்டைசுத்தியல் 2) சுவர்ச்சுத்தியல் 3) அலவாங்கு

32. பூமுனை திருகாணி செலுத்தியை காட்டும் உரு எது?

1)  2)  3) 

33. கடதாசியை துளையிடுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணம் எது?
1) துறப்பணம் 2) பிணைக்கருவி 3) பஞ்சர்

# பொதுத் தேர்தலை எதிர்கொள்வது எப்படி? மனம் திறந்து பேசுகிறார் மைத்திரி

(கொழும்பு)

**உலகின் எந்தவொரு நாட்டிலும் இல்லாத அளவிற்கு அதீத அதிகாரங்களைக் கொண்ட நிறைவேற்று ஜனாதிபதி முறைமையினால் கூட நாடாளுமன்றின் ஒத்துழைப்பு இன்றி சில விடங்களை செய்ய முடியாது என தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பதிலளித்த ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 127 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் எனவும், பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்வது தற்போதைக்கு சிரமமான விடயமாக அமையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலை நடத்தினால் 100 நாள் திட்டத்தை 150 நாட்களில் கூட செய்ய முடியாமல் போய்விடும் என அவர் தெரிவித்துள்ளார். புதிய நாடாளுமன்றம் எவ்வாறு அமையும் என்பது பற்றிய ஊகங்களை வெளியிட முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே சுதந்திரக் கட்சியின் முழு ஒத்துழைப்புடன் 100 நாள் திட்டத்தை அமுல்படுத்த வேண்டுமெனவும், 100 நாள் திட்டத்தை வீணடிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டிருக்காவிட்டால் பாரியளவில் வன்முறைகள் வெடித்திருக்க வாய்ப்பு உண்டு என அவர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை, சபாநாயகர் இல்லத்தில் வைத்து பத்து நிமிடங்கள் சந்தித்து பேசியதாகவும், கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள விருப்பமா என மகிந்த கேட்டதாகவும் தெரிவித்துள்ளார்

தாம் அதற்கு விருப்பம் தெரிவித்த தாகவும் தமது நிலைமை என்ன என அவர் வினவியதாகவும், அதற்கு மத்திய செயற்குழு கூடி தீர்மானிக்கும் என குறிப்பிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

பின்னர் தேனீர் அருந்தியதாகவும், அப்பம் சாப்பிடவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேர்தலின் பின்னர் கட்சி உறுப்பினர்கள் மீது நடாத்தப்பட்டு வரும் தாக்குதல்களை நிறுத்துமாறு மகிந்த தம்மிடம் கேட்டதாகவும் தெரிவித்துள்ளார்

47 ஆண்டுகள் ஐக்கிய தேசியக் கட்சியினர் தம்மை துன்புறுத்தியதாகவும் அவ்வாறான ஓர் நிலையில் தேசிய அரசாங்கமொன்றை உருவாக்கும் நோக்கிலேயே இவ்வாறு தேர்தலில் போட்டியிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

100 நாட்களுக்கு மட்டும் தேசிய அரசாங்கம் ஆட்சியில் இருக்காது எனவும், குறைந்தபட்சம் இரண்டு ஆண்டுகள் வரையிலேனும் ஆட்சி நடத்தினால் மக்களுக்கு பல்வேறு நன்மைகளை ஏற்படுத்த முடியும் எனவும அவர் தெரிவித்துள்ளார்.



அபிவிருத்தி அடைந்த நாடுகளில் தேர்தல்கள் நடாத்தப்படும் போது தேர்தல் நடாத்தப்பட்டதா என்பது குறித்து தெரியாது எனவும், மிகவும் அமைதியான முறையில் நடத்தப்படும் எனவும், வன்முறைகள் இருக்காது எனவும் அவர் தெரிவித்துள்ளார்

ஐக்கிய தேசியக் கட்சி அல்லது சுதந்திரக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு அமைய ஆட்சி நடத்தவில்லை எனவும், தேசிய அரசாங்க முறைமை ஒன்று பின்பற்றப்பட உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

தேர்தலில் எந்த மேடையில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது பற்றி பின்னர் சிந்திப்போம் என அவர் குறிப்பிட்டுள்ளார் ஐக்கிய தேசியக் கட்சியினரும், சுதந்திரக் கட்சியினரும் பொறுமையுடன் காத்திருக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அரசாங்கத்தை வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் மக்கள் மட்டும் நிராகரிக்கவில்லை எனவும், பாரியளவில் சிங்கள பௌத்த மக்களும் தமக்கு வாக்களித்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை மாற்றியமைக்க சிங்கள பௌத்தர்கள் அதிகளவில் வாக்களித்துள்ளனர் என அவர் தெரிவித்துள்ளார்.,

2005 ஆம் ஆண்டு 2010ம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதிக்கு காணப்பட்ட வாக்கு வங்கி இந்த தடவை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என தெரிவித்துள்ளார் தமக்கு உத்தியோகபூர்வ விமானங்கள் எதுவும் தேவையில்லை என தெரிவித்துள்ளார்.

தம்மை அதி மேதகு, கௌரமிக்க, சேர் என்றெல்லாம் அழைக்க வேண்டியதில்லை எனவும், தமது மனைவியை பாரியார் என அழைக்க வேண்டிய அவசியமில்லை என வும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து பொதுமக்களுக்கும் அரச அதி காரிகளுக்கும் விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அதீதமான அதிகாரங்கள் தேவையில்லை எனவும் அந்த அதிகாரங்கள் விரைவில் இரத்து செய்யப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மகிந்தவின் கடைசி 1 1/2 மாத காலப்பகுதியில் ஜனாதிபதி மாளிகைகளின் உணவு, குடிபான செலவு மட்டும் 157 மில்லியன் எனது நிகழ்வுகளுக்கு மாணவர்களை வைத்து ஊர்வலம் நடத்துதல், மற்றும் பாதையோரங்களில் வரவேற்புக்காக அவர்களை நிறுத்தி வைத்தல், சுதந்திர தினம் என்ற பெயரில் மாணவர்களை வரவேற்பு நிகழ்வில் பங்குபற்ற வைத்தல் என்பது வேண்டாம் எனவும் தெரிவித்தார்

ஜனாதிபதியாக. தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் முதல் தடவையாக தொலைக்காட்சி நேரடி செவ்வியொன்றில் பங்கேற்று ஜனாதிபதி இந்தக்கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

## யாழ். பல்கலை மாணவர்கள் ஐம்பது பேருக்கு மடிக்கணனிகள்

அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் ஐம்பது பேருக்கு மடிக்கணனிகளை வழங்கியது அத்துடன் அறநெறிப்பாடசாலைகளுக்கு அப்பியாசக் கொப்பிகளையும் வறுமைக் கோட்டுக்குட்பட்ட பெண்மணி ஒருவருக்கு வாழ்வாதார உதவியையும் வழங்கியது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 1.45 மணியளவில் நல்லூர் கோவில் வீதியில் அமையப் பெற்றுள்ள அகில இலங்கை இந்துமாமன்றக் கிளையில் இவ் வைபவம் இடம்பெற்றது.

அமெரிக்காவிலிருந்து வருகை தந்திருந்த ஹவாய் ஆதீன முதல்வர் போதிநாத வேலன் சுவாமிகளும் சண்முகநாத சுவாமிகளும், ரிஷிதொண்டு நாத சுவாமிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அனைவருக்கும் ஆசிகளை வழங்கினர் சுவாமிகள் பொன்னாடை போர்த்தப்பட்டு மாலை அணிவித்துக்கௌரவிக்கப்பட்டனர்.

யோதிநாதலேலன் சுவாமிகளும், சண்முகநாத சுவாமிகளும் இள வயதிலிருந்தே இந்து மதக் கோட்பாடுகளினால் ஈர்க்கப்பட்டுத் தமிழ்ப் பெயரை சூட்டிக் கொண்டு இந்து மதத்துறவிகளாக மாறிய ஆங்கிலேய இனத்தை சார்ந்தவர்களாவர். திருநீறு,சந்தணம், குங்குமம், பொட்டுடன் காவியுடை அணிந்து அவர்கள் காணப்பட்டனர்.

இந்நிகழ்வில் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன், உப தலைவர் சின்னத்துரை தனபாலா, தொழிலதிபர் எஸ்.பீசாமி, வைத்தியக் கலாநிதி சின்னத்துரை சோமசேகரம், தொழிலதிபர் வே. சிவசுந்தரம், கலாநிதி ஆறு திருமுருகன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மடிக்கணனிகள், அப்பியாசக் கொப்பிகள், வாழ்வாதார உதவி என்பவற்றை விருந்தினர்கள் உரியவர்களுக்கு வழங்கி வைத்தனர்.

மாணவர்கள், அறநெறிப்பாடசாலையினர் இந்துப் பெரியவர்கள் எனப்பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். (137)

## மெய்வல்லுநர் போட்டி

உயரப்புலம் மெதடிஸ்த மிஷன் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு எதிர்வரும் 6ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய முதல்வர் கு.திலீபன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வின் பிரதம விருத்தினராக வடமாகாணசபை விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் அ.அகிலதாசும், கௌரவ விருந்தினராக கல்விக் காருண்யன் லயன் ஈ.எஸ். பி நாகரத்தினமும் கலந்து கொள்ளவுள்ளனர். (137)

## புத்தர் சிலைகள் திருட்டு

பதுளை அந்தெனிய கங்காராம புராண ரஜமகா விகாரையில் இருந்து சுமார் 100 வருடங்கள் பழமையான, சமாதி நிலையில் காணப்படும் புத்தர் சிலை கொள்ளையிடப்பட்டுள்ளது.

அத்துடன் சிறிய, பித்தளையிலான புத்தர் சிலைகள் இரண்டும் திருடப்பட்டுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர். நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு இந்த திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பதுளை பொலிஸார் மேற்கொண்டுள்ளன



அகில இலங்கை இந்துமாமன்றம் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கு மடிக்கணனிகள் வழங்கிய நிகழ்வில் விருந்தினர்கள் மேடையில் உள்ளதையும் அமெரிக்கஹவாய் ஆதீன முதல்வர் போதிநாத வேலன் சுவாமிகள் உரைநிகழ்த்துவதையும் மடிக்கணனியை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் மாணவன் ஒருவனுக்கு வழங்குவதையும் காணலாம். (137)

# ஜப்பான் பத்திரிகையாளர் தலை துண்டித்து கொலை

## ஐ.எஸ்.ஐ.எஸ். மீண்டும் கொடூரம்



(டோக்கியோ)

தாங்கள் பிணைக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த ஜப்பான் நாட்டு பத்திரிகையாளர் கென்ஜி கோடோவை ஐ.எஸ்.ஐ.எஸ்., தீவிரவாதிகள் தலையை துண்டித்து கொலை செய்துள்ளனர். நேற்று முன்தினம் அவர்கள் வெளியிட்டுள்ள புதிய வீடியோவில் இதை அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தங்களின் நிபந்தனையை ஏற்று சிறையில் இருக்கும் தீவிரவாதியை விடுதலை செய்யாவிட்டால் இருவரையும் கொன்று விடுவதாக மிரட்டி வந்தனர்.

இதற்கு சர்வதேச அமைப்புக்கள் முன் வராததை அடுத்து ஜப்பான் நாட்டு பத்திரிகையாளர் கோடோவை தலையை துண்டித்து கொடூரமான முறையில் கொலை செய்துள்ளனர். கடந்த சில மாதங்களுக்கு முன் இதே போன்ற கொடூரமான முறையில் பிரிட்டன் பத்திரிகையாளர் ஒருவரும் ஐ.எஸ்.பயங்கரவாதிகளால் தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


தலை துண்டிக்கப்பட்டு இறந்த கோடோவின் உடலை படம்பிடித்து வீடியோவாக நேற்று முன்தினம் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதிகள் வெளியிட் டுள்ளனர்.

67 நிமிடங்கள் ஓடும் இந்த வீடியோவில், கோடோவின் உடலின் பின்னணியில் முகத்தை மறைத்து நிற்கும் தீவிரவாதி, ஜப்பானியர்களை குறி வைத்து மேலும் தாக்குதல்கள் நடாத்தபபடும் என எச்சரிததுள்ளான்.

இந்தக் கொலை குறித்து அமெரிக்க அதபர் ஒபாமா வெளியிட்டுள்ள கண்டன செய்தியில், இந்த கொடூர கொலை கண்டிக்கத்தக்கது. ஐ.எஸ்.ஐ.எஸ்.அமைப்பை முற்றிலுமாக அழிப்பதற்கு அமெரிக்கா தொடர்ந்து பாடுபடும் என தெரிவித்துள்ளார். பிரிட்டன் அரசும் இந்த கொலைக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

# ஆணாக பிறந்து இரு குழந்தைகளை பெற்றெடுத்தார் பிரித்தானிய பெண்

## மருத்துவத்துறையில் அதிசயம்



பிரித்தானியாவில் பிறப்பால் ஆணாக பிறந்த பெண் நபர் ஒருவர் அழகான இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்துள்ளது மருத்துவ துறையில் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிரித்தானியாவில் உள்ள பெட்.போர்ட( Bedford) நகரில் வசித்து வரும் ஹைலி ஹயனாஸ் (Hayley Haynes - 28) என்பவர் பிறப்பால் மரபணு ரீதியாக ஆண் ஆவார். இவரது, 19 வயதில் மருத்துவர்கள் மேற்கொண்ட சோதனையில், இவரால் கர்ப்பம் தரிக்க முடியாது என தெரிவித்ததால், மனமுடைந்து இவர், விரக்தியி உச்சத்திற்கே சென்றுள்ளார்.

இருப்பினும் நம்பிக்கையை இழக்காத Hayley Haynes பல தொடர் பரிசோதனைகளை மேற்கொண்டார். கடைசியாக பிரித்தானி யாவில் உள்ள Royal Derby மருத்துவமனையில் பரிசோதித்த போது. அவரது வயிற்றிற்குள் புதிதாக "மில்லி மீற்றர்" அளவுள்ள கர்ப்பபை வளர்வதை மருத்துவர்கள் கண்டுபிடித்தனர்.

இதனை அடுத்து அவர் சுமார் 10,500 பவுண்ஸ்களை சைப்ரஸில நடந்த IVF சிகிச்சைக்கு செலவிட்டார். இந்த சிகிச்சையினை அடுத்து சில மாதங்களுக்கு பின்னர் அவரை பரிசோதித்த மருத்து வர்கள், அவரது கர்ப்பபையிற்குள், இரண்டு குழந்தைகள் ஆரோக்கியமாக வளர்வதாக தெரிவித்தனர். தற்போது 28 வயதாகும் Hayley Haynes இரட்டை குழந்தைகளை பெற்றெடுத்து, அவர்களுக்கு Avery Darcey என பெயர் சூட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# பிரான்ஸ் தாக்குதல் வீடியோவை அனுப்பினர் தீவிரவாதிகள்



பிரான்ஸ் பல்பொருள் அங்காடியில் நடாத்தப்பட்ட தாக்குதலை வீடியோ பதிவு செய்த தீவிரவாதிகள் அதனை இ-மெயிலில் அனுப்ப முயற்சித்ததாக அமெரிக்க உளவுத்துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.


பாரிஸ் நகரில் 3 நாட்களாக தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் உலக நாடுகளையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது. இந்த நிலையில், கோஷர் பல்பொருள் அங்காடியில் முதல் 3 பேரை சுட்டுக்கொன்ற தீவிரவாதி, அதுவரை நடந்த தாக்குதல் காட்சிகளை அந்த கடையிலிருந்து கணினியைப் பயன்படுத்தி இ-மெயில் செய்ய முயற்சித்ததாக அமெரிக்க உளவுத் துறை அதிகாரி தெரிவித்துள்ளார்.

சுமார் 7 நிமிடங்களாக நடாத்தப்பட்ட இத்தாக்குதல் சம்பவத்தை பதிவு செய்த கோப்புகளை இ-மெயில் மூலம் யாருக்கோ அனுப்ப முயற்சித்தார்" என்று குறிப்பிட்டார்.

இந்தத் தகவலை வெளியிட்டுள்ள அமெரிக்க உளவுத் துறை அதிகாரி, வீடியோ பதிவை தனி நபர் அல்லது நன்கு தெரிந்த நபர்களுக்கு தான் அனுப்பி இருக்க வேண்டும். ஊடகங்களுக்கு அனுப்பியதாக நினைக்க முடியவில்லை.

இது தொடர்பாக பல்பொருள் அங்காடியில் உள்ள கணினிகளை ஆய்வு செய்துள்ளோம். இதிலிருந்து உரிய தகவல் கிடைக்கும் என எதிர்பார்க்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

# பக்கவாத நோயாளியின் உணர்வை கண்டறிய புதிய கருவி கண்டுபிடிப்பு



(லண்டன்)

புற்றுநோய் உட்படப் பல உயிர்க்கொல்லி நோய்கள் இந்த உலகில் இருந்தாலும் உயிரை மட்டும் விட்டு வைத்து, தினம் தினம் நரக வேதனை தரும் நோய் பக்கவாதம்.

சமீபத்தில் இந்த பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிய ஆய்வறிக்கை ஒன்றை க்ளேர் வில்சன் என்பவர் நியூ சயின்டிஸ்ட் அறிவியல் பத்திரிகையில் வெளியிட்டுள்ளார்.

இதில் பல ஆச்சர்யமான தகவல்கள் வெளியாகியுள்ளன.

லண்டனை சேர்ந்த ஆட்ரியன் ஓன் தலைமையிலான ஆய்வுக்குழு வும், ஆஸ்திரிய நிறுவனமான ஜிடெக் என்ற நிறுவனத்தின் ஆய்வுக் குழுவும் தனித்தனியாக மேற்கொண்ட ஆய்வுகளின் படி, நோயாளியின் கையில் "வைப்ரேட்டிங் பேட்" ஒன்றைக் கட்டுவதன் மூலம் அவர்களின் மூளையில் ஏற்படும் உணர்வுகளை அறிய முடியும் என்பது தெரிய வந்துள்ளது.

மேலும் இந்தக் கருவியை எங்கும் எளிதில் எடுத்துச் செல்லவும் முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

நோயாளிகள் உணர்வற்ற நிலையில் இருப்பதாக தவறான முடிவெடுக்காமல் தடுக்க இந்த புதிய கருவி உதவும்.

உண்மை என்னவென்றால் அவர்களால் தங்களை சுற்றி என்ன நடக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்கின்றனர் ஆய்வாளர்கள்.

# அமெரிக்க அதிபர் தேர்தல் ஜெப்புஷ் போட்டியிட வாய்ப்பு

அடுத்த ஆண்டு அமெரிக்காவில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலில் முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷின் இளைய மகனும், ஜோர்ஜ் டபிள்யு புஷின் தம்பியுமான ஜெப்புஷ் குடியரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.

குடியரசுக் கட்சி சார்பில் மிட் ராம்னி போட்டியிடக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலையில், அவர் போட்டியிடப் போவதில்லை என கடந்த வியாழக்கிழமை அறிவித்தார். இதைத் தொடர்ந்து, ஜெப் புஷ் (61) வேட்பாளராகும் வாய்ப்பு அதிகரித்துள்ளது.



எனினும், குடியரசுக் கட்சி சார்பில் ஏற்கெனவே சிலரின் பெயர்கள் அதிபர் தேர்தல் வேட பாளராகத் தெரிவிக்கப்பட்டு வருகிறது.

நியூஜெர்சி மாகாண ஆளுநராக உள்ள கிறிஸ் கிறிஸ்டீ அதிபர் தேர்தலில் போட்டியிட ஆர்வம் தெரிவித்திருக்கிறார்.

# தொழிற்சாலையில் தீ விபத்து வங்கதேசத்தில் 13 பேர் பலி

(டாக்கா)



வங்காளதேச தலைநகர் டாக்காவில் நசீம் பிளாஸ்டிக் தொழிற்சாலை உள்ளது.

அங்கு திடீரென தீப்பிடித்ததில் 13 பேர் தீயில் கருகி பலியானதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இத்தொழிற்சாலை பல அடுக்கு மாடிகளைக் கொண்டது. இந்த தொழிற்சாலையில் ஏராளமானவர்கள் பணி புரிந்து கொண்டிருந்தனர். அப்போது தொழிற்சாலை கரும்புகையுடன் தீப்பிடித்து எரிந்தது.

உடனே அங்கு வேலை பார்த்துக் கொண்டிருந்த ஊழியர்கள் அங்குமிங்கும் ஓடி வெளியேறினார்கள்.

புகை மூட்டத்தில் சிக்கி 13 பேர் பலியாகினர். அவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வங்காளதேசத்தில் தொழிற்சாலையில் இதுபோன்ற தீவிபத்துக்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன.

# வறியவர்களுக்கு வழங்கும் 'சரதியல்' வரவு–செலவுத் திட்டம்

## ரணில் விக்ரமசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

சரதியல் வரவு-செலவுத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டது என பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

செல்வந்தர்களிடமிருந்து பிடிங்கி ஏழைகளுக்கு வழங்கும் வரவு-செலவுத் திட்டத்தை இந்த அரசாங்கம் சமர்ப்பித்துள்ளது.

மகிந்த சிந்தனை என்ன செய்தது. ஏழைகளிடமிருந்து பிடிங்கி, செல்வந்தர்களுக்கு வழங்கியது.

கடந்த பத்து ஆண்டுகளாகவே இந்த நிலைமை நீடித்தது. இந்த அரசாங்கம் தொழிலாளர்களின் சம்பளங்களை உயர்த்தியுள்ளது.

பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன மேலும் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

வர்த்தகர்கள் இப்பொழுது சொல்கின்றார்கள் வரிச் சுமை அதிகம் என்று. எங்களுக்கு நிவாரணம் வழங்குமாறு வர்த்தகர்கள் கோருகின்றனர்.

ஒரு ஆண்டு காலம் பொறுமையுடன் இருக்குமாறு வர்த்தகர்களிடம் கோருகின்றோம்.

ஏழைகள் கடந்த பத்து ஆண்டுகளாக வரிச் சுமையை சுமந்தனர் என ரணில் விக்ரமசிங்க மாவனல்லையில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

சரதியல் என்ற நபர் செல்வந்தர்களிடம் கொள்ளையிட்டு அதனை அப்பாவி ஏழைகளுக்கு வழங்கியதாக இலங்கை வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# சட்டவிரோத மின்சாரம் ஏழாலையில் இருவர் கைது

(ஏழாலை)

யாழ்.ஏழாலைப் பகுதியில் சட்டவிரோத மின்சாரம் பெற்ற இரண்டு சந்தேகநபர்களை கடந்த சனிக்கிழமை இரவு கைது செய்ததாக சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்த இலங்கை மின்சார சபையின் புலனாய்வு அதிகாரிகளுடன் இணைந்து சுன்னாகம் பொலிஸார் சோதனை மேற்கொண்டபோது இருவரும் கைது செய்யப்பட்டனர்.

மின்மானியின் கம்பியை செருகி மின்மானியின் ஓட்டத்தைக் குறைத்த குற்றச்சாட்டில் ஒருவரும், திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற ஒருவரும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

இருவரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன், இருவருக்கும் எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக பொலிஸார் கூறினர்.

# ஆளணி பற்றாக்குறை காரணமாக பேருந்து சேவை விரிவாக்கலில் நெருக்கடி

(யாழ்ப்பாணம்)

மக்களின் கோரிக்கையை ஏற்று பேருந்து சேவைகளை மேற்கொள்ள பேருந்து சாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை காணப்படுவதாக யாழ். பிராந்திய செயலாற்றல் முகாமையாளர் ஏ.கேதீசன் தெரிவித்தார்.

மாதகல், கீரிமலை ஆகிய இடங்களில் இருந்து பண்டத்தரிப்பு சித்தன்கேணி, சங்கானை, மானிப்பாய் ஊடாக யாழ்ப்பாணத்துக்கு செல்லும் 787, 788 இலக்க சேவைகளை மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை தொடர்பாக கருத்து வெளியிடும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னய காலங்களில் பேருந்து பற்றாக்குறை காணப்பட்டிருந்த போதும் அப்பிரச்சினை தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது.

ஆனால் ஆளணிப்பற்றாக்குறை நிவர்த்திசெய்யப்படவில்லை. அதிலும் சாரதிகள் பற்றாக்குறை அதிகமாக காணப்படுகின்றது. அதன் காரணமாக 10 பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்படாமல் உள்ளன.

பல பகுதிகளுக்கு ஒரு பேருந்தே சேவையில் ஈடுபடுகின்றது. 2 அல்லது 3 சேவைகளை வழங்குவதற்கு பேருந்துகள் இருக்கின்ற போதிலும் சாரதிகள் பற்றாக்குறையால் சேவையை வழங்க முடியாதுள்ளது.

ஆளணிப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்தால் மட்டுமே அனைத்து இடங்களுக்கும் நிறைவான சேவையை வழங்க முடியும் என அவர் மேலும் கூறினார்.

# மருதடி விநாயகர் ஆலயம் 250 மில்லியன் ரூபாவில் நிர்மாணம்

## இன்று மஹா கும்பாபிஷேகம்

2004ஆம் ஆண்டிலிருந்து 2014ஆம் ஆண்டு இறுதி வரை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் கட்டடப் பணிகள் 250 மில்லியன் ரூபாய் செலவில் முன்னெடுக்கப்பட்டு, கருங்கல் ஆலயமாக மாற்றப்பட்டது. இந்நிலையில், இவ்வாலயத்தின் கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

ஆலய நிர்வாகத்தினர் கருத்து வெளியிடுகையில்,

மானிப்பாய், மருதடி விநாயகர் ஆலயத்தில் இன்று நடைபெறவுள்ள மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை நடைபெற்ற எண்ணெய்க் காப்பு செலுத்தும் நிகழ்வில் சுடிதாருடன் கலந்து கொண்ட பெண்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

சாரியுடன் வருகை தந்த பெண்களுக்கும் வேட்டியுடன் வருகை தந்த ஆண்களுக்கும் மாத்திரமே எண்ணெய் சாத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதனால் கிளிநொச்சி, முல்லைத்தீவு வவுனியா ஆகிய மாவட்டங்களிலிருந்து சென்ற பக்தர்கள், ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

பெண்கள் சாரியுடன் எண்ணெய்க் காப்பு நிகழ்வுக்கு வருகை தரவேண்டும் என்ற அறிவித்தலை ஏற்கனவே அறிவித்திருந்தோம். இதனால் ஏற்பட்ட மனஸ்தாபத்தை தவிர்ப்பதற்காக அவர்களுக்கு நேற்று எண்ணெய் காப்பு செலுத்துவதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

மருதடி விநாயகர் ஆலயம், 2004ஆம் ஆண்டு முற்றாக இடிக்கப்பட்டு முற்றுமுழுதாக கருங்கற்களால் நிர்மாணிக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டது. இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட கலைஞர்களின் உதவிகளுடன் நான்கு திசைகளிலும் கோபுரங்களுடன் இவ்வாலயப் பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

கடந்த இரு வருடங்களுக்கு முன்பு ஆலயத்தில் இடம்பெற்ற திருட்டு சம்பவத்தின் போது மூலவிக்கிரமாக விளங்கிய பிள்ளையார் சிலை சேதமாக்கப்பட்டதால், இந்தியாவில் வடிவமைக்கப்பட்ட பிள்ளையார் சிலையொன்று எடுத்துவரப்பட்டு தானிய வாசம் செய்யப்பட்டுள்ளது. இச்சிலை முறைப்படி கிரியைகள் செய்யப்பட்டு பிரதிஷ்டை செய்யப்படவுள்ளது எனத் தெரிவித்தார்.

# யாழிற்கும் வருவார் மோடி

எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கைக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொள்ளவிருக்கும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, யாழ்ப்பாணத்துக்கும் பயணம் மேற்கொள்வார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வரும் மார்ச் 13 ஆம் திகதி தொடக்கம் 15 ஆம் திகதி வரை இலங்கையில் பயணம் மேற்கொள்வர்ர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பயணத்துக்கான திட்டமிடல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகளில், இருநாட்டு அதிகாரிகளும் ஈடுபட்டுள்ளனர்.

இந்தப் பயணத்தின் போது, இலங்கையின் அரசியல் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ள இந்தியப் பிரதமர், யாழ்ப்பாணத்துக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளைப் பார்வையிடுவார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான ஒழுங்குகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதேவேளை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வரும் 15ஆம், 16 ஆம் திகதிகளில் புதுடில்லி பயணம் மேற்கொள்ளவுள்ளதாக இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

## ஈ.பி.டி.பி.யின்...

யத்தில் மேற்படி கலந்துரையாடல் நேற்றைய தினம் இடம்பெற்றது.

இதில் கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்டதும், எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ளதுமான அபிவிருத்தி செயற்திட்டங்கள் தொடர்பாகவும் விரிவாக கலந்துரையாடப்பட்ட அதேவேளை, முன்னெடுக்கப்படவுள்ள அரசியல் விடயங்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டது.

இதன்போது கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழ் அரசியற்...

ரைச் சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இதையடுத்து, நாளைய தினம் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களைச் சந்தித்துப் பேசவும் அவர் திட்டமிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, பல்வேறு விவகாரங்கள் குறித்துப் பேசுவதற்குத் தாம் திட்டமிட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

பல ஆண்டுகளாக எந்த விசாரணைகளுமின்றி சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 400 இற்கும் அதிக மான தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்வதற்கு உதவும்படி அவரிடம் கோரிக்கை விடுக்கவுள்ளோம்.

அரசியற் கைதிகளின் விடுதலை, மீள்குடியமர்வு ஆகிய விடயங்களை முன்னிறுத்தியே, மைத்திரிபால சிறிசேனவுக்கு ஜனாதிபதித் தேர்தலில் ஆதரவு அளித்திருந்தோம்.

எனவே, நிஷா பிஸ்வாலுடனான பேச்சுக்களில் இந்த இரண்டு விவகாரங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படும் என சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் நிஷா பிஸ்வால் யாழ்ப்பாணம் சென்று, வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனைச் சந்தித்துப் பேசவும் திட்டமிட்டுள்ளார்.

தனது இலங்கைப் பயணம் குறித்து டுவிட்டரில் எழுதியுள்ள நிஷா பிஸ்வால், புதிய அரசாங்கத்தின் தலைவர்களைச் சந்திக்க எதிர்பார்த்துள்ளதாகவும், இலங்கைக்கு எவ்வாறு அமெ ரிக்கா உதவமுடியும் என்றும், உறவுகளை வலுப்படுத்துவது குறித்தும் அவர்களுடன் கலந்துரையாடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## உள்நாட்டு...

னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இதேபோன்று நாட்டின் ஜனநாயகம், அபிவிருத்தியிலும் கணிசமான மாற்றங்களைக் காணமுடிகிறது.

இந்த மாற்றங்களுக்கு ஐ.நா. ஆதரவு வழங்கியிருந்தது. இந்த ஆதரவைத் தொடரவே ஐ.நா. விரும்புகின்றது.

இலங்கை அரசாங்கம் வகுத்துள்ள புதிய, பொறுப்புக் கூறும் உள்நாட்டுப் பொறிமுறை தொடர்பாக ஐ.நா. பொதுச் செயலர் கவனம் செலுத்தி வருகிறார்.

இதேபோன்று இலங்கையின் மனித உரிமைகள் விவகார முன்னேற்றங்களுக்கு மனித உரிமைகள் ஆணையாளரும் ஆதரவு வழங்குகிறார்.

எனினும் மனித உரிமைகள் விடயத்தில் இலங்கைக்கு சில சிக்கல்கள் உள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கும் ஐ.நா. மனித உரிமை கள் பேரவைக் கூட்டத்தொடரில் தனது விடயங்கள் தொடர்பாக இலங்கை கருத்துத் தெரிவிக்க வேண்டியிருக்கும்.

போருக்குப் பிந்திய நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதற்கு இலங்கைக்கு தொடர்ந்தும் உதவி வழங்கும்.

இலங்கை அரசாங்கம் புதிய உள்நாட்டுப் பொறிமுறையை முன்னெடுப்பது குறித்து ஐ.நா பொதுச்செயலர் அறிந்துள்ளார். அவர் இதனை உன்னிப்பாக ஆராய்வார்.

இலங்கை நம்பகத்தன்மை மிக்க உள்நாட்டு பொறிமுறை களை ஏற்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர்...

யிருந்ததனால் மன வேதனைக்குள்ளாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

எது எவ்வாறு இருப்பினும் சட்டத்தரணியாக முழுநேரம் செயற்பட வேண்டும் என்பதற்காகவே அவர் அமைச்சுப் பதவியில் இருந்து விலகியதாக பைசர் முஸ்தபா குறிப்பிட்டுள்ளார்.

## கடமைகளை...

புறப்படுவதற்கு முன்னதாக, போருக்குப் பிந்திய வடக்கின் பாதுகாப்புச் சூழல் குறித்து, அவருக்கு இராணுவ அதிகாரிகளால் விளக்கமளிக்கப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## புலிகளுடன்...

ளுடன் தொடர்பு பேணியதாக மகிந்த அரசாங்கம் குற்றம் சுமத்திய போதிலும், உண்மையில் அவர்களே புலிகளுடன் தொடர்புகளைப் பேணி வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கப்பல்கள், தங்கம் மற்றும் பணம் என்பனவற்றுக்கு என்ன நடந்தது என்பது பற்றி விசாரணை நடத்தப்பட வேண்டும்.

விடுதலைப் புலிகள் தொடர்பில் பகிர்ந்து கொள்ள சில ஆதாரங்கள் உண்டு என வடக்கு மக்கள் கூறி வருகின்றனர்.

2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் வட்க்கு மக்களை விடுதலைப் புலிகள் வாக்களிக்க விடாது தடுத்து நிறுத்தியமை குறித்தும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

ஐரோப்பாவில் புலிகளுக்கு எதிரான தடையை நீடிக்க கடந்த அரசாங்கம் காத்திரமான முனைப்புக்களை மேற்கொள்ளவில்லை.

புலிகளுக்கு எதிரான தடையை தொடர்ந்தும் அமுலில் வைத்திருக்க ஐரோப்பிய ஒன்றியத்திற்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

குமரன் பத்மநாதனை கடந்த அரசாங்கம் ஏன் இந்தியாவிடம் ஒப்படைக்கவில்லை எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

# தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு; தீவிர அக்கறையுடன் மோடி

## பா.ஜ.க. தேசிய செயலர் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வைக் காண்பதில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தீவிர அக்கறை கொண்டுள்ளதாக, பா.ஜ.க.வின் தேசிய செயலர் முரளிதர் ராவ் தெரிவித்துள்ளார்.

மதுரையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தீவிர அக்கறை காண்பித்து வருகிறார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு, 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைபடுத்தும் படி அவர், முன்னைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்



திடம் வலியுறுத்தி வந்தார்.

அதுபோலவே, தற்போதைய மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசாங்கத் திடமும், 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்துமாறு வலியுறுத்தி வருகிறார்.

மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வைக் காணும் முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டு வ்ருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

– சட்டக்கல்லூரி மாணவர்கள் –

# விரும்பிய மொழிகளில் பரீட்சைக்கு தோற்றலாம்

சட்டக்கல்லூரி மாணவர்கள் தாம் விரும்பிய மொழிகளில் பரீட்சைக்குத் தோற்ற வாய்ப்பளிக்கப்பட்டுள்ளதாக நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சட்டக்கல்லூரி பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுகிறது. எனவே மாணவர்கள் எந்தமொழியில் பரீட்சைக்குத்தோற்றலாம் என்பதனை அவர்கள் தீர்மானிக்கலாம் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

சட்டக்கல்லூரி மாணவர்கள் மற்றும் அதிபர் ஆகியோர் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடியதை அடுத்தே அமைசசர் மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற அவர்கள் விரும்பும் மொழியை தெரிவு செய்யலாமெனத் தெரிவித்தார்.

அத்துடன் சட்டக்கல்லூரிக்கான மேலதிக வசதிகளை தமது அமைச்சினூடாக செய்துதருவதாகவும் இதன்போது அமைச்சர் உறுதியளித்தார்.

# வாரியபொலவில் மேலும் 8 வாகனங்கள் மீட்பு

கடந்த தேர்தல் நடவடிக்கைகளின் போது முன்னைய அரசாங்கத்தினால் பயன்படுத்தப்பட்ட 8 வாகனங்களை நேற்று பொலிஸார் கண்டுபிடித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாரியபொல, கலகெதர பொருளாதார மத்திய நிலையத்திலிருந்தே இந்த வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த வாகனங்களில், கெப் ரக வாகனங்கள் 5, மோட்டார் வாகனம் 2, லொறி ஒன்றும் அடங்குவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த வாகனங்கள் முன்னாள் பொருளாதார அமைச்சுக்குச் சொந்தமானது என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்று அறிவித்துள்ளது.

# பேக்கரி தின்பண்டங்கள் இன்றுமுதல் விலை குறைப்பு



பேக்கரிகளில் தயாரிக்கப்படும் பாண் தவிர்ந்த ஏனைய பண்டங்களின் விலைகள் இன்று முதல் 1 ரூபாவால் குறைக்கப்படும் என்று பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, சிற்றுணடிச்சாலைகளிலும் இன்று முதல் விலைகள் குறைக்கப்படவுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் அறிவித்துள்ளனர். அதற்கமைய மதிய உணவுப் பொதி மற்றும் கொத்து ஒன்றின் விலை 10 ரூபாவினாலும் குறைக்கப்படுவதோடு, பிளேன் ரீ ஒன்றின் விலை 10 ரூபாவாகும். ரீ 5 ரூபாவினால் குறைக்கப்படவுள்ள அதேவேளை, அப்பத்தின் நிர்ணயவிலை 10 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

# பாண்விலை குறைப்பு சர்வதேசத்தின் சூழ்ச்சி

## என்கிறது தேசிய சுதந்திர முன்னணி

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக பாண் விலையை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தமை, சர்வதேச சூழ்ச்சியின் ஒரு பகுதி என தேசிய சுதந்திர முன்னணி தெரிவித்துள்ளது.

முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினர் பியசிறி விஜயநாயக்க, நேற்று கொழும்பில் இடம பெற்ற செய்தியாளர் சந்திப்பில் உரையாற்றிய போதே அவர் இந்தக் கருத்தினை வெளியிட்டார்.

கோதுமை மாவின் விலையை குறைத்ததற்கான பிரதிபலன் அமெரிக்க விவசாயிகளுக்கு கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் கோதுமை மாவினால் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொருட்களை உட்கொள்ள வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டது.

இது தவிர, அதனால் ஏற்படும் நோய்கள் குறித்தும் எச்சரித்தார்கள்.

கோதுமை மாவின் விலையை குறைக்கும் அதேவேளை, அரிசியின் விலையினை அதிகரிப்பதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அமெரிக்காவின் விவசாயிகள் நன்மையடையும் நிலையில், இலங்கை மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐ.தே.க.வில் இணைவதற்கு முயற்சித்தாரா கெஹலிய?



மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தில் அமைச்சரவைப் பேச்சாளராக இருந்த கெஹலிய ரம்புக்வெல, மீண்டும் ஐ.தே.க.வில் இணைந்து கொள்ள முயன்ற போதிலும், பிரதமர் ரணில் விக்ரமசிங்க அவரை ஏற்றுக் கொள்ள மறுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்தமாதம் 24ஆம் திகதி பிரதமர் செயலகத்தில் இருந்த பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம், தொலைபேசியில் பேசிய அவர், மீண்டும் தான் ஐ.தே.க.வில இணைந்து கொள்ள விரும்புவதாகத் தெரிவித்தார்.

ஆனால், அவரை ஏற்றுக் கொள்ள விரும்பாத ரணில் விக்ரமசிங்க, கண்டி மாவட்டத்தைச சேர்ந்த அமைச்சர் ஒருவர், ரம்புக்வெல திரும்பி வருவதை விரும்பவில்லை என்று நேரடியாகவே அவரிடம் கூறியுள்ளார்.

இதனால் ஐ.தே.க. அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்ளும் ரம்புக்வெலவின் முயற்சி தோல்வியில் முடிந்துள்ளதாக தெரிவிககப்படுகிறது.

# அமைச்சர்களின் எண்ணிக்கை 30 ஆக மட்டுப்படுத்தப்படும்

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை 30ஆக மட்டுப்படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதித்தேர்தலின் போது வழங்கிய வாக்குறுதியின் படி நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையில் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை திருத்தியமைக்கும் அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தை இம் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

19 ஆவது அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தின் கீழ் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல், சுயாதீன ஆணைக்குழுக்களை பலப்படுத்துதல் மற்றும் தேர்தல் முறையில் மாற்றத்தை கொண்டுவருதல் ஆகிய முக்கிய ஆலோசனைகளை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொள்ளப்படவுள்ளது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் திட்டத்தின் கீழ் பதவிக் காலத்தை 4 ஆண்டுகளாக குறைத்தல், ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு பொறுப்பு கூறல், ஜனாதிபதி நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துதல் போன்ற திருத்தங்கள் கொண்டு வரப்படவுள்ளதாக அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# ஆட்டோ கட்டணத்தை குறைக்காவிடின் நடவடிக்கை

## போக்குவரத்து அமைச்சர் தெரிவிப்பு

எரிபொருள் விலைக் குறைப்பின் பயன்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்க முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் முன்வராது விடின் அதற்குத் தேவையான நடவடிக்கைக்குச் செல்லவேண்டி வரும் என போக்குவரத்து அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, முச்சக்கரவண்டி சங்கங்கள் ஏற்றுக்கொண்ட பிரகாரம் விலைக்குறைப்பு இடம்பெற வேண்டும். ஒவ்வொரு சங்கமும் வித்தியாசமான கருத்தைக் கொண்டுள்ளனர். தேசிய ரீதியில் முச்சக்கர வண்டிக் கட்டண முறைமையொன்று இல்லாமையே இதற்குக் காரணம் எனவும் அமைச்சர் சிங்கள ஊடகமொன்றுக்கு நேற்று தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே, நடைபெற்ற பேச்சுவார்த்தையின் படி பஸ் கட்டணம் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். சிறுவர்கள் பலவந்த தடுப்பு நோர்வே பிரதமரின் கவனத்திற்கு

நோர்வே நாட்டில் வதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்களின் நிலைமை, அவர்களது குழந்தைகள் மற்றும் ஏனைய நாட்டவர்களின் குழந்தைகள் நோர்வே காப்பகங்களால் பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து நோர்வே பிரதமரின் கவனத் திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டில் வதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நான்கு குடும்பங்களின் நிலைமை, அவர்களது குழந்தைகள் மற்றும் ஏனைய நாட்டவர்களின் குழந்தைகள் நோர்வே காப்பகங்களால பலவந்தமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறித்து நோர்வே பிரதமரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

நோர்வே நாட்டில் வதியும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எரிக் ஜோசப் டிலாந்தினி ஜோசப் தம்பதியரின் மூன்று குழந்தைகளான எரிக் ஜோசப் இனுக்கா (வயது-14),எரிக்ஜோசப் மெலோனி (வயது-10), எரிக்ஜோசப் மெரியோ (வயது - 7) ஆகியோரும், தாமோதரம்பிள்ளை ஆனந்தராசா, ரஜித்தா ஆனந்தராசா ஆகிய தம்பதியரின் குழந்தைகளான ஆனந்தராசா தமிழினி (வயது - 14), ஆனந்தராசா ஈழவன் (வயது - 12), ஆனந்தராசா யாழினி (வயது - 9), ஆனந்தராசா தமிழ்ப்பிரியன் (வயது - 7) ஆகியோரும், மகாத்மா ஜோதி செல்லத்துரை, சித்ரா தேவி செல்லத்துரை தம்பதியரின் மூன்று குழந்தைகளான மகாத்மாஜோதி நபீலா (வயது - 7), மகாத்மாஜோதி நிலோத் (வயது - 5), மகாத்மாஜோதி நிமித்தா (வயது - 4) ஆகியோரும், வசந்தகுமாரன், சியாமலா வசந்தகுமாரன் தம்பதியரின் குழந்தைகளான வசந்குமாரன் சியாந்தன் (வயது 12), வசந்த குமாரன் சண்டஷியா (வயது - 9) ஆகியோருமாக மொத்தமாக 12 குழந்தைகள் நோர்வேயிலுள்ள சிறுவர் காப்பகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள், இரண்டு வருடங்களுக்கு மேலாக பலவந்தமாக தடுத்து வைத்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பான தகவல்கள் நோர்வே பிரதமரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

# புலமைப்பரிசிலுக்கான விண்ணப்பம் கோரல்

2015 - 2016 ஆம் ஆண்டுகளுக்கான ஆங்கில மொழி மூலமான இந்தியாவின் காந்தி புலமைப்பரிசில் கற்கை நெறிக்கு இலங்கை உயர்கல்வி அமைச்சினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

22 வயதிற்குட்பட்ட தகுதி வாய்ந்த இலங்கை மாணவர்களிடமிருந்து மேற்படி விண்ணப்பங்களை உயர்கல்வி அமைச்சு அதன் இணையத்தளத்தினூடாகக் கோரியுள்ளது.

எனவே விண்ணப்பங்களை www.mohe.gon.lk எனும் இணையத்தளத்தினூடாக பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2015 பெப்ரவரி 02 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.